விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 25 புதன்கிழமை (09.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 021

## இராணுவ கனரக வாகனத்துடன் முச்சக்கரவண்டி மோதி விபத்து

### மூவர் ஸ்தலத்திலேயே உயிரிழப்பு இயக்கச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பளை, இயக்கச்சி பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஸ்தலத்திலேயே மூவர் பலியாகியுள்ளனர்.

நேற்று மாலை பளை இயக்கச்சி பகுதியில் இராணுவத்தின் கனரக வாகனத்துடன் முச்சக்கர வண்டி நேருக்கு நேர் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. 23



## வடக்குக்கு தமிழர் ஆளுநராக வருவது வரவேற்கத்தக்கது

### நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் ஒருவரை வட மாகாணத்தின் ஆளுநராக நியமிப்பதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை நாம் பூர்த்திசெய்ய முடியும் என்று பொருள்கொள்ளல் ஆகாது என தெரிவித்த வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்,

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் அரசாங்கத்துக்கு உண்மையான அக்கறை இருக்குமானால், இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்க 23

## எலிக்காய்ச்சல் காரணமாக யாழ். பொலிஸார் மரணம்!

(யாழ்ப்பாணம்)

எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஒரு வாரத்தின் பின்னர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சிறுவர் பெண்கள் குற்றப்பிரிவில் கடமையாற்றிய அநுராதபுரத்தைச் சேர்ந்த மங்கள (வயது 50) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே மேற்படி உயிரிழந்தவராவார்.

ஒரு வாரத்துக்கு முன் 23

# வடக்கின் ஆளுநர் சம்பந்தனுடன் சந்திப்பு

## வட மாகாணத்தின் பிரச்சினைகள் தொடர்பில் ராகவன் கேட்டறிந்தார்

(கொழும்பு) வட மாகாணத்தின் புதிய ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போது வடக்கு பிரச்சினைகள் தொடர்பில் முதற்கட்டமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆளுநர் சம்பந்தனிடம் கேட்டறிந்து கொண்டார். (23-ம் பக்.)



## இளைஞர் அரசியலில் ஈடுபட ஏன் தடை ஏற்படுத்துகின்றீர்?

### சுமந்திரனிடம் உயர் நீதிமன்றம் கேள்வி

(யாழ்ப்பாணம்)

இளைஞர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு ஏன் தடையை ஏற்படுத்துகிறீர்கள். அவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குவது அவசியம் தானே என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனிடம் உயர் நீதிமன்றம் நேற்று கேள்வி 23

## இந்திய மீனவர்கள் நால்வர் நேற்றும் கடற்படையால் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 4 பேர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு படகில் வந்து நேற்று அதிகாலை எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 4 பேரை நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. 23



அன்பு வாசகர்களே!
நாளை உங்கள் வலம்புரியில் 2019 ஆம் ஆண்டுக்கான வர்ணக் கலண்டர் வெளியாகும்.
தவறாது கேட்டு வாங்குங்கள்.

## இராணுவம் மீதான போர்க்குற்ற விசாரணை உள்நாட்டில் இடம்பெறும்

### பாராளுமன்றில் அஜித் பி பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தினர் மீதான போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதாக இருந்தால் உள்நாட்டிலே இடம்பெறும். இராணுவத்தினரை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்போவதாக எதிர்க்கட்சிகளின் பரப்புரைகளில் எந்த உண்மையும் இல்லை. இவ்வாறு அமைச்சரவை தகுநிலையற்ற அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று பிரதி சபாநாயகர் தலைமையில் 23



## வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன்

### இன்று கடமைகளை பொறுப்பேற்பு

வடக்கு மாகாண புதிய ஆளுநராகப் பதவியேற்ற சுரேன் ராகவன் தனது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாக ஆளுநர் அலுவலகச் செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநராக சுரேன் ராக. 24

## மனித உரிமை மீறல்கள் போரில் சாதாரண விடயம்

### எதிர்க்கட்சி உறுப்பினர் அருந்திக



(கொழும்பு)

யுத்தத்தின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவது சாதாரண ஒரு விடயமாகும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான அருந்திக பெர்னாண்டோ நேற்று தெரிவித்தார். 23

## அரசியலமைப்பு வழிநடத்தல் குழு இன்று கூடுகிறது

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பு தொடர்பில் அமைக்கப்பட்ட வழிநடத்தல் குழு இன்று புதன்கிழமை கூடவுள்ளது.

அரசியலமைப்புச் சபை அமர்வுக்கான திகதியை எதிர்வரும் 11-ம் திகதி வெள்ளிக்கிழமை நிர்ணயம் செய்வதற்காக வழிநடத்தல் குழு இன்று கூடவுள்ளதாக 23

## இராணுவத்தின் வசமுள்ள 1099 ஏக்கர் காணிகள்

### ஜனவரி 19-ம் திகதி விடுவிப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் ஆயிரத்து 99 ஏக்கர் நிலப்பரப்பு எதிர்வரும் 19ஆம் திகதி சம்பந்தப்பட்ட திணைக்களங்களிடம் கையளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளை கடந்த டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்குமாறு இராணுவத் தளபதிக்கு ஜனாதிபதி பணித்திருந்தார். எனினும் அரசியல் நெருக்கடி நிலையையடுத்து காணிகளை விடுவிக்கும் நடவடிக்கை 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பழி தீர்த்துக்கொள்ளும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

## லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன குற்றச்சாட்டு

(கொழும்பு)

பழி தீர்த்துக் கொள்ளும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தீவிர அரசியலுக்குள் நுழைந்து சுதந்திர கட்சியினை கைப்பற்ற சூழ்ச்சிகளை மேற்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொதுஜன பெரமுன முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு வலு சேர்க்கவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாத்து தனது அரசியல் பிரவேசத்தை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்வதே இவரது நோக்கம்.

ஆகவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசியலுக்குள் பிரவேசிப்பது எவ்வித தடைகளையும் எமக்கு ஏற்படுத்தாது. அவரே விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினை பாதுகாப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு அக்கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக செயற்பட்டவர்களுடனே இன்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நல்லுறவை பேணி வருகின்றார்.

இது சுதந்திர கட்சியின் கொள்கையினை அவமதிப்பதாகவே காணப்படும். ஆகவே இவர் எத்தரப்பினருடனும் கூட்டணியமைத்துக் கொள்ளலாம்.

அதனால் எங்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாது. தற்போது முன்னெடுக்கின்ற தவறான அரசியல் ரீதியிலான தீர்மானங்கள் எதிர்காலத்தில் இவருக்கே பாதிப்பினை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-3)


## மணமகள் தேவை

87, உத்தரம் 3, 1 செவ்வாய் லண்டன் சிற்றிசன் மணமகனிற்கு மணமகள் உடன் தேவை.

துர்க்கா திருமண சேவை

077 818 5978 /

075 011 1122

(6992)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

பகுதிநேரமாகப் பணியாற்றக் கூடிய 40-60 வயதிற்குட்பட்ட பணிப்பெண் தேவை.

சுண்டுக்குளி பகுதியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 077 375 4490, 077 220 2769

(C-5085)

## பணிப்பெண் தேவை

முல்லைத்தீவில் வயதான அம்மா வசிக்கும் வீட்டில் தங்கி நின்று அவரை பராமரித்துக்கொள்ள நற்குணமுள்ள பணிப்பெண் தேவை.

உணவு, தங்குமிட வசதி இலவசம். சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 071 482 0347

(C-5086)

## வேலைவாய்ப்பு



நீங்கள் தொழில் தேடுபவரா?

O/L படித்தவர்களா?

யாழ் நகரில் இயங்கி வரும் DNMC தனியார் நிறுவனம் எதிர்காலத்தை வெற்றி கொள்ள நிரந்தர தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றன. 18 – 35 வயதிற்குட்பட்டோரும் வெளிமாவட்டத்தினரும் இணைந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 076 459 8925

(6991)

## பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

காலம் :- 12.01.2019ஆம் திகதி மாலை 2.00 மணி

இடம் :- யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை

பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

த.சுகிர்தராஜ்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யா/உடுவில் முருகமூர்த்தி
வித்தியாசாலை
075 043 8052

க.ஸ்ரீஸ்கந்தராசா
தலைவர் (அதிபர்) பழைய
மாணவர் சங்கம்
யா/உடுவில் முருகமூர்த்தி
வித்தியாசாலை
077 416 0669

(6988)

## பனை அபிவிருத்திச் சபை

தேசியகொள்கைகள், பொருளாதாரவிவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி,தொழிற்பயிற்சி,திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு

### பனைமரபொருட்கள் உருவாக்கும் பயிற்சி

மேற்படி பயிற்சி சரசாலை பனைமர பொருள் உருவாக்கல் தொழிற்சாலையில் நடைபெற உள்ளது.

01 பயிற்சிக்காலம் : 03 மாதங்கள்

02 பயிலுனர் ஊக்குவிப்புத் தொகை :- ரூபாய் 5000/- (மாதாந்தம்)

இப் பயிற்சிநெறியில் இணைந்து பயிற்சிபெற விரும்பும் ஆண்கள் தமது சுயவிபரத்தினை 25.01.2019ஆம் திகதிக்கு முன்பாக கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறியத்தருகின்றோம்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலக கட்டிடம்,
1ம் மாடி, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(C-5083)


# தெரிவுக்குழுவுக்கு மேலும் ஐவரின் பெயர்கள் பரிந்துரை

(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு மேலும் ஐவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த குழுவில் அமைச்சர்களான ஜோன் அமரதுங்க, காமினி ஜயவிக்கிரம பெரேரா, சஜித் பிரேமதாச, தலதா அத்துகோரள மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

சபாநாயகர் தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக் குழுவில் தற்போது 17 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

ஏற்கனவே பாராளுமன்ற தெரிவுக் குழுவில், ஐக்கிய தேசிய முன்னணி சார்பில், லக்ஷ்மன் கிரியெல்ல, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், மனோ கணேசன், பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி நிமல் சிறிபால டி சில்வா, தினேஷ் குணவர்தன, மஹிந்த சமரசிங்க, எஸ் பி திசாநாயக்க, விமல் வீரவன்ச ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும், மக்கள் விடுதலை முன்னணி சார்பில் விஜித ஹேரத் ஆகியோரும் அங்கத்துவம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து ஆரம்ப பாடசாலையின் அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் அனைத்து மாணவர்களின் பெற்றோர்களையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலையின் அதிபர் என்.மகேந்திரராஜா கேட்டுள்ளார். (ம-3)

# லசந்த விக்கிரமவின் கொலையுடன் கோத்தபாயவுக்கு தொடர்புள்ளது

## ரஞ்சன் ராமநாயக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்த சம்பவத்துடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கே நேரடியான தொடர்பு இருப்பதாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட்டு நேற்றுடன் 10 ஆண்டு நிறைவு பெற்றுள்ளதுடன் அவரது 10 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பொரளை கனத்தை மயானத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே ரஞ்சன் ராமநாயக்க இதனை கூறியுள்ளார்.

லசந்த விக்ரமதுங்கவின் கொலைக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் பொறுப்புக் கூற வேண்டும் என்பதை நாட்டு மக்களின் பெரும்பான்மையானோர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

லசந்த விக்ரமதுங்க, கோத்தபாய ராஜபக்ஷவை விமர்சித்து வந்தவர். அத்துடன் சர்வதேச ஊடகம் ஒன்று லசந்தவின் கொலை தொடர்பாக கோத்தபாயவிடம் கேள்வி எழுப்பிய போது, யார் லசந்த என்ற அலட்சிய போக்கில் பதிலளித்தார்.

மிக் விமான கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான செய்திகளை வெளியிட்டதால், லசந்த விக்ரமதுங்கவிடம் இழப்பீடு கோரி கோத்தபாய ராஜபக்ஷ வழக்கொன்றையும் தொடர்ந்திருந்தார் எனவும் ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# அரசியலமைப்பு அறிக்கை வெகுவிரைவில் சமர்ப்பிக்கப்படும்

## சுமந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தொடர்பிலான விசேட நிபுணர்களின் வரைபு அறிக்கையை வெகு விரைவில் அரசியலமைப்பு வழி நடத்தல் குழுவில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் 10 வருடங்கள் பூர்த்தியாகின்றன்.

அதனை முன்னிட்டு பொரளை பொது மயானத் தில் நேற்றுக் காலை இடம்பெற்ற நினைவஞ்சலி நிகழ்வில் அவர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அரசியலமைப்பு தொடர்பிலான நிபுணர்களின் அறிக்கை கடந்த வருடம் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி அரசமைப்புச் சபையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்கிடையில்தான் நாட்டில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.

புதிய அரசியலமைப்புக்கான வரைபு இன்னும் தயாரிக்கவில்லை. ஆனால், வரைபை போன்ற நிபுணர்களின் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை வெகுவிரைவில் நாம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். எதிர்க்கட்சிகள் எதிர்ப்புக்களை வெளியிடுவதற்காக நாம் எமது செயற்பாட்டை ஒருபோதும் நிறுத்தி விட மாட்டோமென கூறினார். (ம-3)

# இனவாதத்தை பரப்பாமல் ஐக்கியமாக செயற்படவேண்டும்

## ரவி கருணாநாயக்க வேண்டுகோள்



(கொழும்பு)

இனவாதத்தை பரப்பாமல் நாட்டில் உள்ள அனைவரும் ஐக்கியமாக செயற்படவேண்டும் என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் 10 வருடங்கள் பூர்த்தியாகின. அதனை முன்னிட்டு பொரளை பொது மயானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற நினைவஞ்சலி நிகழ்வில் அவர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தை ஒரு தரப்பினரின் தேவைக்கு மட்டும் கொண்டுசெல்ல முடியாது. நாம் சாதாரண மக்கள் தொடர்பில் சிந்தித்தே செயற்படவேண்டும். சுதந்திரம் அடைந்தும் இன்று முழுமையான சுதந்திரம் நாட்டில் இருக்கிறதா என்பதை சிந்திக்க வேண்டும். பிரச்சினைகளைத் தீர்க்கவே நாம் முற்பட வேண்டும்.

எனவே, இந்த விடயத்தில் தேவையான இனவாதத்தை பரப்பாமல் அனைவரும் ஐக்கியமாக செயற்படவேண்டும். நாட்டுக்கு தற்போது புதிய அரசியலமைப்பொன்று அவசியமாகும். இது அனைவருக்கும் தேவையான ஒன்றாகும்.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தே ஆகவேண்டும். இந்த அரசியலமைப்பினால் தான் நாட்டில் இவ்வளவு பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன.

இதனை மாற்ற வேண்டும். இவற்றை இனவாத மாக கருதக் கூடாது என கூறினார். (ம-3)

# லசந்த கொலையை மூடிமறைக்க நான்கு அப்பாவிகள் படுகொலை

## சகோதரர் லால் அதிர்ச்சித் தகவல்



(பொரளை)

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையை மூடிமறைப்பதற்காக நான்கு அப்பாவிகள் இதுவரை படுகொலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள அவரின் சகோதரர் லால் விக்கிரமதுங்க நீதிக்கான தங்களின் போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்துள்ளார்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு பத்து வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில்பொரளை கனத்தையில் நேற்று இடம்பெற்ற நினைவஞ்சலி நிகழ்வில் லசந்தவின் சகோதரர் லால் விக்கிரமதுங்கவின் செய்தியை அவரது மகள் வாசித்துள்ளார்.

அந்தச் செய்தியிலேயே லால் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒரு தசாப்தகாலம் என்பது துயரமடைவதற்கான நீண்ட காலம்,கொலை குறித்த விசாரணைகளை பூர்த்தி செய்வதற்கான நீண்ட காலம் என அவர் தெரிவித்துள்ளார்.

இது கவலைக்குரிய விடயமாகயிருந்தாலும் இதுவே யதார்த்தமாகவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

லசந்த நிச்சயமாக அர்த்தமற்ற விதத்தில் மரணிக்கவில்லை. அவர் உருவாக்கிய தளம் இலங்கை அரசியலில் மாற்றங்களை கொண்டு வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இன்று காணப்படும் சுதந்திரமான நீதித்துறை மற்றும் ஏனைய சுதந்திரமான ஆணைக் குழுக்கள் இதனைப் புலப்படுத்துகின்றன.

காட்டுமிராண்டித்தனமான தேசத்தை நாகரிக சமூகமாக மாற்றுவதற்கு மனித நெறிமுறைகள் அனைத்தையும் மீறியவர்களை நீதியின் முன் நிறுத்தும் கடமையில் ஈடுபட்டுள்ளவர்களின் உறுதிப்பாடு மாத்திரமே ஒரேயொரு நடவடிக்கையாக அமைய முடியும் எனவும் லால் விக்கிரமதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனது கருத்தின் மீது உள்ள உறுதி காரணமாக தனது உயிரை பறிகொடுத்தது லசந்த விக்கிரமதுங்க மாத்திரமல்ல என லால் விக்கிரமதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இருள் சூழ்ந்த வரலாற்றின் போது லசந்தவுடன் வடக்கை சேர்ந்த பல பத்திரிகையாளர்களும் கொலை செய்யப்பட்டனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்த ராஜபக்ஷவே எதிர்க்கட்சித் தலைவர்

## பிரதி சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்வதாக பிரதி சபாநாயகர் பாராளுமன்றில் அறிவித்துள்ளார். 2019 ஆம் ஆண்டுக்கான முதலாவது பாராளுமன்ற அமர்வு நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் தலைமையில் ஆரம்பமாகியது.

பாராளுமன்ற அமர்வின் போது எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்து இறுதித் தீர்மானம் அறிவிக்கப்பட்ட நிலையில், மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்வதாக பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி அறிவித்தார்.



எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழுவொன்றை நியமிக்க முடியாதெனவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மகிந்த ராஜபக்ஷவே எதிர்க்கட்சித் தலைவரெனவும் பிரதி சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று பாராளுமன்ற அமர்வில் எதிர்க்கட்சிகளுக்கான நிதியொதுக்கீடுகள் குறித்தும் ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# கருணா-யோகேஸ்வரன் வீதியில் கருத்து மோதல்

(செங்கலடி)

அண்மையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றம் தமிழ் மக்களுக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும், அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய காரணம்என்றும்கருணா என அழைக்கப்படும் முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தை உறுகாம நீர்ப்பாசன திட்டத்திலிருந்து பிரிப்பதற்கு எடுத்துவரும் முயற்சியைக் கைவிடுமாறு கோரி விவசாயிகளால் செங்கலடி நகரில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர்





மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று அமைச்சர்களாக இருப்பவர்கள் அனைவரும் முஸ்லிம்கள், ஆளுநராக இருப்பவரும் முஸ்லிம். இதற்கு முழுமையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தான்குற்றம்சாட்ட வேண்டும்.

இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் வெளிப்படையான காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தை குழிதோண்டிப் புதைத்து விட்டு இன்று அமைதியாக இருக்கின்றார்கள் என்றும் கருணா குற்றம் சாட்டினார்.

எனினும், இரா.சம்பந்தனுக்கு எதிராக பேச உமக்கு அருகதை இல்லை என் கருணாவுக்கு எதிராக போராட்டத்தில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன பதில் நான் அவர்களின் உறவுகளைக் கொண்டு உமக்கு எதிராகப் போராட்டம் நடத்து வேன் எனவும் அவர் இதன் போது எச்சரித்து பேசினார். (இ-7)

# ஐ.தே.க.- இ.தொ.க. சந்திப்பு



பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான நவீன் திஸாநாயக்க மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பின் போது காமினி திஸாநாயக்க மற்றும் சௌமியமூர்த்தி தொண்டமான் இருக்கும் புகைப்படமொன்று அமைச்சர் நவீன் திஸாநாயக்கவால் பாராளுமன்ற உறுப்பினர் ஆறுமுகம் தொண்டமானுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. (இ-7)

## 2018 இல் 50 ஆயிரத்து 163 பேர் பாதிப்பு

# டெங்கு நோயால் 56 பேர் மரணம்!

(கொழும்பு)

கடந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 56 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளனர்.

தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

அத்துடன் 50 ஆயிரத்து 163 பேர் கடந்த வருடம் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகளவில் கொழும்பு மாவட்டத்திலேயே டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அடுத்தபடியாக கம்பஹா மாவட்டத்திலும், தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்திலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகப்படியாக பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஹிஸ்புல்லாவின் இடத்திற்கு சாந்த பண்டார நியமனம்

## வர்த்தமானி வெளியானது

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா விலகியதையடுத்து அவரது வெற்றிடத்திற்கு சாந்த பண்டார நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கே சாந்த பண்டார நியமிக்கப்படுவதாக வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் ஆளுநராக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா நியமிக்கப்பட்டதன் பின்னர் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாக இருந்த நிலையில், நேற்று முன்தினம் தேர்தல் ஆணையம் அவரது இடத்திற்கு ஒருவரின் பெயரைப் பரிந்துரை செய்யுமாறு கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரச ஊடகங்களுக்குள் நிலவும் அமைதியின்மைக்கு அரசியல் அழுத்தங்களே காரணம்-அநுர சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திற்குள் தற்போது நிலவும் அமைதியின்மைக்கு அரசியல் ரீதியிலான மாற்றங்களும், அழுத்தங்களுமே காரணம் என, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை கூடிய புத்தாண்டின் முதலாவது நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஊடகத் துறையில் பாரிய செயற்பாட்டை முன்னெடுத்துவரும் சுயாதீன தொலைக்காட்சிக்குள் தற்போது அமைதியின்மை நிலவி வருகிறது.

நிறுவனத்தில் தற்போது அரசியல் ரீதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள், அழுத்தங்களே இதற்கு காரணம். இதனால் ஊழியர்கள் அச்சமடைந்துள்ளனர். அரச தொலைக்காட்சிகள் கடந்த காலத்தில் தவறாக நடத்தப்பட்டதால் பாரிய நட்டம் ஏற்பட்டது.

ஆட்சி மாற்றத்துடன் ஊழியர் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் ஊழியர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

பிரதி பொது முகாமையாளர் சேர்ப்பில் அங்கு உள்ளவர்களை புறந்தள்ளி, அரசியல் ரீதியில் பிரதி பொது முகாமையாளர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

உள்ளக பதவிக்கு வெளியார் தலையிடுவது நல்லதல்ல. அனைத்துப் பதவிகளுக்கும் முறையான ரீதியில் ஆட்சேர்ப்பு இடம்பெற வேண்டும்" என அநுர தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலில் கோத்தா போட்டியிடுவார்

## டிலான் தகவல்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அல்லது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராகக் போட்டியிடுவர் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தைத் தொடர்ந்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு



தெரிவித்தார்.

மேலும், தேர்தலொன்றின் மூலம் அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தயாராகவிருப்பதாகவும், முதல் வாய்ப்பிலேயே அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
11 - 08 - 1936



இறைவன் அடியில்
20 - 12 - 2017

யாழ்.காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கனடா Montreal ஐ வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் முருகேசு பரிபூரணம்

ஈரவிழியோடு ஓராண்டு சென்றாலும்
மாறாது எம்துயர்
துடுப்புக்கள் இல்லாத தோணிகள்போல்
தவிக்கின்றோம் உம்பிரிவால்
நிஜமாய்கண்ட உம்மை
நிழற்படமாய் பார்க்கும்போது
நெஞ்சம் விம்முகிறது..
உம்மிடத்தை நிரப்பிடவே
அண்டம் எல்லாம் தேடிவிட்டோம்
உமக்கிணையாய் யாருமில்லை..

எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
துளிகூட அழியாது உம்நினைவு..
அளவற்ற உம் அன்பிற்காய்
அலைகிறது எங்கள் மனம்.:
மறுபடியும் உங்கள் வருகைக்காய்
காத்திருப்போம் இவ்வுலகில்...

என்றும் உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்
வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

(6993)

# காற்றாலை மின் உற்பத்திக்கு தென்மராட்சி மக்கள் எதிர்ப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மறவன்புலவு ஜே/298 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மின்சார உற்பத்திக்கான காற்றாலை, கட்டடம் மற்றும் குறித்த செயற்பாட்டிற்கான வீதியினை அமைப்பதற்கு பிரதேச மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபை தொடக்கம் ஜனாதிபதி செயலகம் வரை தமது இயற்கை வளங்களைப் பாதுகாக்க உதவுமாறு நேரடியாகவும்,எழுத்து மூலமாகவும் கேட்டுக்கொண்டுள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

கடந்த 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுன்னாகம் வாயு சக்தி நிறுவனம் மறவன்புலவு பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பொருட்டு அப்பகுதியில் சில காணிகளை பெறுமதியையும் விட அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. அவர்கள் கொள்வனவு செய்த காணிகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு உறுதி முடித்த காணி, தந்தை, தாயாருக்கு வெளிப்படுத்தல் உறுதி முடித்த காணி,அரசாங்க காணிக்கு வெளிப்படுத்தல் உறுதி முடித்து விற்பனை செய்யப்பட்ட காணி ஆகியன அடங்குவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து மறவன்புலவு மக்கள் காற்றாலை மின் உற்பத்திக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் தற்போது இவ் விடயம் பூதாகரமாக வெடித்து பொலிஸ் நிலையம், மனித உரிமை ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதி செயலகம் வரை சென்றுள்ளது.

மறவன்புலவு ஜே/298 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 300 இற்கும் மேற்பட்ட விவசாய மற்றும் மீனவக் குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் அவர்களின் குடியிருப்புப் பகுதியில் மக்களின் வளங்களைச் சுரண்டி காற்றாலை மின் உற்பத்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்திக்கான தனிப்பட்ட வீதி ஆகியன மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# ஈரான்-இலங்கை நட்புறவு திரைப்படவிழா யாழில்

(யாழ்ப்பாணம்)

ஈரான் கலாசார நிலையமும் யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் பிரிவும் இணைந்து நடத்தும் ஈரான் - இலங்கை நட்புறவுத் திரைப்பட விழா நாளை 10 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறும்.

ஈரான் இஸ்லாமியப் புரட்சியின் 40 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக இலங்கையிலுள்ள ஈரான் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இத்திரைப்பட விழாவில் பிற்பகல் 2 மணிக்கு "பொடிகாட்" (bodyguard) என்ற திரைப்படமும், மாலை 4.30 மணிக்கு "ட்ரக் 143" (track 143) என்ற திரைப்படமும் திரையிடப்படவுள்ளன. (இ-9)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

2019 ஆம் ஆண்டிற்கான பகிரங்க ஏல அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2019.02.01 ஆம் திகதி தொடக்கம் 2019.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|
| 1 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | |
| 2 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 250.00 |
| 3 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 250.00 |
| 4 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 250.00 |

01. காலம் - 16.01.2019 காலை 10.00 மணி
02. இடம் - தலைமை அலுவலகம்.

ஏலம் சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க.தர்ஷன், தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(c-5061)

08.01.2019


# அமைச்சர் ஹரீனுக்கு வரவேற்பு



(பதுளை)

தொலைத்தொடர்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெரனாண்டோ, மீண்டும் அமைச்சுப் பதவியை ஏற்றுள்ளதையடுத்து, அமைச்சரை வரவேற்கும் நிகழ்வு பதுளையில் இடம் பெற்றது. (இ-7)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சீனியன் சிவமூர்த்தி
(பிரதேசசபை உத்தியோகத்தர்)

மறைந்துவிட்ட உங்கள் உறவின்
நீங்காத நினைவுகள்
உதிர்ந்துவிட்ட உங்கள் நினைவின்
உலராத வாசனை இழந்த அன்பானவரின்
நீங்காத பொழுதுகள் இதயம் துடிக்கும் வரை
மாறாது நினைப்பு இயற்கையின் அழைப்பு
மீற முடியாத பயணம் சென்ற தூரமோ
மீள முடியாத பாதைகண்முன் உங்கள் விம்பம்
காலத்தை கடந்தும் கலையவில்லை
உன் நிழலை நிஜமாக்கி நிலைத்திருக்கும்

தோற்றம் 1962.03.15

மறைவு 2017.01.01

பிராமணன் தோட்டம்
கரவேட்டி மேற்கு,
கரவெட்டி.

(c-5044)

குடும்பத்தினர்.



## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

வெளிவாரிப் பரீட்சைகள்

வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)

1. முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2017
2. இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2017
3. மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2017

மேற்படி பரீட்சைகளினை 19.01.2019 (சனிக்கிழமை) தொடக்கம் 16.02.2019 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 14.01.2019 (திங்கட்கிழமை) தொடக்கம் 18.01.2019 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

(c-5062)

பதிவாளர்
08.01.2019


## இராசி பலன்

**மீனம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாக நேரிடலாம், பயணமொன்று ஏற்படலாம்.

**மேடம்:** கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர்.

**இடபம்:** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழிலில் அதிகபிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும்.

**மிதுனம்:** அரைகுறையாக இருந்த பணியை மீதியும் தொடர்வீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, சுணங்கிய காரியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கும்பம்:** இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம், விரயங்கள் கூடும், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் | இராசி பலன் | | ராகு |
| கேது சந் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ஆயிலியம்<br>நண்பகல் 12.02 மணிக்கு<br>கும்பம்-சந் | | |
| சூரி, புத, சனி | குரு, சுக் | | |

09.01.2019

மார்கழி 25, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு

திருவாதிரை பிற்பகல் 1.38 மணிவரை

அவிட்டம் பின்னிரவு 1.49 மணிவரை

சுபநேரம் 5.02-6.32 மணிவரை

இராகுகாலம் 12.32-2.02 மணிவரை

வளவன்

**கடகம்:** கவலைகள் தீர கணபதியை வழிபடவேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**தனுசு:** ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய காரியம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பணத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், உறவினர் வருகையுண்டு, புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், நிதிநிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

# வைத்திய கலாநிதி ரகுபதி ஒரு தனிமனித சரித்திரம்



"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்பது தெய்வப்புலவர் வாக்கு. இந்தப் பொய்யா மொழிக்கு இலக்கணமாக வாழ்ந்து எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்ற வரே வைத்திய நிபுணர் அம்பலவாணர் ரகுபதி.

அப்பழுக்கற்ற உள்ள மும், அசாத்திய மனவலி மையும், அன்பும் உடைய அந்த மாமனிதன் ஒருநடுத் தரக் குடும்பத்தில் இணுவி லம்பதியில் அவதரித்தான்.

"எண்ணிய எண்ணி யாங்கு எய்து எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்" என்ற வாக்குக்கு அமைய அவரது மனவலிமை அவரது திறமைகளை விட மிக அசாத்தியமாகத் தென்பட்டது. சக வைத்தியர்கள் அமரர் ரகுபதியினது விடாமுயற்சியையும் மனவலிமையையும் கண்டு வியந்ததுண்டு.

வைத்திய நிபுணர் என்ற தகைமையைப் பெற்று ஒரு சில ஆண்டுகளே சேவையாற்ற முடிந்தாலும் ஒரு குறுகிய காலத்துள் ஒரு மருத்துவராக எவ்வளவு சேவையாற்ற முடியும் என்பதற்கு அமரர்.ரகுபதி ஒரு எடுத்துக்காட்டு. அமரர் ரகுபதியின் இழப்பை அறிந்து குடாநாடு அடைந்த சோகமும், இந்நாட்டின் மருத்துவ நிபுணர்களிடமிருந்து குவிந்த நயப்புரைகளும் அதற்குச் சான்று பகரும்.

ஒருவர் வாழும் காலம் குறுகியதாக இருந்தாலும் அவர் எந்த அளவுக்கு மக் களை நேசித்தார் என்பதும் தன்னை நாடியவரிடம் அன்பு செலுத்தினார் என்பதுமே மிக உன்னதமானவை.

இயேசுபிரான், சுவாமி விவேகானந்தர் போன்ற மகான்களின் குறுகிய வாழ்க்கை, சரித்திரமானதற்கு அதுவே காரணமெனலாம்.

அமரர்.அம்பலவாணர் ரகுபதி தனது அயராத முய ற்சியினால் தன் MBBS பட்டப்படிப்பை முடித்து குறுகிய காலத்தில் மருத்துவத்தில் மேற்பட்டப்படிப்பை (MD) நிறைவு செய்தார். களுபோவில போதனா வைத்தியசாலையிலும், ராகம போதனா வைத்தியசாலையிலும் தன் மேற்படிப்பை மேற்கொண்ட போது சிரேஷ்ட வைத்திய பேராசிரியர்களின் நன்மதிப்பிற்கு ஆளானார். ராகம வைத் தியசாலையின்ஓ்மருத்துவ பேரா சிரியர் தனது நயப்புரையில் "மருத்துவ மேற்படிப்புக்காக தங்கள் அலகில் சேவையாற்றிய வைத்திய பட்டதாரிகளில் அதி சிறந்தவர்" என்று குறிப்பிட்டிருந்தார். அதற்குக் காரணம் அவர் இன.மத பேதமின்றி அந்த அலகில் சிகிச்சை பெற்ற நோயாளர்களுக்கு வழங்கிய சேவையே ஆகும். தனது மேற்படிப்புக் காக வெளிநாடு செல்லும் வரை அமரர்.ரகுபதி முல்லைத்தீவு மக்களுக்குவழங்கிய சேவையை அம்மக்கள் நன்கறிவர். அமரர்.ரகுபதி மருத்துவ சேவையுடன் தனது கல்வியையும் ஒரு சேர வளர்த்துக் கொண்டார்.

இந்தக்காலத்தில் அவர் இங்கிலாந்தின் றோயல் கல்லூரி பரீட்சையில் சித்தி பெற்று அதிலும் ஒரு அங்கத்தவராக தன்னை இணைத்துக்கொண்டார்.



தனது கட்டாய வெளிநாட் டுக் கல்வியை முடித்த அமரர். ரகுபதி தெல்லிப்பழை வைத்தியசாலையின் வைத்திய நிபுணராகப் பதவி ஏற்றுக் கொண்டார். அந்த வைத்தியசாலையில் நிலவிய ஆளணி, வளப் பற்றாக்குறைகளை கருதாமல் இரவு-பகலாக தன்னைத் தேடி வரும் நோயாளருக்காக சேவையாற்றினார்.

தெல்லிப்பழை வைத்திய சாலையில் முதன் முறையாக சிறுநீரக சுத்திகரிப்பு சிகிச்சையை (dialysis) தொடக்கி அதனை செவ்வனே நிறைவேற்றிய பெருமை அமரர். ரகுபதியினையே சாரும்.

தனது சொந்த மண்ணான இணுவில் வாழ் மக்களுக்கு அவர் ஆற்றிய சேவையை மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

அமரர்.அம்பலவாணர் ரகுபதி தனது குடும்பத்தின் மீது வைத்திருந்த பற்று அவரது இழப்புக்குப் பின்னர் பகிரப்பட்ட செய்திகளில் பெரிதாகப் பேசப்பட்டது. தனது குடும்பத்தை நேசிப்பவனால் மட்டுமே நோயாளியின் மன நிலையைக் கூடப் புரிந்து கொள்ள முடி யும் என்பதற்கும் இவரது வாழ்க்கை ஓ் எடுத்துக்காட்டு.

அமரர்.ரகுபதி தன்னலம் மறந்து, சில சமயங்களில் தன் தகைமையை யும் மறந்து நோயாளிகளுக்கு சேவையாற்றியது ண்டு. அதைக்கண்டு சக வைத்திய நிபுணர்கள் அதி சயித்ததுமுண்டு. இத்தன் னலமற்ற மனப்பாங்கே அவருக்கு உண்டான உடல் நலக் குறையை உதாசீனம் செய்து அந்த விலைமதிப் பற்ற இழப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்று சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

"எழுதிச் செல்லும்
விதியின் கை
எழுதி எழுதி
மேற்செல்லும்
தொழுது கெஞ்சி
நின்றாலும்
அதில் ஓர் எழுத்தும்
மாறாது"

என்பது ஒரு கிரேக்க பழமொழி. எது எவ்வாறாயினும் அமரர்.ரகுபதியின் அந்தக் குறுகிய அர்த்தமுள்ள வாழ்க்கை ஒரு தனி மனித சரித்திரம், அது என்றும் நவயுக வைத்தியர்களுக்கு ஓர் உதாரணம்.

அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல அந்த அம்பலவாணரின் கமல பாதங்களில் என்றும் இன்புற்றிருக்க பிரார்த்திப்போமாக.

பொது வைத்திய நிபுணர்கள் சார்பாக
**Dr.தி.குமணன்**
யாழ்.போதனா வைத்தியசாலை.

ரகுபதி...!
உன்
ஆரோகணித்த சாரீரத்தில்
அளவுக்கு மிஞ்சிய அன்பும்
மிடுக்கான நடைநடந்து
நீ கூட்டிச்சேர்த்த நட்பும்..
இல்லையென்று
சொல்லாமல்
மற்றோர் இடுக்கண்
களைந்தெறிந்த
இதமும்
இன்னும்.....
சொல்லிக்கொண்டே போகலாம்
வாழ்க்கையின் சூட்சுமங்களை
நீ....
வாழ்ந்து காட்டினாய்
நாம்தான்
கற்றுக் கொள்ளவேயில்லை.
சித்தம் கலங்க
எம்மை சிதறடித்து விட்டு...
சட்டென்று
உன் சத்தம் அடங்க
சமாதி ஆகிப்போனாய்...
நண்பனே...
நல்வாழ்வின் சூட்சுமங்களை
கற்றுக்கொள்ள
தவறி விட்ட
எமக்கு
வாழ்வின் அநித்தியத்தை
உந்தன்
மூச்சை நிறுத்தி
பேசிச் சென்றாயா...?!
சாவை தினமும்
சந்தித்து பேசி
எமனோடு போராடி
ஏராளம் பேரை
இம்மையில் வாழ வைத்து
உன்னை மட்டும்
அவனுக்கு
உவகையாய் கொடுத்து
மறுமையில் நுழைந்தாயோ...?
நீ...நிறைந்திருந்த
இடமெல்லாம்
வெறுமை நிறைந்திருக்க...
சுற்றி வீசும்
காற்றில்
உன் பேச்சின் மீதம்
இன்னும் இறைந்திருக்க...
நீ...
நின்று நடந்து
கதை பேசி
சிரித்த இடமெல்லாம்
உன் சிரிப்பு படர்ந்திருக்க...
உன்னை மட்டும்
காணவில்லை...!
இருந்தாலும் நீ...
வருடங்கள் கடந்தும்
வாழ்ந்து கொள்வாய்
நினைவுகளாய்
என்றென்றும்...
எம் நெஞ்சங்களில்
நிறைந்து...!

பொது வைத்திய நிபுணர்கள்
சார்பாக
**Dr. ...ளாயினி ஜெகதீசன்**

## சிறந்த ஆக்கங்களுக்கு 25 ஆயிரம் கலைஞர்களை ஊக்குவிக்கத்திட்டம்

### கலாசாரத் திணைக்களம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் அவர்களின் சிறந்த ஆக்கங்களுக்கு ரூபா 25 ஆயிரம் வ்ழங்கவுள்ளதாக இலங்கைக் கலாசாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்போட்டிகள் அனைத்தும் திறந்த போட்டியாக நடத்தப்படுமெனவும்பங்கு கொள்ள விரும்பும் கலைஞர்கள் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரதேச செயலக அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறும் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-10)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் குமாரசாமி வீதி கண்ணியர் வைரவர் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணியளவில் சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5)

## ஆலயங்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையால் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இந்து அமைப்புக்கள் ஆலயங்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் இந்து சம யப் பேரவையில் இந்து சமயப் பேரவைச் செயலாளர் ஈசான ஸ்ரீ சிவசக்திகிரீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடல் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (இ-5)

## சாவகச்சேரி நீதிமன்றில் 11 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிமன்றில் இன்று புதன்கிழமை பாவனையாளர் அதிகார சபையின் சட்டதிட்டங்களை மீறிய சாவகச்சேரிவர்த்தகர்களுக்கு கெதிராக 11 வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளதாகபாவனையாளர் அதிகாரசபையின் வடமாகாண உதவிப் பணிப்பாளர்யவ்வர்சாவிக்தெரிவித்தார்.

இதேவேளைகடந்த வெள்ளிக்கிழமை பாவனையாளர் அதிகார சபையின் சட்ட திட்டங்களை மீறிய யாழ்.மாவட்ட வர்த்தகர்களுக்கெதிராக மல்லாகம் நீதிமன்றில் 8 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அவர்களிடமிருந்து தண்டப் பணமாக 31 ஆயிரத்து 500 ரூபாஅறவிடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.(இ-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திருமதி.சி.குலவீரசிங்கம்



எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி.சி.குலவீரசிங்கம் அவர்கள் கடந்த 14.12.2018 அன்று யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விருது வழங்கல் நிகழ்வில் சிறந்த ஆசிரியருக்கான "குரு பிரதீபா" விருதினை வட மாகாண ஆளுநர் திரு.றெஜினோல்ட் கூரே அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார். எனவே எமது சக ஆசிரியரான திருமதி. சி.குலவீரசிங்கம் அவர்கள் மென்மேலும் பல சிறப்புக்கள் பெற்று ஓய்வுக் காலத்திலும் சிறந்த சமூகப் பணிகளை ஆற்ற பெருவிருப்போடு வாழ்த்துகின்றோம்.

Best Wishes

(6975)

வாழ்த்துவோர்
ஆசிரியர் கழகம்
கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க பாடசாலை



## சேவை நலன் பாராட்டு

### உயர்திரு.கந்தையா சிவபாலன்

(SLTS-I, B.A, Dip.in Edu)



எமது பாடசாலையின் உப அதிபர் உயர்திரு.கந்தையாசிவபாலன் (SLTS-I, B.A, Dip.in Edu) ஆசிரியர் சேவையில் 30 வருடங்கள் ஆசிரியராக, அதிபராக, உப அதிபராக அர்ப்பணிப்பு மிக்க சேவையினை ஆற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் உப அதிபரை வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

(6975)

ஆசிரியர் நலன்பேண் சங்கம்
யா/அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலை


## சிறகடிக்கும் சிறார்கள் இசைத்தட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருச்செல்வம் தவரத்தினம் எழுதிய "புத்தாக்க சிறுவர் பாடல் நூல்" மற்றும் "சிறகடிக்கும் சிறார்கள்" பாடல் இசைத்தட்டு வெளியீட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ்.எப்.எம்.கட்டுப்பாட்டாளர் முரவீந்திரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி கலாநிதி பா.தனபாலன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வ்லய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ந.காண்டீபன், யாழ். மாநகர ஆணையாளர் கவிஞர் இ.த.ஜெயசீலன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.அளவெட்டி தெற்கு அ.மி.த.க பாடசாலை அதிபர் எம்.சீ.சுதாகரன், யாழ்.அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய உப அதிபர் செ.சுவைனஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)




YICSD COLLEGE
YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT

தொழில் கற்கைநெறிகளுக்கான பதிவுகள் ஆரம்பம்
18.01.2019 முன்னர் புதியவர்கள் இணையலாம்



**ஆங்கிலம்**
# Diploma in English



**கணனி**
# Diploma in Microsoft Office
# Diploma in Desktop Publishing
# Diploma in Information Technology



**அழகுக்கலை**
# Diploma in Beauty Culture & Hairdressing
# Higher Diploma in Beauty Culture & Hairdressing



**கேக் ஐசிங்**
# Diploma in Cake Making & Decorating
# Higher Diploma in Cake Making & Decorating



**தையல்**
# Diploma in Dress Making (Tailoring)
# Higher Diploma in Dress Making (Tailoring)



**ஆரி எம்பிராய்டரி**
# Diploma in Aari Embroidery
# Higher Diploma in Aari Embroidery

Special OFFER

50% OFF

* விபரங்களுக்கு நேரில் வருகைதரவும்

இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(கண்ணாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கு இடையில்)



"AMMANAI Saran Addainthal Athika Varamperalam"
SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU)
TEMPLE TRUST
5, CHAPEL ROAD, LONDON.W13 9AE.
TEL:0208-810 0835, 0208- 840 0485
Founded on 10.08.1991 Charity No:1014409
www.ammanealing.org Email:info@ammanealing.org

எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன. தங்கள் பற்றிய முழு விபரங்களுடன் மேல் உள்ள மின் அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**பணி நிலை**

ஆலய சிவாச்சாரியார்/உதவி சிவாச்சாரியார்
HINDU RELIGOUS WORKERS WITH NON-PASTORAL ROLE

**தகைமைகள்**

விண்ணப்பதாரி குருக்கள் பட்டம் பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும். இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணி செய்திருக்க வேண்டும்.

கோவில்களில் கொடியேற்றம் செய்திருக்க வேண்டும்.

உதவி சிவாச்சாரியார்

சிவாச்சாரியராகப் பணியாற்றுவதுடன், சுவாமி நெய்வேத்தியம், பூமாலை கட்டுதல், அலங்காரம் செய்தல் ஆகியவற்றில் தேர்ச்சி உடையவராக இருக்க வேண்டும்.

**கடமைகள்**

ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்

**வேதனம்**

பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகைமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிட்டு வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி :-09.02.2019

TEF:- SKTAT:3/2018

(6984)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பாரம்பரியமானதும் ஆரோக்கியமானதுமான பெண்களின் உணவு



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பொதுவாக இயற்கையாகவே பெண்களில் பருவகால மாற்றத்திற்கேற்ப அவர்களது உணவு விடயத்தில் மேலதிக கவனம் செலுத்தப்படல் அவசியமாகும். பெண்களின் பூப்பெய்தும் காலம், மாதவிடாய்க்காலம், கர்ப்பந்தரிக்கும் காலம், பாலூட்டும் காலம், மாதவிடாய் நிற்கும் காலம் போன்றவற்றை குறிப்பிடலாம்.

ஒரு பெண்பருவமடையும் போது அதை ஓர் இயல்பான நிகழ்ச்சியாக எடுத்துக்காட்டி அதன் மூலம் அவளின் மனநிலை தாக்கம் ஏற்படாதிருக்க பாரம்பரிய முறைகளில் இது ஓர் சடங்காக காணப்படுகின்றது.



பொதுவாக பூப்பெய்தும் காலங்களில் உழுந்து, பழைய நெல்லு, நல்லெண்ணெய் என்பவற்றால் ஆன பிட்டு, களி என்பன செய்யப்படுகின்றன.

உழுந்துக்கு இடுப்பு என்பினை பலப்படுத்தும், கர்ப்பாசயத்தை வலுப்படுத்தும் தன்மையும் காணப்படுகின்றது. மற்றும் பூப்பெய்தும் காலங்களில் கத்தரி, அவரைப்பிஞ்சு போன்றவற்றை அதிகளவில் பயன்படுத்துவர். அவரைப் பிஞ்சு ஓமோன்களின் சமனிலையை பேணக்கூடியதாகவும் பிஞ்சுகள் துவர்ப்புச் சுவையுடையதாக உள்ளதால் இரத்தத்தை சுத்திகரிக்கவும் செய்யும். மற்றும் நல்லெண்ணெய்யில் உயிர்ச்சத்து A linoleic acid என்பன உள்ளதால் நோயெதிர்ப்பு சக்தியை கூட்டும். மாதவிடாய் காலங்களில் வயிற்றில் வலி ஏற்படும் போது சிவத்தப்பச்சரிசியை நனையவிட்டு அதனுடன் விடத்தல் இலை/பொத்துமான் கொடி இலை/மான்பஞ்சான் இலையை சேர்த்து இடித்து மாவாக்கி பிட்டு, களி செய்து கொடுப்பதால் அடிவயிற்று வலி, நோ என்பன தணியும். வலி நிவாரணிகள் இல்லாமலே மேற்சொன்னவற்றால் வலியை போக்க முடியும். Follic acid காணப்படுவதால் இரத்தத்தை விருத்தி செய்வதுடன் மாதவிடாய்க் காலங்களில் ஏற்படும் இரத்த இழப்பையும் ஈடு செய்ய முடியும். மேலும் நல்லெண்ணெயில் linoleic acid உண்டு. இது கர்ப்பப்பை யின் வளர்ச்சிக்கு அவசியமாகும். மற்றும் நல்லெண்ணெய் சினையின் வளர்ச்சிக்கும் அவசியம்.

மற்றும் ஆலங்காய் பிட்டும் பூப்பெய்தும் காலத்தில் ஓர் ஆரோக்கியமான உணவு. இதில் சி.பச்சையரிசி மா, வறுத்த உழுத்தம்மா, தேங்காய்ப் பால், சீனி, உப்பு- தேவையான அளவு. இதனை காலை உணவாக தயாரித்து உண்பது சிறந்தது.

மற்றும் சீரகம், மஞ்சள், சுக்கு, இஞ்சி, மிளகு, உள்ளி போன்றன அதிகமாக பத்தியக் கறிகளில் சேர்க்கப்படுகின்றது.

சின்னச்சீரகத்தில் இரும்புச் சத்து அதிகம் காணப்படுகின்றது. பச்சை சரக்குகளை பனை வெல்லத்துடன் சேர்த்து கர்ப்பாசயத்தை வலுப்படுத்த பயன்படுத்தப்படுகின்றது.

சி.சீரகம்- அரை மே.கரண்டி, மஞ்சள்- ஒரு தண்டு, மிளகு- 2, இஞ்சி-ஒரு சிறிய துண்டு, பனை வெல்லம்- அரை மே.கரண்டி.



பனை வெல்லம் தவிர மற்றையவற்றை இடித்து 3 நாட்களும் கொடுக்கப்படுகின்றது. இதை பிரசவித்த பெண்களுக்கு 3 நாட்கள் தொடக்கம் 10 நாட்கள் வரை கொடுக்கலாம். இது கர்ப்பாசயத்திலுள்ள கழிவுகளை அகற்றவும் உதவுகின்றது.

கர்ப்பாசய காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் குமட்டல், வாந்தி என்பவற்றிற்கு நாரத்தங்காய் சாறு எடுத்து தேவையான அளவு சீனி கலந்து பாகுபதத்தில் காய்ச்சி வைத்து தேவையான அளவு வாயில் போட்டு உமிழ்ந்து கொள்ளல் வேண்டும்.


அதேபோன்று நாரத்தை ஊறுகாய் செய்தும் பயன்படுத்தலாம். இதில் உயிர்ச்சத்து C உள்ளது குறிப்பிடத்தக்கது. அதேபோல் மாதவிடாய், கர்ப்பகாலத்திலும் சரி பால், பன்னீர், வெண்ணெய், மோர் போன்றன போசாக்கு மிக்க சம உணவாக உள்ளது. காய்ச்சிய பசுப்பாலை தேனுடன் எடுப்பது ஆரோக்கியமானது. தேன் பாலிலுள்ள Ca sein இலகுவில் சமிபாடடையச் செய்யும்.

மேலுட் செவ் வாழைப்பழம் கர்ப்பாசயத்தை வலுப்படுத்துவதில் சிறந்த பழம் ஆகும்.

இதனை (வட்டவட்டமாக) துண்டுதுண் டாக வெட்டி தூய தேனில் ஊறவிட்டு ஒரு நாளைக்கு ஒரு வாழைப்பழம் வீதம் வாரத்தில் 3 நாட்கள் பயன்படுத்தி வரலாம். அதேநேரம் செவ்வா ழைப்பழமும் தேனும் மலட்டுத் தன்மையை நீக்குவதில் பெரிதும் உதவுகின்றது.

மாதவிடாய் காலங்களில் கருஞ்சீரகம், அன்னாசி, பப்பாசி, சதகுப்பை, எள்ளு போன்றவற்றை தவிர்த்து கொள்ள வேண்டும். ஏனெனில் மாதவிடாய் காலங்களில் இரத்தப்போக்கை அதிகரிக்கும் தன்மையும் உண்டு. ஆனாலும் எள்ளு பனங்கட்டி சேர்த்து தயாரிக்கப் பட்ட எள்ளுருண்டை கர்ப்பிணிகளுக்கு சிறந்த போசாக்கான உணவு. எனினும் 6 ஆம் மாதத்தின் பின்னரே இதனை எடுக்க வேண்டும். இதில் பொஸ்பரஸ், கல்சியம், இரும்புச் சத்து என்பனவும் உண்டு. (தொடரும்)

## கோத்தாவின் தொலைக்காட்சி செவ்வி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்



(கொழும்பு)

மிக் விமானம் கொள்வனவு தொடர்பில் 2007 ஆம் ஆண்டு முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய செவ்வி தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2007ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19ஆம் திகதி தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கோத்தபாய இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் இரகசிப் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த நிகழ்ச்சியின் நகல் ஒன்றைப் பெற்றுத் தருமாறு நீதிமன்றம் ஊடாக குறித்த தொலைக்கட்சி நிறுவனத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஊடக சுதந்திரம் தொடர்பி லேயே கோத்தபாய தொலைக் காட்சி நிகழ்ச்சியில் கருத்துத் தெரிவித்திருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்க 2007 ஆம்ஆண்டுமிக்விமான கொள்வனவு தொடர்பில் கடிதம் ஒன்றை வெளியிட்டிருந்த நிலையில், 2009ஆம்ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி கல்கிஸை பகுதியில் வைத்து கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் நாளை 10 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறும். (இ-5)

## யாழ்.நகர்ப்பகுதியை அண்மித்த வீதியோரங்களில் வைக்கப்படும் கழிவுகள் இரண்டு வாரங்களாக அகற்றப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப்பகுதியை அண்மித்த குடிமனை பிரதேச வீதிகளில் வைக்கப்படும் கழிவுகள் கடந்த இரு வாரங்களாக அகற்றப்படாமல் இருப்பதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

கஸ்தூரியார் வீதி, கின்னர் ஒழுங்கை, சிவன் கோவிலடி சுற்றயல் பகுதியை அண்மித்த வீதிகள், மனோகரா திரையரங்கு அருகாமையில் உள்ள வீதிகளில் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக கழிவு அகற்றப்படவில்லை.

மாநகர சபைக்கு குறித்த விடயம் தொடர்பாக அறிவித்த போதும் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

மேலும் அப்பகுதியில் அமைந்துள்ள கால்வாய்கள் புனரமைப்பு செய்யப்படாது இருப்பதால் அப்பகுதியில் நீர் தேங்கி நுளம்பு பெருக்கம் அதிகரித்துள்ளது. இது குறித்து சுகாதாரத்துறையினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் பொதுமக்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். கழிவுகள் தேங்கி இருப்பதால் தொற்று நோய் அபாயத்தை மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஆகவே இந்த விடயம் குறித்து மாநகரசபை உடனடியாக கவனம் எடுத்து கழிவுகளை அகற்ற வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)

## விபத்தில் மாணவன் பலி!

(கொடதெனிய)


கொடதெனியாவ - நீர்கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மாணவனொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை 6.15 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன். கொடிகமுவ பகுதியிலிருந்து நீர்கொழும்பு பகுதி நோக்கி பயணித்த வான் பாதையை விட்டு விலகி இருவர் மீது மோதி விபத்துக்குள்ளானமையினாலேயே மேற்படி உயிரிழப்பு சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# ஊடகவியலாளர் லசந்தவின் 10 ஆம் ஆண்டு நினைவுதினம்

## நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு





(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் 10 ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்றாகும்.

பேனையால் சவால் விடுத்தவர், கடந்த ஆட்சியாளர்களால் ஆயுதத்தால் மௌனிக்கப்பட்டார். அவரது நினைவுதினம் பொறளை பொது மயானத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை மிகவும் உணர்வுபூர்மாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதில், லசந்தவின் உறவினர்கள், பெருமளவான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது அன்னாரின் கல்லறைக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இலங்கையில் இதுவரை படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட சிட்டைகளை வைத்து அவர்களும் நினைவுகூரப்பட்டனர்.


1994 ஆம் ஆண்டு சண்டே லீடர் பத்திரிகையை ஸ்தாபித்த லசந்த விக்கிரமதுங்க, மிக இளம் வயதில் சன் பத்திரிகைச் செய்தியாளராக தனது ஊடகப் பணியை ஆரம்பித்தவர். 1982 ஆம் ஆண்டு தி ஐலண்ட் பத்திரிகையில் இணைந்த லசந்த, 1994 ஆம் ஆண்டு ஆரம்பித்த சண்டே லீடர் மூலம் அன்றைய மகிந்த தலைமையிலான ஆட்சியாளர்களை மிகக் கடுமையாக விமர்சித்தார்.

கடந்த ஆட்சியாளர்களுக்கு சிம்ம சொப்பனமாய் திகழ்ந்த லசந்தவிற்கு பலமுறை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வந்தது.

அன்றைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆயுத ஊழல் தொடர்பாக நீதிமன்றில் சாட்சியம் வழங்கத் தயாராக இருந்த லசந்த, குறித்த சாட்சிய தினத்திற்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

லசந்த படுகொலை செய்யப்பட்டு ஒரு தசாப்தம் முடிவடைகின்ற போதும், அதற்கு காரணமானவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பி வருகின்றனர். லசந்த உள்ளிட்ட கடந்த காலத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு கிடைக்கும் நீதியே, இலங்கையின் ஊடக சுதந்திரத்தையும் நீதி நியாயத்தையும் உறுதிப்படுத்தும் என இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் தெரிவத்தனர். (இ-7)

# குறை'களை' பதிகம் 05



## வெற்றுக்காணிகளை பார்வையிட மாட்டீரோ!

டெங்கு ஒழிப்பு பணியினிலே
தண்டம் செலுத்திய காசுதான் அதிகம்
வீட்டு வளவைச் சுற்றிப் பார்த்து
வில்லங்கம் உண்டு என்றால்,
கோடு கச்சேரி ஏறி நிற்பதுதான் முறையாம்

நல்லது நம் சுகாதாரப் பிரிவும்
அதிகாரத் தரப்பாகி விட்டது போலும்
வீட்டைப் பூட்டி உள்ளிருந்தால்
வெளிப்படலையில் ஒட்டிக்கொள்ளும் மஞ்சள் துண்டு
நாசமாய்ப் போக பூட்டாமல் விட்டதால் வந்த வினை
நாலுகாசு கட்டவேண்டியதாச்சு

ஐயா! அருகில் இருக்கும் வெற்றுவளவு
பற்றைக்காடாய்க் கிடக்குது
பாம்பு பூச்சி பூரானோடு
சிரட்டை தகரம் தட்டுவங்கள்
டெங்கு நுளம்பை பெருக்கித் தருகுது என்றால்,
வீட்டில் இருந்த குற்றத்திற்காய் நீ தண்டம் கட்டு
உரியவன் இல்லாத காணிகளில்
நுளம்பு பெருகலாம் நீ வாயை அடக்கு
என்றுரைப்பது எத்துணை நியாயம்
பற்றை வளவை முதலில் பார்த்து
பக்குவங்கள் செய்த பின்பே
குடியிருக்கும் வீடுகளை
குணப்படுத்த விளைய வேண்டும்

தாயகத்தில் வீடு கட்டியிருந்ததால்
தண்டம் கட்டும் கொடுமையினை
களைந்தெடுத்து கவனிப்பாரற்ற காணிகளை
சுவீகாரம் செய்து கொண்டால்
எல்லாம் நல்லதாய் நடக்கும் நம்மண்ணிலே

-கூத்தனார்-

# சாவகச்சேரி நகரசபையால் நான்கு வீதிகள் புனரமைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையால் நான்கு வீதிகள் புனரமைக்கப்பட்டு வருவதாக நகராட்சி மன்றத் தவிசாளர் திருமதி. சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

பெரிய அரசடி வீதி, சிற்றம்பலம் வீதி, சாரதா வீதி, கண்டுவில் வீதி ஆகிய வீதிகளே நகராட்சி மன்ற நிதியிலிருந்து புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

மீசாலை பொதுநூலகக் கட்டடப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

பிலிசறு வேலைத்திட்டத்தில் குப்பைகள் தரம் பிரித்து செயற்படுத்துவதற்கான கட்டடமும் உள்ளக வீதிகளும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் நகராட்சிமன்ற எல்லைக்குள் வசிக்கின்ற ஒவ்வொருவரும் தமது பிரதேச பிரச்சினைகள், கோரிக்கைகள் தொடர்பாக நேரடியாகத் தவிசாளரான தன்னிடம் எந்நேரமும் வந்து சந்திக்க முடியும் எனவும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் களவிஜயம் மேற்கொண்டு உடனடியாகவே தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நகராட்சி மன்றத் தவிசாளர் திருமதி. சிவமங்கை இராமநாதன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் பதிய கொள்கைப்படி தற்போதைய வேலை வாய்ப்பு நிலைமைகளைக் கருத்தில் கொண்டு ஆறு பிரதான துறைகளையும் சில உபதுறைகளையும் மையமாக வைத்து பயிலுநர் பயிற்சிகளைச் செயற்படுத்தியுள்ளோம்.

1.சுகாதாரத்துறை.

2.ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை.

3.கட்டுமானத்துறை.

4.மோட்டார் வாகன மற்றும் உற்பத்தித்துறை.

5.விவசாயம் மற்றும் கால் நடைத்துறை.

6.மின்னியல் மின்னணு மற்றும் தொலைத் தொடர்புத்துறை.

முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்களுக்கு 2 மாத பொதுவான அடிப்படைப் பயிற்சிகளையும் அதனைத் தொடர்ந்து 1 தொடக்கம் 1 1/2 வருடங்கள் விசேட துறைசார் பயிலுநர் பயிற்சிகளையும் வழங்கி அவற்றிற்கான NVQ சான்றிதழை வழங்கவுள்ளோம்.

இதற்கான விண்ணப்பங்களை எமது அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 14.01.2019 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். 16 வயதிற்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்க முடியும் என மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (இ-7)

# நாமல் குமார தொடர்பான விசாரணையை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்

## வாசுதேவ வலியுறுத்து



(கொழும்பு)

நாமல் குமார தொடர்பான விசாரணைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் நடத்திய ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாமல் குமாரவுக்கு எதிரான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவரால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பான விசாரணைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

அதனைவிடுத்து அவரை முதலில் விசாரணை செய்யும் நடவடிக்கையில், சதித்திட்டம் இருக்கலாம் என நாம் சந்தேகிக்கின்றோம்.

நாமல் குமாரவால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் பொலிஸார் முறையரன விசாரணைகளைநடத்திமுடிக்கவேண்டும்

அவ்வாறில்லாமல் அவர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துச் செல்வது சாட்சிகளை வலுவிழக்கச்செய்யும் செயலாகும்.

அதனால் நாமல் குமாரவுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதுடன், பொலிஸாரின் விசாரணைகளில் அழுத்தங்கள் இல்லாமல் அவர் விசாரிக்கப்பட வேண்டும்" என வாசுதேவ நாணயக்கர்ர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# எழுத்தாளர் நூல் கொள்வனவு கையெழுத்துப்பிரதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடந்தோறும் செயற்படுத்தப்படுகின்ற எழுத்தாளர் நூல் கொள்வனவிற்காக 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையிலான காலப்பகுதியில் அச்சிட்டு வெளியிடப்பட்ட நூல்கள் பரிந்துரை செய்யப்படத் தகுதியானவையாகும்.

மேற்படி திணைக்களத்தால் இவ்வருடத்திற்கான தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டிக்கான ஆக்கங்களும் விண்ணப்பிக்க முடியும்.

போட்டிக்காக விண்ணப்பிக்கும் கலைஞர்கள், ஆர்வலர்கள் கோப்பாய் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனப் பிரதேச செயலாளர் திருமதி. சுபாஜினி மதியழகன் அறிவித்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதி பதவியேற்பின் நான்காண்டு பூர்த்தியை முன்னிட்டு பிரித் பாராயணம்





(கொழும்பு)
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று நான்கு வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி ஏற்பாடு செய்யப்பட்ட பிரித் பாராயண நிகழ்வு நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

ஹுன்னுபிட்டிய கங்காராம விகாராதிபதி சங்கைக்குரிய கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினரின் பங்குபற்றுதலுடன் இந்த பிரித் பாராயண நிகழ்வு இடம்பெற்றது. ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன இங்கு இடம்பெற்ற சமய உரையை செவிமடுத்தார். புத்த சாசன அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா உள்ளிட்ட அமைச்சர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேநேரம் நேற்றுக் காலை மகாசங்கத்தினருக்கான அன்னதான நிகழ்வொன்றும் இடம்பெற்றது.

சியம்நிக்காயவின்கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமக்ரி தர்ம மகா சங்க சபையின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய கலாநிதி இத்தேபானே தம்மாலங்கார தேரர், ஸ்ரீ லங்கா அமரபுர மகா நிக்காயவின் மகாநாயக்க தேரர், அக்கமகா பண்டித சங்கைக்குரிய கொட்டுகொட தம்மாவாச மகா நாயக்க தேரர், சங்கைக்குரிய கொடபொல அமரகீத்தி தேரர், சங்கைக்குரிய திருக்குணாமலயே ஆனந்த தேரர், சங்கைக்குரிய அக்குரட்டியே நந்த தேரர், களனி ரஜமகா விகாரையின் விகாராதிபதி பேராசிரியர், கொள்ளுபிட்டியே மகிந்த சங்கரக்கித்த தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரும் இங்கு வருகை தந்திருந்தனர்.

ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன உள்ளிட்ட ஜனாதிபதி அலுவலக பணிக்குழாமினரால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (2)

# ஸ்ரூடியோவுக்குள் பிக்கு புகுந்து உரத்த சத்தமிட்டு அட்டகாசம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பில் அமைந்துள்ள ஸ்ரூடியோவுக்குள் நேற்றைய தினம் காலை காவியுடை தரித்த பிக்கு ஒருவர் புகுந்து உரத்த சத்தமிட்டு அட்டகாசம் செய்துள்ளார்.

ஸ்ரூடியோவில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த குழந்தை ஒன்றின் புகைப்படத்தை காட்டி இது யாருடையது? எனது சிறிய வயது புகைப்படம். இதை ஏன் நீங்கள் காட்சிப்படுத்த வேண்டும். இதற்கு விலை 125 ரூபாயா? நான் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு போகப் போகிறேன் என கடையில் வேலை செய்யும் ஊழியர்களை அச்சுறுத்தி பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்.

காவியுடை தரித்து வந்தவர் உண்மையில் பிக்கு போன்று நடந்து கொள்ளவில்லை என, குறித்த ஸ்ரூடியோவில் தொழில் புரியும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் வீதியில் நின்றவர்கள் பிக்குவை மறித்து நீங்கள் எங்கிருந்து வந்துள்ளீர்கள் என வினவியுள்ளனர். நான் மட்டக்களப்பைச் சுற்றிப்பார்ப்பதற்கு வந்துள்ளேன் எனத் தெரிவித்து விட்டு பிக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து 119 என்ற இலக்கப் பொலிஸ் அவசர பிரிவுக்கு குறித்த கடை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் அவ்விடத்திற்கு வருவதற்கு முன்னர் பிக்கு இவ்வாறு அட்டகாசத்தை செய்து விட்டு மட்டக்களப்பு புகையிரதப் பகுதி நோக்கிச் சென்றதாகக் கடை ஊழியர்கள் தெரிவித்தனர். பின்னர் மட்டக்களப்பு பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரித்துள்ளனர். (2-7)

## அனுமதிபெறாது அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கு அனுமதிபெற காலஅவகாசம்

(பனிக்கன்குளம்)
வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் கடந்த காலத்தில் பல அனுமதியற்ற கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் பல்வேறுபட்ட இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே சபையின் கடந்த டிசெம்பர் மாதம் 20 திகதி பொதுக்கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைவாக முதல்கட்டமாக ஏ9 வீதியின் இருமருங்கிலும் மற்றும் புளியங்குளம், முல்லை வீதியின் இருமருங்கும் மற்றும் நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் வீதியின் இருமருங்கிலுமுள்ள வர்த்தக நிலைய கட்டடங்களும் அதனுடன் இணைந்த கட்டடங்களுக்கும் 2019 ஆம் ஆண்டின் பங்குனி மாதம் 31 ஆம் திகதிவரை இக்கட்டடங்களுக்கு அனுமதி பெறுவதற்கு கால அவகாசம் வழங்குவது எனவும் குறித்த காலத்துக்குள் அனுமதி பெறாத கட்டட உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆகவே அனைத்து கட்டட உரிமையாளர்களும் இதனை கவனத்தில்கொண்டு உரிய அனுமதிகளை பெற வேண்டும் எனவும் சிரமத்தை பாராது சம்பந்தப்பட்டுள்ள மக்கள் இதில் கவனம் செலுத்துமாறும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சபாரத்தினம் தணிகாசலம் கேட்டுக் கொண்டதுடன் இதனை ஓர் பகிரங்க அறிவித்தலாக வெளியிடுவதாகவும் குறிப்பிட்டார். (2-281)

# தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை பெற்றுத் தருவதற்கு பிரதமர் உறுதி


## சிறிநேசன் எம்.பி.தெரிவிப்பு

(மட்டக்களப்பு)
தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட திசவீரசிங்கம் நான்காம் குறுக்கு வீதியை புனரமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 40 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீட்டின் கீழ் இந்த வீதிப்புனரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் இதனைத் தெரிவித்துள்ளார்.



இங்கு மேலும் தெரிவித்த அவர், "கடந்த ஆண்டில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டு ஜனநாயக அரசியலுக்கு அப்பால் கேலிக்கூத்தான விடயங்கள் நடந்தேறியது.

சட்ட ஆட்சியை பாதுகாக்கவேண்டும், அரசியல் யாப்பினை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் நியாயமாக, நீதியாக சிந்தித்ததன் அடிப்படையில் சட்டவிரோதமான, அடாவடித்தனமான சூழ்நிலையினை தவிர்த்திருந்தோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த இடத்திலும் பணத்திற்கோ, பதவிக்கோ பலியாகாத கட்சி என்ற உண்மையை நாங்கள் நிலைநாட்டியுள்ளோம். ஒருவர் விதிவிலக்காக சென்றாலும் ஏனைய அனைவரும் பொதுவிதியாக ஒரு கொள்கையின் கீழ் இருந்துள்ளோம்.

தற்போது ஆட்சியமைத்துள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினையும், பொருளாதார ரீதியான அபிவிருத்தி திட்டங்களையும் செய்து தருவதாக உறுதியளித்துள்ளனர்.

அதன்படி எதிர்வரும் இரண்டு வருடகாலப்பகுதியில் பலவிதமான அபிவிருத்திகளை செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தினை நாங்கள் கட்சியுடன் இணைந்து உறுதியாக பின்பற்றுவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-7)

# வைத்தியர்களின் கார்களின் கண்ணாடிகள் விசமிகளால் உடைப்பு

(பனிக்கன்குளம்)
வவுனியாவில் வைத்தியர் விடுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களினுடைய கண்ணாடி நேற்று அதிகாலை உடைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பணிபுரியும் வைத்தியர்களுக்கான கண்டி வீதியில் அமைந்துள்ள விடுதியில் வசித்து வரும் வைத்தியர்களின் மூன்று கார்களின் கண்ணாடிகள் இனந்தெரியாத நபர்களினால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து நேற்றுக் காலை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் பாதுகாப்புக் கமராக்களை ஆய்வு செய்ததுடன் இச் சம்பவம் பழிவாங்கும் நோக்கத்திற்காக செய்யப்பட்டதா? அல்லது காரிலுள்ள பொருட்களை திருடுவதற்காக செய்யப்பட்டதா? போன்ற பல்வேறு கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று அதிகாலையிலேயே ஒருவர் வந்து கார்களினுடைய கண்ணாடிகளை உடைத்து விட்டுத் தப்பிச்சென்றது அருகிலுள்ள சி.சி.ரி.வி.கமராவில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



(யாழ்ப்பாணம்)
மக்கள் ஆதரவு மையத்தின் "கல்விக்கு தோள் கொடுப்போம்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கும் மற்றும் கல்விசார் தேவையுடைய மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் மையத்தின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் ச. சுரேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவையாளர் சு.சுபேந்திரன் (பிரான்ஸ்). மக்கள் ஆதரவு மையத்தின் பணிப்பாளர்களான ந.கஜேந்திரகுமார், ந.விநோத், சட்டத்தரணி திருமதி சுதா கஜேந்திரகுமார், திருமதி, லக்ஷி சுரேந்திரன் மற்றும் மாணவர்கள், பெற்றோர்களும் கலந்து கொண்டனர். (இ-9)





அச்சுவேலி மத்தியில் அமைந்திருக்கும் சிறுவர் பாடசாலையின் கோப்பாய், தேசோதயத்தின் ஊடாக சிறுவர் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது. இதன் போது இதற்கு தலைமை தாங்கிய கோப்பாய் தேசோதயத் தலைவர் மயில்வாகனம் யாழ். மாவட்ட செயலகத் தலைவர் நா. தனேந்திரன், காரைநகர் தேசோதயத் தலைவர் க. சுந்தரலிங்கம் ஆகியோர் சிறார்களுக்கு பொருட்களைவழங்கி வைக்கும் போது...

## விளக்குவைத்தகுளத்தில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு புகையிரதக் கடவை திறப்பு



வவுனியா விளக்கு வைத்த குளத்தில் பாதுகாப்பற்ற நிலையில் இருந்த புகையிரதக்கடவை பாதுகாப்பான முறையில் நிர்மாணிக்கப்பட்டு நேற்றைய தினம் தெற்கு தமிழ் பிரதேசசபை உறுப்பினர் கோகிலகுமார் அஞ்சலா தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா இறம்பைக்குளம் ஈசி மிசன் ஆலயத்தின் பிரதான பிஷப் வி.என். இராஜசிங்கத்தின் நிதிப்பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட பாதுகாப்பு புகையிரதக்கடவையை புளியங்குளம் பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி. பொன்சேகா மற்றும் ஓமந்தை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சுரேஸ் டி சில்வா ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு திறந்து வைத்தனர்.

விளக்கு வைத்த குளத்தில் பாதுகாப்பு புகையிரதக் கடவையை திறந்து வைத்த பின் கருத்துத் தெரிவித்த மருதமடு வட்டாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தெற்கு பிரதேசச்சபை உறுப்பினர் கோகிலகுமார் அஞ்சலா. எமது கிராமத்தில் பாதுகாப்பற்ற புகையிரதக்கடவையில் கடந்த ஆண்டு எட்டு உயிர்களைப் பலி கொடுத்துள்ளோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டங்களில் புகையிரத பாதுகாப்பு கடவைகளை நிர்மாணிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்ட போதிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என குற்றஞ் சாட்டினார். (2-250)

# மன்னார் பிரதேச சபைக்குள் குப்பை வரி அறவிட தீர்மானம்

(மன்னார்)

மன்னார் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள வீடு ஒன்றுக்கு மாதாந்தம் குப்பை வரியாக 50 ரூபா அறவிடுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன் இதனை மக்களுக்கு தெரியப்படுத்திய பின் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தலைவர் எஸ்.எச்.எம். முஜாஹிர் தலைமையில் நடைபெற்ற கடந்த வருட இறுதி மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி,

மன்னார் பிரதேச சபை எல்லைக்குள் வரும் வாகனங்களுக்கான வரிகள் அறவிடும் சம்பந்தமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு




அவை இவ்வருடம் முதல் நடைமுறைப் படுத் துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் பிரதேச சபை எல்லைக்குள் வரும் வாகனங்களின் பெரிய வாகனங்களுக்கு ஒரு நாளுக்கு 100 ரூபாவும் சிறிய வாகனங்களுக்கு 50 ரூபாவும் நெல் ஏற்றும் பெரிய வாகனத்துக்கு ஒரு மாதத்துக்கு 3 ஆயிரம் ரூபாவும் என தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

அத்துடன் ஒரு மாதத்துக்கு ஒரு வீட்டிற்கு 50 ரூபா குப்பை வரியாக அறவிடுவது எனவும் மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட எல்லாக் கிராமங்களுக்கும் இது தொடர்பான ஒலி பெருக்கி மூலம் தெரிவிப்பது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டு இதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்களிடம் குப்பை வரிகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்ற இதேவேளையில் சனி,ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான நடவடிக்கையாக ஆளணிகளை அதிகரிக்க வேண்டும் என தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் தெரிவித்தார்.

அத்துடன் இறைச்சிக் கோழி விற்கப்படும் ஒரு வீட்டிற்கு ஒரு வருடத்துக்கு 10 ஆயிரம் ரூபா அறவிடுவதென இச் சபையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவைகள் இவ் வருடம் முதல் அமுலுக்கு வரும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-285)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு மு/ சுதந்திரபுரம் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு, இலங்கை படையினர், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினர், டயலொக் தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் இணைந்து "உங்கள் மறுமலர்ச்சிக்கு நாம்" என்ற தொனிப்பொருளில் வடக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றார்கள். வடக்கில் கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் 15 ஆயிரத்து 100 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விபரம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சுதந்திரபுரம் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் 68 ஆவது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் அருண ஆரியசிங்க, கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரத்ன, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார்,முல்லை.வலயக் கல்விப்பணிப்பாளர் உமாநிதி புவனேஸ்வரன்; புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.சுப்பிரமணியேஸ்வரன் உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சின் இணைப்பாளர் மற்றும் டயலொக் தொலைத்தொடர்பு நிறுவனத்தின் வடபிராந்திய பணிப்பாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்துள்ளார்கள். (2-281)

## வெள்ளப்பெருக்கினால் சேதமடைந்த கள்ளியடி வீதி தற்காலிகமாக சீரமைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி நாகேந்திரபுரம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தால் வெள்ளப்பெருக்கினால் சேதமடைந்த கள்ளியடி வீதி தற்காலிகமாக புனரமைக்கப் பட்டுள்ளது.

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்குட்பட்ட நாகேந்திரபுரம் கடற்றொழிலாளர்கள் தொழிலுக்காக பயன்படுத்தும் கள்ளியடி வீதி அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சேதமடைந்த நிலையில் காணப்பட்டது.

தற்போது தொழில்களை மேற்கொள்ளும் பொருட்டு கடலுக்குச் செல்வதற்கும் கடலுணவுகளை ஏற்றுமதி செய்வதற்கும் ஏற்ற வகையில் கடற்றொழிலாளர்கள் இணைந்து குறித்த வீதியை தற்காலிகமாக புனரமைத்துள்ளனர்.

கிராம மக்கள்,கடற்றொழிலாளர்கள் இணைந்து மேற்படி வீதியை சிரமதானம் மூலம் புனரமைத்துள்ளனர். (2-315)

## ஆறுகளில் சேருகின்ற நீர் விரைவாக வழிந்தோடக் கூடியவாறு புனரமையுங்கள்

கிளிநொச்சி கனகராயன் ஆறு, நெத்தலியாறு, அக்கராயன் ஆறு என்பன நீர் வழிந்தோடக்கூடிய நிலையில் இல்லாமையினால் வெள்ளப்பெருக்குகள் ஏற்படுகின்றன. இதனை புனரமைக்க வேண்டிய தேவையுள்ளதாக விவசாய சம்மேளனத்தின் தலைவர் மு.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளங்களான அக்கராயன் குளத்தின் மேலதிகமாக வான் பகுதியூடாக வெளியேறும் நீர் அக்கராயன் ஆற்றினூடாகவும் இரணைமடுக்குளத்தின் மேலதிக நீர் வான் கதவுகள் மூலம் வெளியேற்றப்படும் நீரும் கனகராயன் ஆற்றினூடாகவும் கல்மடுக் குளத்தின் மேலதிக வான் பகுதியால் வெளியேறும் நீர் நெத்தலியாற்றினூடாகவும் வெளியேறி வருகின்றன.

இந்நிலையில் இவ்வாறு நீர் வெளியேறும் ஆறுகள் தற்போது சேதமடைந்து காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படும் ஆறுகளை நீர் விரைவாக வெளியேறக்கூடிய வகையில் புனரமைத்துத்தருமாறு சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.(2-315)

## முதிரை மரக்குற்றிகளுடன் கன்டர் ரக வாகனம் கைப்பற்று



(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதியில் புதுக்குடியிருப்பு வன அதிகாரிகள் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் 13 முதிரை மரக்குற்றியுடன் கன்டர் ரக வாகனம் ஒன்றை கைப்பற்றியுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

மரக்கடத்தல் இடம்பெற்று வருவதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட வன அதிகாரி ஆர்.ஏ.சி.டி. ரணசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக புதுக்குடியிருப்பு பகுதி வன அதிகாரிகள் கொண்ட குழுவினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இவர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணி முதல் வனத்தில் தங்கியிருந்து சுற்றிவர உமி மூடைகளை அடுக்கி நடுவில் மரக்குறிகளை இட்டு கடத்தும் இந்த சூட்சுமமான கடத்தலை முறியடித்துள்ளனர்.

குறித்த வாகன சாரதி தப்பியோடிய நிலையில் கைப்பற்றப்பட்ட கன்டர் வாகனத்தையும் 13 முதிரை மரக் குற்றிகளையும் நீதி மன்றில் பாரப்படுத்தவுள்ளதாக புதுக்குடியிருப்பு பகுதி வன அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (2-281)

## பணம் வசூலித்த சிங்கள இளைஞர் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைப்பு

(மன்னார்)

தமிழ் மக்களின் வீடுகளுக்குச் சென்று பணம் வசூலித்த அநுராதபுர சிங்கள இளைஞர்கள் நால்வரை மடுவில் உள்ள மக்கள் நையப்புடைத்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் இடம் பெற்றுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

மன்னார், மடு, பெரிய பண்டிவிரிச்சான் பகுதியிலுள்ள வீடுகளுக்குச் சென்று ஆதரவற்ற குழந்தைகளுக்கு நிதி திரட்டுவதாகக் கூறி சில தமிழ் மக்களை மிரட்டியும் நிதி வசூலித்துள்ளார்.

தாங்கள் அநுராதபுரம் என தங்களை அடையாளப்படுத்திக்கொண்ட சிங்கள இளைஞர்கள் நால்வரி சந்தேகமடைந்த அப்பகுதி மக்கள் துரத்திப் பிடித்து நையப்புடைத்துள்ளனர்.

சம்பவத்தை அறிந்து அவ்விடத்திற்கு விரைந்த அப்பகுதி கிராம அலுவலர் நடந்த சம்பவத்தை கேட்டறிந்ததுடன், மடு பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து விரைந்து வந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (2-285)

## பாதுகாப்பற்ற கிணற்றிலிருந்து சிறுமி சடலமாக மீட்பு



கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் பாதுகாப்பற்ற கிணற்றிலிருந்து 10 வயது சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

அவரது வீட்டிலுள்ள பாதுகாப்பற்ற கிணற்றில் நீர் அள்ளச்சென்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சம்பவத்தில் கிளிநொச்சி பாரதி வித்தியாலய மாணவியான புவனேஸ்வரன் டிலாணி (வயது-10) என்ற சிறுமியே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். உயிரிழந்த சிறுமியின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பூர்வாங்க விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2)

# ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க உச்ச நீதிமன்றம் அனுமதி

(டில்லி)

ஸ்டெர்லைட் ஆலையை திறக்க அனுமதி வழங்கி பசுமைத் தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவுக்குத் தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

தூத்துகுடி ஸ்டெர்லைட் ஆலையை மூடக் கோரி, 22 வருடங்களாக அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தநிலையில்ஆலையை விரிவுபடுத்தும் நோக்கத்தில், ஆலை நிர்வாகம் தமிழ்நாடு சிப்காட் நிறுவனம் மூலம் 640 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியது.

இதைத் தொடர்ந்து ஏராளமான பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் உச்சக்கட்டமாக கடந்த ஆண்டு மே 22 ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்தில் துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து எழுந்த எதிர்ப்புகளின் நீட்சியாகத் தமிழக அரசு ஸ்டெர்லைட் ஆலையை மூட உத்தரவிட்டது. அரசாணையையும் பிறப்பித்தது.

இதை எதிர்த்து ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தை நாடியது. இதுபற்றி ஆய்வு செய்ய மேகாலயா உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி தருண் அகர்வால் தலைமையில் மூன்று பேர் கொண்ட குழுவை, தீர்ப்பாயம் அமைத்தது.

குழு அளித்த அறிக்கையை அடுத்து, ஸ்டெர்லைட் ஆலையை மூடி தமிழக அரசு பிறப்பித்த ஆணை செல்லாது. அடுத்த 3 வாரங்களுக்குள் ஆலையை திறக்க தமிழக அரசு அனுமதிக்க வேண்டும் என்று தேசிய பசுமைத் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கியது.

இதனை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. உயர் நீதிமன்ற தடைக்கு எதிராக ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகமும் மேல் முறையீடு செய்தது.

இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், பசுமைத் தீர்ப்பாய உத்தரவுக்குத் தடை விதிக்க மறுப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் ஆலைக்கு எதிரான உயர் நீதிமன்ற கிளையின் உத்தரவு நிறுத்தி வைத்துள்ளது.

இதன்மூலம் ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. அத்துடன் மனுக்கள்மீது தொடர்ந்து விசாரணை நடைபெறும் என்றும் பசுமைத் தீர்ப்பாய உத்தரவில் கூறப்பட்ட விதிமுறைகளை ஸ்டெர்லைட் ஆலை பின்பற்ற வேண்டும்எனவும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் தமிழக அரசு, ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்கக் கூடாது என்று அமைச்சரவையைக் கூட்டிக் கொள்கை முடிவு எடுத்து, சட்டம் இயற்றுமா என்ற கேள்வி எல்லோர் மத்தியிலும் எழுந்துள்ளது. (4-7)

# ஈரானில் நில நடுக்க

(தெக்ரான்)


ஈரானில் நேற்று முன்தினம் ஜர்மான்ஷா மாகாணத்தில் 5.9 ரிக்டரில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதில் 75இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.



ஈரானில் நேற்று முன்தினம் ஜர்மான்ஷா மாகாணத்தில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் ஜிலாங்கர்ப் நகரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகள் அதிர்ந்தன.

அங்குள்ள வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. இதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். மலைப் பகுதியில் இருந்து உருண்டு வந்த பாறைகள் வீதிகளில்

# துருக்கியில் படகு க
# 2 பேர் பலி; 4



(அங்காரா)

துருக்கியில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், நால்வர் காணா

# ஸ்டெர்லைட் ஆலையை திறக்க அனுமதி; தமிழக அரசு என்ன செய்யப்போகிறது?

## சட்ட சபையில் மு.க. ஸ்ராலின் கேள்வி

(சென்னை)

ஸ்டெர்லைட் ஆலையை திறக்க உச்சநீதிமன்றம் நேற்று அனுமதி அளித்துள்ள நிலையில் தமிழக அரசு அடுத்து என்ன செய்யப் போகிறது? என்று சட்டசபையில் மு.க.ஸ்ராலின் கேள்வி எழுப்பினார்.

தமிழக சட்டசபையில் நேற்று கேள்விநேரம் முடிந்தும் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் மு.க.ஸ்ராலின் உரையாற்றியதாவது,

முன்னேறிய சமுதாயத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு 10 சதவீதம் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது. நடப்பு பாராளுமன்ற கூட்டத்திலேயே இந்த சட்டத்தை நிறைவேற்ற இருப்பதாக தெரிய வருகிறது. தேர்தலை கருத்தில் கொண்டு இப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

முன்னேறிய வகுப்பில் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவது சமூக நீதி கொள்கைக்கு முற்றிலும் எதிரானது. இதை நிறைவேற்றினால் பின்தங்கிய மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைக்கு எதிராக அது அமையும்.

தி.மு.க. ஆட்சியில் இருக்கும்போது அன்றைய பிரதமர் வி.பி.சிங்கிடம் வலியுறுத்தி பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டை கலைஞர் பெற்றார். வேலை வாய்ப்பு மட்டுமன்றி கல்வி நிலையங்களிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு பெறப்பட்டது.

மண்டல் கமிஷன் பரிந்துரையின்படி அமைந்த இந்த இடஒதுக்கீட்டின் மூலம் பிற்பட்ட வகுப்பை சேர்ந்தவர்கள் பயன் பெற்றார்கள்.

பின்னர் பொருளாதாரத்தில் பின் தங்கியோருக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்ற மத்திய அரசின் ஆணையை 9 நீதிபதிகள்



அடங்கிய அமர்வு ரத்து செய்தது. அந்த நீதிபதிகளில் ஒருவரான ரத்தினவேல் பாண்டியன் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு ஒட ஒதுக்கீடு வழங்குவது அரசியல் சட்டத்துக்கு எதிரானது என்று தனது தீர்ப்பில் குறிப்பிட் டுள்ளார்.

தமிழ்நாட்டில் தற்போது பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் 69 சதவிகித இடஒதுக்கீட்டை அனுபவித்து வருகிறார்கள். தமிழ்நாடு இதை அமுல்படுத்துவதில் வெற்றி கண்ட மாநிலமாக இருக்கிறது.

பெரியார், அண்ணா, காமராஜர், கலைஞர் உள்ளிட்ட தலைவர்கள் கட்டிக் காத்த சமூக நீதிக்கு எந்த விதப் பாதிப்பும் வந்து விடக் கூடாது. மத்திய அரசு பாராளுமன்ற தேர்தலை கருத்தில் கொண்டு இந்த முயற்சியில் இறங்கி இருக்கிறது.

தமிழக அரசு இந்த இட ஒதுக்கீட்டை கடுமையாக எதிர்ப்பதுடன் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

நேற்றுநான்பேசும்போது, ஸ்டெர்லைட் ஆலை பிரச்சினை பற்றி குறிப்பிட்டேன். இன்று ஸ்டெர்லைட் ஆலையை திறப்பதற்கு மத்திய பசுமை தீர்ப்பாயம் வழங்கிய அனுமதி செல்லும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

தமிழக அரசு அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன். இவ்வாறு மு.க. ஸ்ராலின் கேள்வியெழுப்பியுள்ளார். (4-7)

# கபோன் ஆட்சி
# இருவர் உயி

0

கபோனில் முன்னெடுக்கப்பட்ட ஆட்சிக்கவிழ்ப்பு முறியடிக்கப்பட்டது. இதன் போது பாதுகாப்புத் தரப்பினரால் இருவர் கொல்லப்பட்டதோடு, 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளதாகவும், சகல விடயங்களும் மீளவும் அரச கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டுள்ளதாகவும் அரசாங்க பேச்சாளர் தெரிவித்தார்.

கபோன் ஜனாதிபதி அலி பொங்கோ சுகயீனமுற்றுள்ள நிலையில், இந்த ஆடசிக்கவிழ்ப்பு முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

அரச வானொலி சேவையை கைப்பற்றிய இராணுவத்தினர் தாம் ஆட்சியை கைப்பற்றியதாக அறிவித்திருந்தனர்.

எனினும், சில மணி நேரங்களில் பெருமளவான பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் பொலிஸார் இணைந்து அதனை முறியடித்துள்ளனர்.

அத்தோடு, நாட்டின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இணைய சேவை முடக்கப்பட்டுள்ளதாகவும் அந் நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. (4-7)

# ஸ்டெர்லைட் மூடப்பட வேண்டுமென்பதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது



## முதல்வர் தெரிவிப்பு

(தூத்துக்குடி)

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளதென முதலமைச்சர் பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் பேசிய தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட அமைச்சரவையை கூட்டி கொள்கை முடிவு எடுக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இந்த கோரிக்கைக்கு பதிலளித்து பேசிய முதலமைச்சர் பழனிச்சாமி, "ஆலையை மூடுவதில் அரசு உறுதியாக உள்ளது.

ஊழியர்களுக்கு மாற்று பணி வழங்குவதில் அரசு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அவ்விடயத்தில் தமிழக அரசின் முடிவில் எந்த மாற்றமும் இல்லை" என தெரிவித்தார். (4-7)

# 2019 ஆம் ஆண்டில் ம
# ஆபத்தில் உள்ள 10 ந

சர்வதேச மீட்புக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டில் மனிதாபிமான பேரழிவு ஆபத்தில் உள்ள முதல் பத்து நாடுகளின் பட்டியலில் ஏமன், கொங்கோ ஜனநாயக குடியரசு மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகள் முன்னணி வகிக்கின்றன.

போர்கள், பஞ்சம் மற்றும் பிற பேரழிவுகள் பல நாடுகளிலும் அதிகரித்து வரும் நிலையில் உலகெங்கிலும் மில்லியன் கணக்கான மக்களுக்கு மற்றுமொரு கடினமான ஆண்டாக 2019 அமைவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



பட்டியலிலுள்ள மற்றைய ஏழு நாடுகளாக ஆப்கானிஸ்தான், வெனிசுவேலா, மத்திய ஆபிரிக்க குடியரசு,

# வெளிநாடு

## கம்! 75 பேர் காயம்



தடை ஏற்படுத்தின.

இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. குடிநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. குடிக்க தண்ணீர் இன்றி மக்கள் தவிக்கின்றனர்.

5.9 ரிக்டரில் நில நடுக்கம் பதிவாகியுள்ளது. நில நடுக்கத்துக்கு பிறகு தொடர்ந்து 15 தடவை பூமி அதிர்ந்தது. அவை 3 முதல் 4.8 ரிக்டர் ஆக பதிவானது.

நில நடுக்கம் காரணமாக ஏராளமான வீடுகள், கால்நடை பண்ணைகள் இடிந்து சேதம் அடைந்தன. அதில் 75 பேர் படுகாயம் அடைந்தனர். மற்ற சேத விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை. (4-7)

## பங்களாதேஷ் பிரதமராக ஷேக்ஹசினா பதவியேற்பு



(டாக்கா)

பங்காளதேஷில் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற ஷேக் ஹசினா, மீண்டும் பிரதமராக பதவியேற்றுக் கொண்டார்.

பங்களாதேஷில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் ஷேக் ஹசினா தலைமையிலான அவாமி லீக் கட்சி மற்றும் முன்னாள் பிரதமர் கலிதா ஜியா தலைமையிலான பங்களாதேஷ் தேசியவாத கட்சிகள் மோதின.

மொத்தமுள்ள 300 தொகுதிகளில் ஷேக் ஹசினாவின் அவாமி லீக் கட்சி பெரும்பான்மை இடங்களை கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சி அமைத்தது. அவாமி லீக் கட்சி 281 இடங்களை கைப்பற்றியது.

இதன் மூலம் மூன்றாவது முறையாக பங்களாதேஷ் பிரதமராக ஷேக்ஹசினா ஆட்சி அமைக்கவிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பங்களாதேஷ் பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற ஷேக் ஹசினா, நேற்று முன்தினம் பிரதமராக மீண்டும் பதவியேற்றுக் கொண்டார்.

அவருடன் 46 அமைச்சர்கள் கொண்ட அமைச்சரவையும் பதவியேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## கவிழ்ந்து விபத்து; 4 பேர் மாயம்

மல் போயுள்ளனர்.

ரஷ்யாவிலிருந்து 148 கிலோ மீற்றர் தொலைவில் கருங்கடற்பரப்பிலேயே நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக Samsun மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதன்போது குறித்த படகி லிருந்த ஏழு பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தின் போது காணாமல் போயுள்ள நால்வரையும் தேடும் நடவடிக் கையில் 13 சுழியோடிகள் ஈடுபட்டுள்ளதாகவும் Samsun மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

மேலும், இரண்டு படகுகளும், இரண்டு ஹெலிகொப்டர்களும், ஒரு இராணுவத்திற்கு சொந்தமான விமானம் ஒன்றும் காணாமல் போயுள்ளவர்களை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (4-7)

## ஐ.நா.ஊழல் எதிர்ப்பு ஆணையத்திலிருந்து குவாத்தமாலா அரசாங்கம் விலகல்

### ஜனாதிபதி அறிவிப்பு

(குவாத்தமாலா)

ஐக்கிய நாடுகளின் ஆதரவிலான ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவில் இருந்து விலகுவதாக குவாத்தமாலா அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆணையமானது நாட்டின் உள் விவகாரங்களில் தலையீடு செய்வதாக குற்றம் சாட்டி ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை முதல் விலகியதாக ஜனாதிபதி ஜிம்மி மொறல்ஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி நேற்று முன்தினம் இந்த அறிவிப்பை விடுத்ததாக வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குவாத்தமாலாவிலுள்ள சர்வதேச ஆணையமானது சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகளுக்கு எதிரான வழக்குகளை விசாரணை செய்வதற்கு உதவியாகக் காணப்பட்டது.



இச்சர்வதேச ஆணையத்தின் பதவிக்காலம் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் நிறைவடையவிருந்த நிலையில், தற்போது 9 மாதங்களுக்கு முன்பாக இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## ட்சிக்கவிழ்ப்பு முறியடிப்பு பிரிழப்பு; 7பேர் கைது



## சீன ஜனாதிபதியின் அழைப்பில் கிம் ஜாங் சீனாவிற்கு விஜயம்

(பீஜிங்)

சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங்கின் அழைப்பின் பேரில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்காவிற்கும் வட கொரியாவிற்கும் இடையிலான இரண்டாவது உச்சி மாநாட்டிற்கான பேச்சு வார்த்தைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், அது தொடர்பில் சீனாவின் ஆலோசனைகளை பெறும் வகையிலும், சீனாவுடனான தமது கூட்டணியை பலப்படுத்திக் காட்டும் வகையிலும் இவ்விஜயம் அமைந்துள்ளது.

தனது பாரியார் றி சொல்-ஜு உடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சீனாவை சென்றடைந்த அவர் நாளை மறுதினம் வரை அங்கு தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன ஜனாதிபதிக்கும், வட கொரிய ஜனாதிபதிக்கும் இடையே கடந்த ஆண்டு மூன்று உச்சிமாநாடுகள் இடம்பெற்றிருந்த நிலையில், இது கடந்த ஓராண்டுக்குள் இடம்பெறும் நான்காவது சந்திப்பாகும்.

அமெரிக்கா மற்றும் தென் கொரியாவுடனான இராஜதந்திர பேச்சுவார்த்தைகளின் போது கிம்-மிற்கு பக்கபலமாக செயற்பட்ட வடகொரியாவின் சிரேஷ்ட அதிகாரியான கிம் யாங் சொல்-உம் இவ்விஜயத்தில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## மனிதாபிமான பேரழிவு நாடுகளின் பட்டியல்



சிரியா, நைஜீரியா, எதியோப்பியா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகள் சர்வதேச மீட்புக் குழுவால் பெயரிடப்பட்டுள்ளன.

ஆயுத மோதல்கள் அல்லது பொருளாதார சரிவு உள்ளிட்ட மனிதனால் உருவாக்கப்படும் ஆபத்துகளும் வறட்சி, வெள்ளம் மற்றும் பிற கால நிலை தொடர்பான நிகழ்வுகள் உள்ளிட்ட இயற்கையான ஆபத்துகளும் மனிதாபிமான பேரழிவுகளாக கருதப்படுகின்றன.

உலகெங்கிலும் உள்ள 42 நாடுகளில் கிட்டத்தட்ட 132 மில்லியன் மக்களுக்கு 2019 ஆம் ஆண்டில் பாதுகாப்பு உட்பட மனிதாபிமான உதவி தேவைப்படுமென ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. (4-7)

## உலக வங்கித் தலைவர் ஜிம்யோங்கிம் திடீர் இராஜினாமா

(வோஷிங்டன்)

உலக வங்கியின் தலைவர் ஜிம் யோங் கிம், தனது பதவிக்காலம் முடிய இன்னும் மூன்று ஆண்டுகள் உள்ள நிலையில் அதற்கு முன்னரே பதவி விலகுவதாக திடீரென அறிவித்துள்ளார். ஜனவரி 31 அன்று அவர் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

உலக வங்கியின் மீது அமெரிக்கா ஆதிக்கம் செலுத்துவதாக மற்ற நாடுகள் குற்றச்சாட்டுகள் எழுப்பிவரும் நிலையில் ட்ரம்ப் நிர்வாகத்திற்கும் உலக வங்கிக்கும் கடுமையான போர் நடைபெற்று வருகின்றன.

சீனா மற்றும் ஆசிய நாடுகள் உள்ளிட்ட மற்ற நாடுகள், வங்கியின் தற்போதைய நிலையைப் பற்றி விமர்சனம் செய்து வருகின்றன. இந்நிலையில் ஜிம் யோங் கிம்மின் திடீர் இராஜினாமா உலக நாடுகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

நாடுகளின் வளர்ச்சிக்காக குறைந்த வட்டியில் உலகம் முழுவதும் கடன் தருவதற்கான மிகப்பெரிய அரசு நிதியாதாரமாக செயற்பட்டுவரும் இவ்வங்கி வோஷிங்டனை தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. உலகை வங்கியில் அமெரிக்கா மிகப்பெரிய பங்குதாரராக விளங்குகிறது.

இந்நிலையில், கிம் உலக வங்கிப் பதவியிலிருந்து புறப்படுவது ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை அவரது சொந்த விருப்பத்தில் உலக வங்கிப் பதவியில் புதியதாக ஒருவரை நியமிக்கும் வாய்ப்பை வழங்கும்.

உலக வங்கியின் 12வது தலைவர் பொறுப்புக்கு வந்த கிம், தன் பதவிக்காலத்தில் சிரிய அகதிகளின் நெருக்கடிகளை சமாளிப்பது, ட்ரம்ப் நிர்வாகத் தலையீடு உள்ளிட்ட நிறைய நெருக்கடிகளை சந்தித்துவிட்டார்.



பழைமை வாய்ந்த டார்ட்மவுத் ஆய்வுக் கல்லூரியின் தலைவராக விளங்கிய கிம்"மை 2012ல்தான் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உலக வங்கியின் தலைவராக முதன் முதலில் அமர வைத்தார்.

மீண்டும் 2016ல் ஒபாமா அவரையே உலக வங்கி தலைவராக பணியைத்தொடர பரிந்துரைத்தார்.. இந்த முறை பதவிக் காலம் வரும் 2022 ஜூன் 30 வரை உள்ளமை குறிப்பிடத்தக்கது.(4-7)

# 2020 இல் ஜே.ஆர்.காலத்தில் காணப்பட்ட திறமையான அமைச்சரவையுடன் ஆட்சி

## சுஜீவ சேனசிங்க நம்பிக்கை



(கொழும்பு)

அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர்களை நியமிப்பதில் எழுந்துள்ள சிக்கல் நிலைக்கு கலந்துரையாடல்களின் மூலமே இறுதித் தீர்மானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு இல்லாவிட்டால் இது தொடர்பில் நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பெற்றுக் கொள்ளும் நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளதாக அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுஜீவ சேனசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அபிவிருத்திகளை துரிதகதியில் மேற்கொள்ள வேண்டுமானால் எத்தனை அமைச்சுக்களை வேண்டுமானாலும் நியமித்துக்கொள்ளலாம்.

எனினும் அரசாங்கத்தின் செலவுகள் குறைத்துக் கொள்ளப்பட வேண்டுமானால் அமைச்சுக்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவது சாதகமாகவே அமையும். எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்தில் காணப்பட்டது போன்று திறமையான அமைச்சரவையை ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் உருவாக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சாதாரண தரப் பரீட்சை சித்தியடைந்தவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்

## முன்னாள் கல்வியமைச்சருக்கு இந்நாள் கல்வியமைச்சர் பதில்





(கொழும்பு)

சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த அனைவரும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். அவர்கள் தனியார், சர்வதேச மற்றும் அரச பாடசாலை என எந்த முறைமையில் பரீட்சைக்குத் தோற்றினாலும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அவர்களின் பெறுபேறுகளை வெளியிடுவதோடு, அதனடிப்படையிலேயே தேசிய ரீதியிலான தரப்படுத்தலையும் மேற்கொள்ளும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

சர்வதேச பாடசாலையொன்றின் மூலம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவியொருவர் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றிருந்தார். சர்வதேச பாடசாலை பரீட்சார்த்தியொருவரை அரச பாடசாலைகளினூடாகப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளினுடன் இணைத்து தரப்படுத்தியமை தவறு என முன்னாள் கல்வியமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்தார்.

அவருடைய கருத்திற்குப் பதிலளிக்கும் வகையிலும் அது தொடர்பில் விளக்கமளிப்பதற்கும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கல்வி அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பின் போதே கல்வியமைச்சர் காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கடந்த வாரம் வெளியிட்ட கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் குறித்து வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டிருந்தார். சர்வதேச பாடசாலையொன்றின் மூலம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்த மாணவியொருவர் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தை பெற்றிருந்தமை தொடர்பிலேயே அவர் இவ்வாறு கருத்துக் களை வெளியிட்டிருந்தார்.

தற்போதைய கல்வி அமைச்சர் என்ற அடிப்படையில் அவரால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் முற்றிலும் தவறானவை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த காலங்களில் அவரும் கல்வி அமைச்சராக செயற்பட்டிருக்கின்றார்.

எனவே அவர் அவ்வாறான கருத்துக்களை வெளியிட்டுள்ளமை அசாதாரணமானதாகும் என காரியவசம் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐந்து மாடுகள் பலி! மாணவனுக்கு காயம்



(ஏறாவூர்)

ஆளுநரின் பதவியேற்புக்காக ஆதரவாளர்கள் பயணித்த வான் மோதுண்டதில் 5 மாடுகள் பலியானதுடன் பாடசாலை மாணவனுக்கும் காயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையின் தியாவட்டவான் பிரதேசத்தில் வான் மோதுண்டதில் வீதியில் நடமாடிய 5 மாடுகள் பலியாகியுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம்மாலை ஓட்டமாவடி பாலத்தை அண்மித்தத-ாக தியாவட்டவான் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புதிய ஆளுநரின் பதவியேற்புக்காக ஆதரவாளர்கள் பயணித்த வான் திருகோணமலையிலிருந்து காத்தான்குடி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது வீதியில் நடமாடிய கட்டாக்காலி மாடுகள் மீது மோதியதிலேயே 5 மாடுகள் உயிரிழந்துள்ளன.

வானின் முன் பக்கம் நொறுங்கியுள்ளதுடன், விபத்தில் சிக்கிய 14 வயது பாடசாலை மாணவன் ஒருவனுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் வாழைச்சேனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

### தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உடல்நலம் உங்கள் கையில்

அதோ போய்க்கொண்டிருக்கிறாரே! அவர் கையும் சுத்தம்! வாயும் சுத்தம்! அப்படி என்றால் என்ன அர்த்தம்? அவர் கையையும் வாயையும் சோப்புப் போட்டுக் கழுவி சுத்தமாக வைத்திருக்கிறார் என்றா அர்த்தம்? அப்படி இல்லை!

வாய் சுத்தம் என்றால் சொன்ன சொல் தவறாதவர்! கை சுத்தம் என்றால் இலஞ்சம் வாங்காதவர்! கை சுத்தமாக இருந்தால் யாருமே கவலைப்பட வேண்டியதில்லை! மருத்துவ ரீதியாகவும் இது உண்மை!

இப்ப சாதாரணமாக உடம்பு சரியில்லை என்று டாக்டரிடம் போனால் நாக்கை நீட்டச் சொல்லிப் பார்ப்பது வழக்கம்! சில அமெரிக்க டாக்டர்கள் இப்போதெல்லாம் கையைக் கவனித்துப் பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள்!

"கைகள் உடம்பில் உள்ள கோளாறுகளைக் காட்டும் கண்ணாடிகள்" என்று அவர்கள் சொல்கிறார்கள்!

நோயாளியினுடைய உடல்நிலையை மட்டுமல்ல மனநிலையையும் கையிலேயிருந்து கண்டுபிடித்து விடலாம். ஒரு மனிதன் பேசும்போது அவன் சொல்வதைவிட கையிலேயிருந்து அதிகமான விடயத்தைத் தெரிந்துகொள்ள முடியுமாம்!

படபடப்பாக இருக்கும் ஒருத்தர் கையைப் போட்டுப் பிசைவது உண்டு. சில பேர் "கையில் என்னென்ன நகை போட்டிருக்கிறேன் பார்!" என்பதை அவர்கள் கையே நம்மிடம் சொல்லாமல் சொல்லிவிடும்!

ஒருத்தர் அரைகுறையான சம்மதத்தோடு "சரி! அப்படியே செய்கிறேன்!" என்று வாயாலே சொல்கிறார் என்று வையுங்கள்! அவர் அப்படி செய்யப்போவது இல்லை என்பதை அவருடைய கை காட்டிவிடுமாம்!

பெரும்பாலான விபத்துக்களில் "கை" தான் சேதமாகுதாம்! விரலில் நகம் இருக்கிறது அல்லவா... அதைப் பார்த்துவிட்டு உடம்பைப் பற்றிப் பல விடயங்களைத் தெரிந்து கொள்ளலாம்!

ஒரு நோயாளி டாக்டரிடம் வந்தார். "டாக்டர்... எனக்கு உடம்பு..." என்று ஆரம்பித்தார். "அதெல்லாம் இருக்கட்டும்... முதலில் உங்கள் நுரையீரலில் கோளாறு இருக்கிறது... உடனே ஒரு நுரையீரல் நிபுணரிடம் போங்கள்!" என்றார் அவர்.

"இவர் என்ன வைத்தியரா? ஜோசியரா?" என்று வந்தவருக்குச் சந்தேகம்! எப்படித் தெரிந்தது அவருக்கு? வேறு ஒன்றுமில்லை! அந்த நோயாளியினுடைய கைவிரல் முனைகள் குமிழ் மாதிரிப் பெருத்திருந்தது! Club finger என்று சொல்வது இதை! நகங்களில் மங்கலான நீல நிறமும் சாம்பல் நிறமும் தெரிந்தது. அவ்வளவுதான். இது மாதிரிக் குழந்தைகளுக்கு இருந்தால் இதயத்தில் பிறவிக்கோளாறு என்று ஊகித்து விடலாம்.

பெரியவர்களுக்கு அப்படி இருந்தால் நுரையீரலில் கோளாறு என்று அர்த்தம். Emphysema! சில சமயம் புற்றுநோயாகக் கூட இருக்கலாம். கையிலே நிறம் மாறுவது ஒரு முக்கியமான அறிகுறி. உள்ளங்கையிலே வழக்கத்துக்கு மாறாக மஞ்சள் நிறம் தெரிந்தால் என்ன அர்த்தம் தெரியுமா?

இரத்தத்தில் கொலஸ்ட்ரேரல், டிரைகிளிசரைடு இது எல்லாம் அதிகமாகச் சேர்ந்து Hyperlipo Proteinemia என்னும் கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தம்!

ஒரு நோயாளியினுடைய கை அளவுக்கு மீறி சிவப்பாக இருந்தால் Pulmar Erythema என்னும் கோளாறு இருக்கலாம். கருவுற்ற பெண்களுக்கு உள்ளங்கை சிவந்து இருப்பதுண்டு. அதனால் தவறு இல்லை!

ஆனால் மற்றப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் உள்ளங்கை அளவுக்கு மீறி சிவந்து இருந்தால் ஈரலில் "சிர்ரோசிஸ்" என்னும் கோளாறு இருக்கலாம். விரல் நகத்தில் வெள்ளைப்புள்ளி இருந்தால் இரத்தத்தில் ஏதோ குறை! நகம் வெளுத்திருந்தால் இரத்தச் சோகை!

ஒரு பெண் வைத்தியர். அவரைச் சந்திப்பதற்கு ஒருபெண் வந்தார். கைகுலுக்கிய சமயத்திலேயே அந்தப் பெண்ணுக்கு மூட்டுவாதம் ஆரம்ப நிலை என்பதைக் கண்டுபிடித்து விட்டார்! எப்படி! பிடி வலுவில்லாமல் இருந்து!

உள்ளங்கை லேசாக ஈரமாக இருந்து! தோல் மெல்லியதாக இருந்தது! கதகதப்பாக இருந்தது! அவ்வளவுதான்! நோயைக் கண்டுபிடித்தாச்சு. ஒருபெரியவர் தன் பிள்ளையின் கைவிரலைத் தொட்டுப்பார்த்துவிட்டு "மகனே! சிகரெட் பிடிக்கிறியா?" என்று கேட்டார்.

"கிடையவே கிடையாது அப்பா!" என்றான் பையன். "மகனே! நீ பொய் சொல்லலாம்! உன் விரல் பொய் சொல்லாது! உன் விரலில் நிக்கோட்டினால் ஏற்படும் மஞ்சள் கரை இல்லாமல் இருக்கலாம்! ஆனாலும் உன் விரல் நுனிகள் ஜில் என்று இருக்கிறது.

புகைப்பிடிப்பதனால் விரல் நுனியில் உள்ள இரத்தக் குழாய்கள் அடைபட்டுப் போகிறது. அதனால் இப்படி ஆகிவிடுகிறது. சிகரெட் உன் உடம்பைப் பாதிக்க ஆரம்பித்து விட்டது... உடனே நிறுத்தி விடு! நான் சொல்வதைக் கேட்கவில்லை என்றாலும் உன் விரல் சொல்வதைக் கேள்!" என்று புத்தி சொல்லிவிட்டு அப்பா கேட்டார், "அதுசரி மகனே! தினமும் உனக்குச் சிகரெட் எங்கேயிருந்து கிடைக்கிறது?" என்றார்.

"உங்க பொக்கெட்லேயிருந்து தான் அப்பா எடுக்கிறேன்!" என்றான் பையன்! புத்தி சொல்லுகிறவர்கள் இப்படி இருந்தால் கேட்பவர்கள் எப்படி சேர் சரியாகக் கேட்பார்கள்?

# புத்தாண்டுப் பலன்கள் -2019



கற்ற கல்வியை விடப் பெற்ற அனுபவமே வழிகாட்டும் என்று சொல்லும் மகர இராசி வாசகர்களே!

பிறக்கும் புத்தாண்டு ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கத்தோடு பிறக்கின்றது. மேலும் ஜென்மத்தில் கேதுவும், 7இல் ராகுவும் அமர்ந்து புத்தாண்டு தொடங்குகின்றது. 12 ஆம் இடத்தில் மூன்று கிரகங்களின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கின்றது. குறிப்பாக விரயச் சனியின் ஆதிக்கம் விரயத்தை அதிகரிக்கச் செய்யும். சுப விரயங்களை நீங்கள் மேற்கொண்டால் வீண் விரயங்களில் இருந்து தப்பிக்க இயலும்.

சகாய ஸ்தானாதிபதி குரு இலாபயமும், தன்னம்பிக்கையும் கூடும். அரசியல் பிரமுகர்களின் ஒத்துழைப்பால் அனுகூலங்கள் கிடைக்கும்.

குருமங்கள யோகம் இருப்பதால் மாலை சூடும் யோகமும் வேலை கிடைக்கும் யோகமும் மக்கள் செல்வாக்கோடு வாழ்க்கை நடத்தும் வாய்ப்பும் கிட்டும் நேரமிது. ஆரோக்கியத் தொல்லை அலை மாற்று மருத்துவம் கைகொடுக்கும். விரயச்சனியோடு சூரியனும் புதனும் இணைந்திருக்கின்றார்கள். இது நன்ன்மைதான். புத ஆதித்ய யோகம் செயற்படுவதால் கல்விக்காக நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். படிப்பில் முழுமையாக ஈடுபட்டிருக்கும் பிள்ளைகள் தேர்ச்சி பெற்று மேற்படிப்பைத் தொடர வெளிநாடு செல்லலாமா? என்று யோசிப்பீர்கள். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் திடீரென மாற்றப்படலாம்.

பயணங்களால் நன்மை கிடைக்கும். 12 இல் சனி சஞ்சரிக்கும் போது ஒவ்வொரு நாளும் தொழில் ரீதியாகப் பயணங்கள் அதிகரிக்கும். வேலை ஆட்களால் ஏற்பட்ட பிரச்சினை ஓயும். தொழில் ஸ்தானத்தில் சுக்கிரன் சந்திரனோடு இணைந்திருப்பதால் தொழிலில் ஏற்ற இறக்கமிருக்காது.

**ராகு-கேது பெயர்ச்சிக்காலம்**

ஆண்டின் தொடக்கத்தில், கடகத்தில் ராகு, மகரத்தில் கேது சஞ்சரிக்கிறார்கள். பெப்ரவரி 13 ஆம் திகதி அன்று ராகு-கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்

ஒக்டோபர் 28 ஆம் திகதி குருப்பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. இதுவரை உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான், இப்பொழுது விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். உங்களுக்கு விரயாதிபதியாகவும், சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்குபவர் வியாழன். அவர் இப்பொழுது விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது நல்ல விரயங்களைச் செய்யும் சூழ்நிலை உருவாகும். ஆரோக்கியத் தொல்லை அகல மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. கல்வி பயிலவும், கடல் தாண்டும் முயற்சிக்கும் ஒரு பெருந்தொகையைச் செலவிடுவீர்கள். உத்தியோகத்தில் திடீர் இடமாற்றங்களும், பதவி உயர்வுகளும் கூட ஒருசிலருக்கு கிடைக்கும்.

குருவின் பார்வை பலம் 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிகின்றது. சுகம், தாய்,



**மகரம்**

உத்திராடம் 2,3,4-ம் பாதம்
திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதம்

தரும். பெண் வழிப்பிரச்சினை தலைதூக்கும்.

5.6.2019 முதல் 29.6.2019 வரை ரிஷப சுக்கிரனை விருச்சிக குரு பார்க்கின்றார். இந்த முரண்பாடான கிரகப் பார்வைக் காலம் மிகுந்த நன்மை தரும். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. உடல்நலம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். பழைய வாகனங்களைக் கொடுத்துப் புதிய வாகனங்களை வாங்கும் யோகம் உண்டு. அலுவலகப் பணி துரிதமாக நடைபெறும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுகள் கைகூடும். பெற்றோர்களின் மணி விழாக்கள் சிறப்பாக நடைபெறும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு திடீரெனத் தலைமைப் பொறுப்புகள் வரலாம்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

சங்கடஹர சதுர்த்தியன்று விரதம் இருந்து விநாயகரை வழிபட்டு வருவதோடு சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பிள்ளையார்பட்டிக்கு வந்து கற்பக விநாயகரை வழிபட்டு கவலைகளை போக்கிக்கொள்ளுங்கள்.

**சனியின் வக்கிர காலம்**

8.5.2019 முதல் 3.9.2019 வரை தனுசு இராசியில் பூராட நட்சத்திரக் காலில் சனி வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தில் நிலையான வருமானம் உங்களுக்கு கிடைக்குமா?

## கேது மாற்றம் பெரும் மாற்றம் தரும், கேட்ட உதவிகள் இனி கிடைக்கும்!

ஸ்தானத்தில் இப்பொழுது சஞ்சரிப்பதால் வரவு திருப்தி தரும். இருப்பினும் சனி ஆதிக்கம் நடைபெறும் பொழுது கடன் வாங்கும் சூழ்நிலை பலருக்கும் இருக்கும்.

எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டிருப்பவர்கள் நீங்கள். அதிகமாக மக்கள் கூடும் இடங்களில் நீங்கள் பின்னணியாக இருப்பீர்கள். இரக்க சுபாவம் இயற்கையாகவே உங்களுக்கு அமைந்திருப்பதால் இயன்ற அளவு பிறருக்கு உதவி செய்வீர்கள்.

**புத்தாண்டின் தொடக்க நிலை**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசியில் கேதுவும் சப்தம ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிக்கின்றார்கள். எனவே சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் சிக்கியிருக்கிறீர்கள். வருடம் தொடங்கி ஒன்றரை மாதத்தில் அதாவது பெப்ரவரி 13 ஆம் திகதி ராகு-கேதுக்கள் மாற்றமடைகின்றன.

இந்தப் புத்தாண்டில் ஜென்ம கேதுவின் ஆதிக்கத்தால் இடமாற்றம், வீடு மாற்றம் போன்ற மாற்றங்கள் நிகழலாம். ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறும்பொழுது இடமாற்றம் செய்வதன் மூலம் தோஷங்களில் இருந்து விடுபட இயலும். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது உத்தியோகத்தில் இருப்பவர்களாக இருந்தால் அவர்களுக்கு வெளிநாட்டு முயற்சி கைகூடும். அதிகாரிகளின் அனுகூலத்தோடு அனைத்துக் காரியங்களிலும் வெற்றி பெறுவர்.

வருடத் தொடக்கம் முதல் பெப்ரவரி 13 ஆம் திகதிக்குள் ஒரு நல்ல மாற்றம் வரப்போகின்றது. பணவரவு திருப்திகரமாக இருக்கும். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். செவ்வாய் சகாய ஸ்தானத்தில் 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். அவரை லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் பார்க்கின்றார். எனவே மனப்பயம் அகலும். தைரி

கின்றது. குறிப்பாக 6 இல் ராகு சஞ்சரிப்பதால் அஷ்ட லட்சுமியின் அருள் கிடைக்கும். 12 இல் கேது பயணிப்பதால் பண விரயம் ஏற்பட்டாலும் அது சுபவிரயமாக மாறும்.

கருநாகம் 6 இல் வந்தால் கடும்பகை மாறும், வருமானம் திருப்தியாகும், வசந்தமும் வாழ்வில் வந்து சேரும் என்பர். எனவே பணப்புழக்கம் நன்றாக இருக்கும். மனக்குழப்பம் அகன்று தெளிவாக சிந்திப்பீர்கள்.

தொழில் வளர்ச்சியில் இருந்த இடையூறுகள் அகலும். தொல்லை தந்த எதிரிகளின் பலம் குறையும். வழக்குகள் சாதகமாகும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். அறுவை சிகிச்சையில்லாமல் சாதாரண சிகிச்சையிலேயே ஆரோக்கியம் சீராகும். வியாபாரத்தில் புதிய கூட்டாளிகள் வந்திணைந்து பொருளாதார நிலையை உயர்த்திக் கொடுப்பர்.

வருடத்தொடக்கத்தில் ஜென்மத்தில் இருக்கும் கேது, இப்பொழுது 12ஆம் இடத்தில் பயணிக்கப் போகின்றார். எனவே பயண வாய்ப்புகள் கைகூடும். பல நாட்களாக எதிர்பார்த்த பாகப்பிரிவினைகள் இப்பொழுது நல்ல முடிவிற்கு வரும். வங்கிகளில் கடன் உதவி பெற்று வாகனம் வாங்கலாம், வீடு வாங்கலாம் என்றெல்லாம் திட்டம் தீட்டியவர்களுக்கு இதுவரை தாமதித்து வந்த நிலை இனி மாறும். புதிய கூட்டாளிகள் வந்திணைந்து தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர்.

12 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் ஆன்மீகப் பயணங்கள்-அதிகரிக்கும். குலதெய்வப் பிரார்த்தனைகள், இஷ்ட தெய்வப் பிரார்த்தனைகள், முன்னோர் வழிபாடு, ஸ்தல யாத்திரைகள் போன்றவற்றில் ஆர்வம் காட்டும் நேரமிது. குடும்பத்தில் சுபகாரிய நிகழ்வுகள் படிப்படியாக நடைபெறும். அரைகுறையாக நின்ற கட்டடப் பணியும் தொடரும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

வாகனம், வீடு, இடம் போன்றவற்றை குறிக்கும் இடமான நான்காம் இடத்தையும், எதிர்ப்பு, வியாதி, கடனை குறிக்கும் 6 ஆம் இடத்தையும் இழப்புகளையும் ஆரோக்கியத்தையும் குறிக்கும் 8 ஆம் இடத்தையும் குருபார்ப்பதால் அந்த 3 இடங்களும் புனிதமடைகின்றன. எனவே மேற்கண்ட அனைத்து ஆதிபத்யங்களும் உங்களுக்கு நன்மை தருவதாக அமையப்போகின்றது. குறிப்பாக வழக்குகளில் வெற்றி கிடைக்கும். புதிய உத்தியோக வாய்ப்புகளுக்கு முயற்சி செய்தவர்களுக்கு அது கைகூடும். தொலைதூரப் பயணங்களால் இலாபம் உண்டு.

**குருவின் அதிசாரமும் வக்கிரமும்**

ஆண்டின் தொடக்கத்தில் விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் அதிசாரமாக மார்ச் 13 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கின்றார். இடையில் வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். உங்கள் இராசி அடிப்படையில் விரயாதிபதியாக குரு இருப்பதால் இக்காலத்தில் இனிய பலன்கள் ஏராளம் நடக்கும். இடையூறு, எதிர்ப்பு, ஏமாற்றம், வேதனை என்றெல்லாம் இருந்த நிலை மாறி அந்தக் காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

அதேநேரத்தில் 3 ஆம் இடத்திற்கும் குரு அதிபதியாக வருவதால் உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளமாட்டார்கள். எனவே அவர்களை அனுசரித்துச் செல்வதுதான் நல்லது.

**கவனமுடன் செயல்பட வேண்டிய காலம்**

7.5.2019 முதல் 24.6.2019 வரை சனி. செவ்வாய் பார்வைக் காலமாகும். இக்காலத்தில் மிதுனச் செவ்வாயை தனுசு சனி பார்க்கின்றது. முரண்பாடான கிரகங்களின் பார்வையால் முன்னேற்றங்களில் முட்டுக்கட்டை ஏற்படலாம். மண், மனை விற்பனையில் ஏமாற்றம் என்பது சந்தேகம் தான். பற்றாக்குறை பட்ஜெட் உருவாகும். சிலருக்கு கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம். வம்பு, வழக்குகள் தானே தேடிவரும். பிறருக்கு நன்மை செய்தால் கூட அது தீமையாகத் தெரியலாம். ஆரோக்கியத் தொல்லை அகல அதிக செலவு செய்வீர்கள். இக்காலத்தில் சனி கவசம் பாடி, சனியை வழிபடுவதோடு திருநள்ளாறு, பெரிச்சிக் கோவில், குச்சனூர் போன்ற சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

மகர இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தப் புத்தாண்டின் தொடக்கத்தில் வருமானப் பெருக்கத்திற்கு வழிபிறக்கும். பொருளாதார முன்னேற்றத்தில் கடன் தொல்லைகள் அகலும். கணவுன்-மனைவி இடையே அன்பும், ஆதரவும் கூடும். ஏழரைச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுகளை தீவிரமாகப் பேசி முடிப்பது நல்லது. பிள்ளைகள் வழியில் நல்ல தகவல் வந்து சேரும்.

தாய்வழி அனுகூலம் உண்டு. வீட்டிற்குத் தேவையான மிக்ஸி, கிரைண்டர் போன்ற மின்சாதனப் பொருட்களை, பழையதைக் கொடுத்து விட்டு புதியதை வாங்கி மகிழ்வீர்கள். அதேபோல அணிந்திருக்கும் ஆபரணங்களையும் கொடுத்துவிட்டுப் புதிய ஆபரணங்களை வாங்கி மகிழ்-வீர்கள்.

பணி புரியும் இடத்தில் இருந்த சிக்கல்கள் அகலும். உத்தியோகத்தில் ஏப்ரல் மாதத்திற்கு பிறகு எதிர்பார்த்த இடமாற்றங்கள் அமையும். வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரும். இனிய வாழ்வமைய குலதெய்வ வழிபாட்டையும், விநாயகப் பெருமான் வழிபாட்டையும் மேற் கொள்வது நல்லது.

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

# 'நாளொன்றுக்கு 16 மணித்தியாலங்கள் மக்களுக்காக செலவிடும் ஜனாதிபதி'

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் சிறந்த தலைவரெனவும் இவர் நாளாந்தம் மக்களுக்காக .16 மணித்தியாலங்கள் கடமையாற்றுகின்றாரெனவும், ஜனாதிபதியின் முன்னாள் பிரத்தியேகச் செயலாளர் எரிக் வீரவர்த்தன தெரிவித்துள்ளார்.



அத்துடன் அரசியலில் ஈடுபடுவதற்காகவே தான் ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளர் பதவியிலிருந்து விலகியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச்சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் தான் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்துள்ளதாகவும், ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளராகக் கடமையாற்றிக் கொண்டு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முடியாதென்பதால், ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளர் பதவியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளதுடன், பிரத்தியேகச் செயலாளர் பதவியிலிருந்து விலகினாலும் ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளராகக் கடமையாற்றுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)




கேலிச்சித்திரம்

# ஜனநாயக விரோத அதிகார மோகத்தால் அபிவிருத்திகளின்றி நாடு ஸ்தம்பிதம்

## கிழக்கின் முன்னாள் முதல்வர் காட்டம்

(ஏறாவூர்)

ஜனநாயக விரோத அதிகார மோகத்தினாலேயே நாடு தற்போது அபிவிருத்திகளின்றியும் முதலீடுகளின்றியும் முடங்கிப் போயுள்ள தாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்தார். தற்போதைய அரசியல் ஸ்திரத்தன்மையற்ற சூழ்நிலையில் நாட்டின் முதலீட்டுப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று செவ்வாய்க் கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

அரசியலமைப்பின் பிரகாரம் நாட்டின் ஜனநாயகம், மனித உரிமைகள், மக்களின் பாதுகாப்பு, மக்களாட்சி என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அவை ஓரளவுக்கு நமது அரசியலமைப்பின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தாலும் இனவாத அரசியல் மேலாண்மைத்தனம் காரணமாக இவற்றை உறுதிப்படுத்த ஆட்சியாளர்கள் தவறிக் கொண்டே வருகின்றனர்.



அரசியலமைப்பின் பிரகாரம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தாது இழுத்தடித்துக் கொண்டே வருவது இதற்கு ஒரு உதாரணமாகும்.

இது ஒரு ஜனநாயக விரோத செயற்பாடாகவும் பார்க்கப்பட வேண்டியுள்ளது.

நாட்டின் ஒன்பது மாகாண சபைகளில் தற்போது ஆறு மாகாண சபைகளின் ஆட்சிக்காலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு பல மாதங்கள் கடந்து விட்டன.

அதிலும், கிழக்கு, வட மத்திய, சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளின் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இப்பெழுது ஒன்றரை வருடங்கள் கழிந்தும் விட்டன.

ஆனால், குறிப்பிட்ட மாகாணங்களில் மக்களாட்சி இல்லாதது பற்றி அரசாங்கம் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தாது இழுத்தடிப்பதன் மூலம் மக்களாட்சியைக் கேலிக் கூத்தாக்கிவிட்டு மத்தியில் நல்லாட்சி நிலவுகிறது என்று கூறுவதில் எந்தவித அர்த்தமும் இல்லை.

கலப்புத் தேர்தல் முறையைக் கொண்டு வந்து கபட நாடகமாட எடுக்கப்படும் முயற்சியில் குறிப்பாக முஸ்லிம்களின் பிரதி நிதிதுவம் முழுமையாக இல்லாமற் செய்யப்படுகின்றது.

எனவே, அரசாங்கம் பழைய விகிதார பிரதிநிதித்துவ முறையின்படி தேர்தல்களை நடத்தி சிறுபான்மையினருக்குள்ள ஜனநாயகத்தை உயிர்ப்பூட்ட உதவ வேண்டும்.

நாட்டில் முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது தேர்தல்கள் பிற்போடப்பட்டு வருகின்றன.

இந்த ஜனநாயக மறுப்பு நிலை முடிவுக்குக் கொண்டு வரப்படாவிட்டால் மக்கள் அணிதிரள வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, இதுபற்றி அரசாங்கம் முக்கியத்துவமளித்துச் சிந்திக்க வேண்டும்" என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உற்பத்தி, சந்தைப் பொருளாதாரம், கைத் தொழில் வர்த்தக முதலீடுகள், புதிய ஊக்குவிப்புக்கள் எதுவுமின்றி தற்போதைய பொருளாதாரம் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இது நாட்டின் எதிர்காலத்திற்கு உகந்ததல்ல. நிலைமை இப்படியே தொடருமாயின் நாடு அபிவிருத்திகளின்றி வறுமை நிலைக்குப் பின்னோக்கிச் செல்லும் என்றும் அவர் தனது அறிக்கையில் எச்சரித்துள்ளார். (இ-7)

# பெற்றோலிய கூட்டுத்தாபன சம்பவம் மாநகர உறுப்பினர் விளக்கமறியலில்

(கொழும்பு)

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட கொழும்பு மாநகர சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர் கே.ஜி குலதிஸ்ஸவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த நபரை நாளை மறுதினம் 11 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜெயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த 6 ஆம் திகதி இரவு கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி தெமடகொட பகுதியிலுள்ள பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நுழைந்த சந்தர்ப்பத்தில் பதற்ற நிலைமையை உருவாக்கியதற்காகவே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

# "மாகாணத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்"

(ஏறாவூர்)

ஒரு பொறிமுறையின் கீழ் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி மற்றும் பிரதமர் மேற்கொள்ள வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி. துரைராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு, திசவீரசிங்கம் சதுக்கத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு ஒரு வருடமும் நான்கு மாதங்களும் கடந்துள்ள நிலையில் கூட மாகாணசபைத் தேர்தல் தொடர்பான சரியான முடிவினை இன்னும் வெளியிடவில்லை.

தேர்தல் திணைக்களம் இது தொடர்பில் அக்கறை காட்டினாலும் கூட அரசாங்கம் எந்த அக்கறையும் எடுக்கவில்லை.

அண்மையில் தேர்தல் திணைக்கள ஆணையாளர், மாகாணசபைத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதற்கான அழுத்தங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்க வேண்டும் என வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

மாகாணசபையின் தலைவிதி தற்போது நாடாளுமன்றத்தில் உள்ளது என்ற நிலையே தற்போது காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணசபை கலைக்கப்படவிருந்த காலப் பகுதியில் 20 ஆவது திருத்தச்சட்டம் மூலம் கிழக்கு மாகாணசபையின் ஆட்சிக் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பது தொடர்பில் ஆராயப்பட்டபோது அது மக்கள் ஆணையை மீறும் செயற்பாடா? என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

எனினும், அந்த 20 ஆவது திருத்தத்தில் இன்னும் திருத்தங்களை செய்து குறிப்பிட்ட காலத்திற்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கான வாய்ப்புக்கள் இருந்ததன் காரணமாக 37 உறுப்பினர்களை கொண்டு ஆளப்படும் மாகாணத்தைத் தனி ஆளுநரின் கைகளில் வழங்குவது என்பது மக்களின் அதிகாரங்களை எல்லாம் ஒருவரிடம் வழங்கும் செயற்பாடாக அமையும் என்பதால் கிழக்கு மாகாணசபையில் 20 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரித்தோம்.

புதிய சட்டத்தின் மூலம் தேர்தல் நடைபெறவேண்டுமானால் எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஆனால் எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தி இருப்பதன் காரணமாக அந்தத் திருத்தத்தினை உடனடியாகக் கொண்டு வரமுடியாத நிலையுள்ளது.

பழைய முறையின் அடிப்படையில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அநேகமானவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான அறிக்கையொன்றை 'வழங்கும் வகையில் பிரதமர் தலைமையிலான குழுவொன்று அமைக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றது.

பழைய முறைக்கு செல்வதென்றாலும் சட்டமூலம் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டு சட்டமாக்கப்பட வேண்டும்.

பார்க்கப்போனால் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் தள்ளிச் சென்று கொண்டிருக்கும் நிலையே காணப்படுகின்றன.

இது ஜனநாயகத்தைக் கேள்விக்குறியாக்கும் நிலையாகும். எனவே ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் ஒரு பொறிமுறையைக் கையாண்டு மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கு முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

140



"கிறிஸ்தவ எதிர்ப்புணர்வுகள் ஊற்றெடுக்க ஆரம்பித்து இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறிஸ்தவ எதிர்ப்பியக்கமாக உருவெடுத்து ஈற்றில் ஆறுமுக நாவலரால் வழிநடத்தப்பட்ட சைவ மறுமலர்ச்சி இயக்கமாக மேலெழுந்து மிஷனரிமாரின் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராகப் போராடும் நிலை ஏற்பட்டது"

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

வேதாகம வகுப்புக்களை நடத்துவதையும் மக்களிடையில் அதைப்பற்றிய அறிவைப் பரப்புவதையும் நோக்கமாகக் கொண்ட யாழ்ப்பாணம் உப வேதாகமச் சங்கம் (Auxilliary Bible Society) அமைக்கப்பட்டது.

இச்சங்கத்தின் 1847 ஆம் ஆண்டு அறிக்கையில் பழைய, புதிய ஏற்பாடுகளின் தமிழ் மொழியிலான மீள்பதிப்பு இச்சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது எனக் காணப்படுகின்றது. மேலும் 1846 ஆம் வருடத்தில் நீதி மொழிகள் புத்தகத்தில் இருபது பிரதிகளும் ரோமருக்கு எழுதிய நிருபங்களில் இருபது பிரதிகளும் அச்சிடப்பட்டதுடன் 7372 வேதாகமப் புத்தகங்கள் முழுமையாகவும் பகுதிகளாகவும் ஆங்கில, தமிழ்மொழிகளில் விநியோகிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் சுதேசிகள் அபிவிருத்திச் சங்கம் (Jaffna Native Improvement Society) என்ற மேலுமொரு சங்கம் 1843 இல் நிறுவப்பட்டது. அமெரிக்கன் சிலோன் மிஷனையும் வகுப்பு, சாதி வித்தியாசங்கள் பார்க்காது பறங்கியரையும் உள்ளூர் சமூகத்தினரையும் கொண்ட இச்சங்கம் பரஸ்பர அபிவிருத்தியை முன்னெடுப்பதை ஆரம்ப நோக்கமாகக் கொண்டிருந்தது.

இச்சங்கம் ஒரு நூலகத்தையும் நடத்தியது. ஆனால் நிதித் தட்டுப்பாடு காரணமாக இது வெற்றிகரமாக இயங்கவில்லை போல் தோன்றுகின்றது. மத ரீதியான யாழ்ப்பாண சிறு பிரசுர சங்கம் (Jaffna Religious Tract Society) 1826 இல் தாபிக்கப்பட்டது.

இச்சங்கத்தின் வருடாந்தச் செயற்குழுவின் 16 பெப்ரவரி 1847 அறிக்கையின்படி இச் சங்கமானது மக்களின் ஒழுக்க நிலையைச் சீர்திருத்துவதில் அதிக கவனம் எடுத்தது எனக் கூறப்படுகிறது.

இந்தச் சங்கம் மத ரீதியான கட்டுரைகள், வேதநூல்கள், நாட்காட்டிகள் என்பவற்றை வெளியிட்டதுடன் கிறிஸ்தவ விசுவாசத்தை மேம்படுத்துவதற்காக அச்சுக்கூடம், புத்தகம் கட்டும் கூடம் என்பவற்றைக் கொண்டிருந்தது.

மதம் சார்ந்த ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டு சுதேசிகள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன என அறிக்கை சொல்கின்றது. இந்த வெளியீடுகள் ஒழுங்கு முறையான வையாகவும் சிறந்த பிரசார சாதனங்களாகவும் இருந்தன போல் தோன்றுகின்றது.

ஈற்றில் யாழ்ப்பாண சுதேசிகள் சுவிஷேசச் சங்கம் (Jaffna Native Evangelical Society) 24 மே 1832 இல் உருவாக்கப்பட்டது. மிஷனரிச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை வெளியிட்டு புறமதத்தாருக்கு கிடைக்கச் செய்வதும் இச்சங்கத்தின் நோக்கமாக இருந்தது.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தைச் சேர்ந்த தீவொன்றில் உள்ள வேலணை மக்களுக்குப் பாடசாலை, சேவைகள் என்பவற்றை இச்சங்கம் வழங்கியது. 1840 ஆம் ஆண்டின் குடி மதிப்பின்படி இச்சேவைகள் உள்ளூர் மக்களைச் சென்றடையும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டது.

2988 ஆகக் கணிக்கப்பட்ட இத்தொகையில் 1466 வயது வந்தவர்களும் 1522 பிள்ளைகளும் இருந்தனர். இப்படிப்பட்ட மதச்சங்கங்கள் (அநேகமாக கிறிஸ்தவ) யாழ்ப்பாணத் தீபகற்பத்து மக்களிடையே இயங்கின. ஆயினும் இக்கால கட்டத்தில் வேறெந்தத் தமிழ்ப் பிரதேசத்திலும் இவ்வாறு நடைபெற்றதற்கான ஆதாரம் இல்லை.

இந்தவகையில் உள்ளூர் மக்கள் இம்முயற்சிகளின் பலனாகப் பலவழிகளில் நன்மை பெற்ற போதும் பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுப்பகுதியில் கல்வி கற்ற உயர்மட்டத்தினர் குறிப்பாக சைவ உயர் மட்டத்தினர் கிறிஸ்தவ மதமாற்றம், கிறிஸ்தவ விரிவாக்கம் என்பன பற்றி வினா எழுப்ப ஆரம்பித்தனர்.

கிறிஸ்தவ எதிர்ப்புணர்வுகள் ஊற்றெடுக்க ஆரம்பித்து இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறிஸ்தவ எதிர்ப்பியக்கமாக உருவெடுத்து ஈற்றில் ஆறுமுக நாவலரால் வழிநடத்தப்பட்ட சைவ மறுமலர்ச்சி இயக்கமாக மேலெழுந்து மிஷனரிமாரின் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராகப் போராடும் நிலை ஏற்பட்டது.

இந்த வளர்நிலைகளையும் சமயம், கலாசார ஈடுபாடு, தேச பக்தி என்பன ஒன்றுசேர்ந்து எவ்வாறு ஒரு பெருநமைமிகு அடையாளத்துடனான தமிழுணர்வை ஊக்குவித்தன என்பதையும் அடுத்துவரும் அத்தியாயத்தில் விரிவாக ஆராய்வோம்.

இவற்றையும் விரிவான கல்வி முன்னேற்றத்தையும் ஆராய்வதற்கு முன்னர் பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக் காலகட்டத்தில் கிறிஸ்தவத்திற்கு எதிர்வினை எப்படியிருந்தது என்பதை இங்கு ஆராயலாம்.

### சைவம்

இக்காலகட்டத்தில் மிஷனரிச் செயற்பாடுகளையிட்டு நிலவிய தமிழ் உணர்வுகளைக் கோடிட்டுக் காட்டும் அமெரிக்கன் சிலோன் மிஷன் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

மிஷனரிமாரின் சிறந்த குறிக்கோளையும் தங்கள் மத்தியில் அவர்கள் வந்து வசிப்பதில் தன்னல நோக்கங்கள் எதுவும் இல்லை என்பதையும் முதலில் மக்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

டச்சுக்காரரின் மதப்பிரசார அதிகாரம் இப்போதும் அவர்களது நினைவில் இருந்தது. அதனால் வேதாகமத்தின் கருத்துக்கள், கோட்பாடுகள் என்பவை மூலம் மக்களை மதம்மாற்றிச் சீர்திருத்தம் செய்தல், தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட்ட கிறிஸ்தவம் என்பவற்றின் தேவையை அவர்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

மிஷனரிமார் தங்களது நிலையை உயர்த்திக் கொள்ளப் பணம் சம்பாதிப்பதற்காகவோ அல்லது செல்வம் சேர்ப்பதற்கு ஏதாவது திட்டத்தை முன்னெடுப்பதற்காகவோ தான் இவ்வாறு செய்கின்றனர் என மக்களால் எண்ணாதிருக்க முடியவில்லை.

(தொடரும்)

# எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் தமிழ் பிரதிநிதிகள் தமிழ் மக்கள் நலன்சார்ந்து முடிவெடுக்க வேண்டும்

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)


ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் பீடக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமையன்று கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதன்போது நாட்டின் சமகால அரசியல் சூழல் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையின் முழுவிபரம் வருமாறு.

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மாவட்ட மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிப்பது தொடர்பாகவும் அதனைத் தொடர்ந்து வன்னி மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மாவட்ட மாநாடுகளை நடத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

ஆளுநர்கள் நியமனம், அதனைத் தொடர்ந்து வட-கிழக்கில் ஏற்படக்கூடிய அரசியல் சூழல்கள், மார்ச் மாதம் வரவுள்ள வரவு-செலவுத் திட்டம் இவை தொடர்பில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை எடுக்க வேண்டிய நிலைப்பாடு ஆகியவற்றுடன் வரவிருக்கும் வரவு-செலவுத் திட்டத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் எத்தகைய முடிவுகளை மேற்கொள்வது மக்களுக்கு நலன்பயக்கும் என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதுவரை காலமும் புதியதொரு அரசியல் சாசனம் கொண்டுவரப்படும் என்றும் அது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்றும் அதனூடாக தமிழ் மக்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் தமிழ் மக்களுக்குச் சொல்லிவந்தது. ஆனால் இன்றிருக்கக் கூடிய சூழ்நிலையில், தேசிய அரசாங்கம் சிதைவடைந்து தனித்தனி வழியே செல்லும் போது, பாராளுமன்றத்தில் புதியதொரு அரசியல் யாப்பிற்கான வரைபு சமர்ப்பிக்கப்பட்டாலும், அதில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள மாட்டாது என்பதும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட மாட்டாது என்பதும் நிதர்சனமான உண்மையாக இருக்கின்றது. இந்நிலையில், தொடர்ச்சியாக அரசியல் சாசனத்தைக் கொண்டு வருகிறோம் என்ற வாதத்தை நிறுத்தி, தமிழ் மக்களுக்கான ஏனைய பிரச்சினைகளுக்கான தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும், அதற்கு வரவுள்ள வரவு-செலவுத் திட்ட நிகழ்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையாளவேண்டும்என்று கோரிக்கை விடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.



இதுவரை காலமும் இந்த அரசாங்கத்திற்கு எந்தவித முன் நிபந்தனைகளும் இல்லாமல், சகல வரவு-செலவுத் திட்டங்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய அனைத்து செயற்பாடுகளுக்கும் எமது கட்சியைத் தவிர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்து வந்துள்ளது. ஆனால் தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினைக்கும் காத்திரமான தீர்வைக் காண முடியவில்லை. வடக்கு மாகாணத்தில் மின்சாரசபை, பிரதேச சபைகளின் சிற்றூழியர் பணிகளுக்குக்கூட தென்பகுதி சிங்கள இளைஞர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். ஆனால், அதே தகுதிகளுடன் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் வேலையின்றியிருக்க, இத்தகைய நியமனங்களை அங்கீகரிக்க முடியாதென்றும், அவை உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்ப் பிரதிநிதிகள் குறைந்த பட்சம் பின்வரும் விடயங்கள் தொடர்பில் காத்திரமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கோருவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இதனடிப்படையில், வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டுமாக இருந்தால்,

1.தமிழ் மக்களின் காணிகளை முழுமையாக விடுவிப்பது.

2.வனவளப் பாதுகாப்பு, மகாவலி அபிவிருத்தி, தொல்பொருள் மற்றும் அகழ்வாராய்ச்சி திணைக்களம், வன்ஜீவராசிகள் பாதுகாப்பு போன்ற திணைக்களங்கள் இவற்றுடன் முப்படைகளின் அடாத்தான காணி அபகரிப்பு என்பவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

3.அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

4.காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தாமதமின்றி நீதி வழங்குதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அதற்கு அரசாங்கம் ஆக்கபூர்வமான தீர்வைக் காண்பதற்கு முன்வரும் பட்சத்தில் அதற்கு ஆதரவளிப்பது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்று கோருவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

விரைவில் மத்தியகுழுவைக் கூட்டி தற்போதைய அரசியல் சூழலில் நாம் மேற்கொள்ள வேண்டிய அடுத்த நகர்வுகள் குறித்து ஆராய்வதாகவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தின் கூட்டத் தொடரைச் சமாளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அந்தவகையில்தான் நிறைவேற்றப்படாவிட்டாலும் பாராளுமன்றத்தில் புதிய அரசியல் யாப்பிற்கான வரைபை சமர்ப்பிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த நிகழ்வுகளின் ஊடாக இலங்கை அரசாங்கம் ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையை எடுப்பது போன்றும் 30/1, 34/1 தீர்மானங்களை நிறைவேற்றுவது போன்ற தோற்றப்பாட்டைக் காண்பிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவாகச் செயற்படுகின்றது. இத்தகைய தமிழ் மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளை எமது கட்சி மக்களுக்குத் தெளிவுபடுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

இதே நேரத்தில் அரசியல் பீட உறுப்பினர்கள் மரியாதை நிமித்தமாக முன்னாள் நீதியரசரும்,வடக்கு மாகாணசபையின் முதல்வரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களைச் சந்தித்து இன்றைய அரசியல் சூழல் தொடர்பாகவும், நாங்கள் இணைந்து பணியாற்ற வேண்டிய பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடினோம் என அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1610

### சாமினி

**வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் பழமொழி, மனம் விட்டுப் பேசினால் பகை விட்டுப் போகும் புதுமொழி**




### கிஷோக்

**அன்பையும் மன்னிப்பையும் புறக்கணிக்காதீர்கள்**



### வெண்ணிலா

**பொறாமை வாழும் மனதில் வெற்றிக்கான படிக்கட்டுக்கள் உடைந்து போகின்றது**



### ரதன்

**நமக்கானது எதுவும் நம்மைவிட்டுப் போகாது நம்மை விட்டுப்போனால் அது நமக்கானதல்ல**



### ரமணன்

**வாழ்க்கை மிக வேகமாகச் செல்லும் நீ உன்னைச் சுற்றி அவ்வப்போது பார்க்கவில்லை எனில் நீ தொலைத்துவிடுவாய்**



### திஸ்மி

**உலகத்திலேயே மிக விலையுயர்ந்தவிடயம் நம்பிக்கை... இதை அடைய வருடங்கள் ஆகலாம்... உடைய சில நொடிகள் போதும்**



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## "வடக்கு–கிழக்கு இணைப்பு வதந்தி"

# தேசிய ஒருமைப்பாடு தொடர்ந்து பாதுகாக்கப்படல் வேண்டும்!

## அமைச்சர் ஹக்கீம் வலியுறுத்து



(கொழும்பு)

வடக்கு-கிழக்கை இணைத்து தனியான நிர்வாக அலகினை வழங்க இந்த அரசு முயற்சிக்கிறது என்று வதந்திகள் உலாவி வருகின்றன எனவும் அந்தச் செய்தியில் எவ்விதமான உண்மையும் இல்லை எனவும் நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி, திகன பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விகாரையொன்றில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகாரப் பகிர்வின் மூலம் அல்லது வேறு ஏதாவது வழிகளின் மூலம் சுயாட்சிக்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பாராளுமன்றத்தில் இந்த அரசின் பெரும்பான்மையை நிரூபிக்க உதவியது. வடக்கையும் கிழக்கையும் இணைத்து தனியான அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கவே எனும் வகையிலும் பல்வேறுபட்ட பொய்ப்பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. ஆனால் இவை அனைத்தும் முற்றுமுழுதாக பொய்யானவையாகும்.

கடந்த வருடம் இந்த திகன பிரதேசத்தில் இடம்பெற்ற விரும்பத்தகாத இனவாத செயற்பாட்டின் போது அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த இந்திரசார விகாரையின் விகாராதிபதி கெரடிகல சந்தவிமல தேரர் செய்த பங்களிப்பினையும், அதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியையும் முஸ்லிம் சமூகம் கௌரவத்துடன் ஞாபகத்தில் வைத்துள்ளது. இந்த அரசாங்கம் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் செயலாற்றிக் கொண்டிருக்கும் அதே வேளை அவ்வப்போது வெவ்வேறு பிரதேசங்களில் சில அசம்பாவிதங்கள் நடைபெறுவதையும் நாம் அறிவோம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் எங்களின் மத்தியில் ஏற்படுகின்ற முரண்பாடுகளும், சரியான புரிதல் இன்மையும் பிரச்சினைகளை மேலும் வளர்ச்சியடைய காரணமாகின்றன. இருப்பினும் இந்த சம்பவங்களுக்கு பின்னணியில் திட்டமிடப்பட்ட முறையில் செயற்பட்ட கண்ணுக்கு தெரியாத சக்திகள் இருந்து வந்ததை பின்னர் நடைபெற்ற விசாரணைகளின் போது தெளிவாகியது. இவ்வாறான அசம்பாவிதங்களை தவிர்க்க நமக்குள் பரஸ்பர புரிந்துணர்வு ஏற்பட வேண்டும்.

இந்த நாட்டில் திட்டமிட்டு ஒருவருக்கு மன உளைச்சலை ஏற்படுத்துவது அல்லது தொந்தரவு செய்வதனை அனுமதிக்க முடியாது. இருப்பினும் அரசியல்வாதிகள் தமது அரசியல் நோக்கங்களுக்காக இவ்வாறான செயற்பாடுகளின் பின்புலத்தில் மறைமுக சக்திகளாக இருந்து செயற்பட்டு பொதுமக்களின் அவதானத்தை கவர்ந்திழுக்க முயற்சி செய்கின்றனர். கடந்த 52 நாட்களாக இந்த நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிநிலைமையோடு மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களை பரப்புகின்ற முயற்சியில் தற்போது இறங்கியுள்ளனர்.

இந்த நாட்டில் அரசியலமைப்பில் சில மாற்றங்களை கொண்டு வர முடியுமான இடத்தில் நாங்கள் இருந்து கொண்டு சட்டமன்ற செயற்குழுவொன்றை உருவாக்கியுள்ளோம். அதில் எங்களது கட்சியைப்போலவே ஆளும் கட்சியினர், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கட்சியினர் என பலர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த செயற்குழுவினூடாக கலந்துரையாடல் மேற்கொண்டு அரசியலமைப்பில் சில மாற்றங்களை மேற்கொண்டோம். அந்த மாற்றங்களில் இந்த நாட்டில் புத்தசாசனத்திற்கு வழங்கப்பட்டுள்ள உயர்ந்த அந்தஸ்தை சிறிதேனும் குறைப்பதற்கான எவ்விதமான யோசனைகளும் முன்வைக்கப்படவில்லை.

பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதே அந்தஸ்தை குறைவில்லாமல் வழங்குவதோடு ஏனைய மதங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்தினையும் அதே அளவில் வழங்குவதே சிறந்தது என எல்லோரும் கருத்து தெரிவித்தோம்.

இந்த நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எவ்விதத்திலும் பாதகம் ஏற்படாத வகையில் சில சொற்களில் திருத் தங்கள் மேற்கொள்ள நாங்கள் ஆலோசனை கூறினோம்.

சிலர் தமிழ் மொழியில் உள்ள ஒற்றுமை என்ற சொல்லுக்கான பிழையான அர்த்தத்தை கற்பித்துக் கொண்டு மக்களை தூண்டிவிட முயற்சி செய்கிறார்கள்.

இவர்களின் அரசியல் நோக்கம் கொண்ட இந்த செயற்பாடு தொடர்பில் நாங்கள் கவலையடைகிறோம்.

பாராளுமன்ற யாப்பில் கூடுதலாக எந்த திருத்தம் கொண்டு வந்தாலும் அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படவேண்டும்.

அப்போது தான் அது சட்டமாக அங்கீகரிக்கப்படும். எனவே பௌத்த மதத்தின் அந்தஸ்தை கேள்விக்குட்படுத்தும் எவ்விதமான திருத்தங்களும் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்படவில்லை என்பது இதன்மூலம் உறுதியாகிறது.

அத்தோடு பாராளுமன்றத்தில் அதிகமாக உள்ளவர்கள் பௌத்த தர்மத்தை பின்பற்றுகின்றவர்கள். அவர்கள் இவ்வாறான ஒரு சட்டத்தை நிறைவேற்ற ஒருபோதும் உடன்படமாட்டார்கள். வெறும் அரசியல் உள் நோக்கங்களுக்காக மக்களை அச்சத்திற்குள்ளாக்கும் செயலாகவே இதனை பார்க்க வேண்டும்.

அரசாங்கத்தின் அதிகாரத்தை பெற்றுக்கொள்ள பல்வேறுபட்ட பொய்களை இவர்கள் கூறுகிறார்கள். நாங்கள் வெளிநாட்டு பணத்தை பெற்றுக்கொண்டு மக்களை ஏமாற்றுவதாக சொல்லுகிறார்கள். இவைகள் பச்சைப்பொய். நாங்கள் சிறுபான்மை சமூகத்தின் குரலாக தனித்துவமாக இயங்கி வருகின்றோம்.

எம்மை தனிமைப்படுத்தி அழுத்தங்களின் மூலம் அடிபணிய வைப்பதே இவர்களது நோக்கமாகும். ஆனால் ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார தடைகளை எமது பிரதமர் சர்வதேச நாடுகளுடன் பேசி புத்திசாலித்தனமான கொடுக்கல்-வாங்கல் மூலம் தீர்த்துள்ளார்.

அதற்கான காரணம் சர்வதேச நாடுகள் எதிர்பார்த்த, ஏற்றுக்கொள்ளக் கூடிய மாற்றங்களை இந்த அரசு செய்தமையாகும். இந்த நாட்டில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அதனை கேள்விக்குட்படுத்தும் செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது.

இப்போது ஏற்பட்டுள்ள தேசிய ஒருமைப்பாடு தொடர்ந்தும் எதிர்காலத்திலும் பாதுகாக்கப்பட வேண் ம்.

எனவே தவறான வதந்திகள், பொய்யான பிரசாரங்கள் தொடர்பில் நாம் கவனமாக இருக்க வேண்டும் என தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 160 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 250 | 350 |
| தக்காளி | 120 | 120 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | - 40 | 50 |
| கோவா | 100 | 100 | 70 | 100 |
| கரட் | 120 | 130 | 110 | 120 |
| பூசணி | 60 | 30 | 40 | 50 |
| புடோல் | 100 | 70 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 120 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 75 | 80 |
| பாகற்காய் | 200 | 150 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 70 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 150 | 120 | 120 | 140 |
| லீக்ஸ் | 160 | 140 | 130 | 120 |
| பீற்றூட் | 150 | 140 | 70 | 150 |
| கறிமிளகாய் | 200 | 160 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 600 | — | — | 600 |
| போஞ்சி | 120 | 120 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 140 | 100 | 120 |
| கீரை - 1பிடி | 80 | 60 | 40 | 50 |
| தேசிக்காய் | 150 | 150 | 150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 25-30 | 35 | 20-40 |
| இராசவள்ளி | 150 | 140 | 130 | 150 |
| வெங்காயப்பூ | 200 | 280 | 240 | 280 |
| முள்ளங்கி | 50 | 60 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 15 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 30 |
| ஈரப்பலா | 50 | 40 | 120 | 60 |

# மின்சாரப் புகையிரத கட்டமைப்பை நீடிக்க திட்டம்

(நாரஹேன்பிட்டி)

வெயாங்கொடையிலிருந்து பாணந்துறை வரை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள மின்சாரப் புகையிரத கட்டமைப்பை ரம்புக்கனை வரை நீடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான வன திறன் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கமைய, புகையிரத கட்டமைப்பை விரைவாக ஆரம்பிப்பதற்கு முடியுமென, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவிலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் குறித்த மின்சார புகையிர்த கட்டமைப்புக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 600 பில்லியன் டொலரை உதவியாக வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த புகையிரக் கட்டமைப்புக்காக வன திறன் ஆய்வுகளை மேற்கொள்ள ஒரு பில்லியன் டொலர் கிடைத்ததாகத் தெரிவித்த அவர், குறித்த ஆய்வுகள் நிறைவடைந்து இடங்களைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதால், இன்னும் சில வருடங்களில் மின்சார புகையிரதம் சேவையில் ஈடுபடுமென்றும் இதற்கான வேலைத் திட்ட அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இரண்டுமாடிக் கட்டடத்திலிருந்து விழுந்த பெண் பரிதாபமாகப் பலி!

(குருநாகல்)

குருநாகல் பேருந்து தரிப்பிடத்தில் இரண்டுமாடிக் கட்டடத்திலிருந்து கீழே விழுந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை, இடம்பெற்ற இச்சம்பவத்தில் குருநாகல் - தோரயாய பிரதேசத்தைச் சேர்ந்த, 32 வயது பெண்ணொருவரே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பெண் சில நாட்களாக மனநலக் குறைபாட்டுடன் காணப்பட்டுவந்ததாக, அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளதோடு, இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## 27 சிறைக்கைதிகள் கொலை

# எமில் ரஞ்சன் மீள விளக்கமறியலில்

(கொழும்பு)

முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சனை மீண்டும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது, அவரை எதிர்வரும் 22ஆம் திகதி வரையில் மீண்டும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதவான் இசுறு நெத்திகுமார உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணை முன்னெடுக்கப் பட்டுக் கொண்டிருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று நீதிமன்றில் தெரிவித்தனர்.

அத்துடன் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில், வெலிக்கடை சம்பவம் தொடர்பில் சாட்சியாளரான ஊடகவியலாளர் கசுன் புஸ்ஸேவலவுக்கு முதலாவது சந்தேகநபரான நியோமல் பெரேரா அச்சுறுத்தல் விடுத்துள் ளதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பாதிக்கப் பட்டவர்களின் பாதுகாப்புக்கான பொலிஸ் பிரிவில் குறித்த ஊடக வியலாளர் முறைப்பாடு செய்துள்ளதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான முறைப்பாடு கிடைத்திருந்தால் விசாரணை செய்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான், அன்றைய தினம் விசாரணையின் முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் 27 சிறைக் கைதிகள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் எமில் ரஞ்சன் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## விளையாட்டு விழாவுக்கான போட்டி அட்டவணை தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த விளையாட்டு விழாவுக்கான போட்டி அட்டவணை தயாரிப்பதற்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் கழகத் தலைவர், செயலாளர்களைக் கலந்துகொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ-9)




# ஏன் வந்தாய்?



அந்த மலைச்சாரலில் ஓர் அத்தி மரம் உண்டு. அது கப்பும் கிளையுமாக அடர்த்தியாயிருந்தது. அந்த மரத்திலிருந்த பொந்து ஒன்றில் நாகம் ஒன்று வசித்து வந்தது. மற்றொரு பொந்தில் கழுகு ஒன்று வாசம் செய்தது.

இரண்டுமே மிகவும் வயது முதிர்ந்தவை. வெளியே சென்று தீனி தேட முடியாத நிலை. அதனால், அம்மரத்தில் வசித்த மற்ற பறவைகள் தங்களுக்குக் கிடைத்த தீனியில் கொஞ்சம் அவற்றுக்கென்று கொடுத்து வந்தன. அந்தத் தீனியைத் தின்றே அவை வாழ்ந்து வந்தன.

ஒருநாள் பூனை ஒன்று அந்தப் பக்கமாக வந்தது. அப்போது அம்மரத்திலிருந்த பறவைகளின் கூட்டிலிருந்து அப்பறவைக் குஞ்சுகளின், "கீச்கீச்" என்று சத்தம் கேட்டது. ஆகா! இங்கே நமக்கு நிறைய தீனி கிடைக்கும் போலிருக்கிறதே! என்று எண்ணியது பூனை. அதன் நாக்கிற்குச் சுவை தட்டியது.

உடனே, மெதுமெதுவாக மரத்திலேறி அவற்றை நோட்டம் பார்த்தது பூனை. அதைக் கண்ட அக்குஞ்சுகள் பயந்து போய் என்றுமில்லாமல் பெருங் கூச்சலிட்டன.

"ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே கழுகு, தன் பொந்திலிருந்து எட்டிப் பார்த்தது. சந்தடி செய்யாது பூனை வந்து கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டது.

"என்னைப் பார்த்து இக் குஞ்சுகள் எல்லாம் இப்படி பயந்து கத்துகின்றனவே! நீங்களாவது தைரியம்சொல்லக்கூடாதா?" என்று கேட்டுக்கொண்டே கழுகின் பக்கம் வந்து வணக்கம் செய்தது பூனை.

"நீ யார்?" என்று கேட்டுக் கொண்டே, தன் கண்களை இடுக்கிக் கொண்டு அதைப் பார்த்தது கழுகு.

"நான் நெடுஞ்செவியன் என்னும் பூனை. உங்களிடமெல்லாம் நட்புக்கொள்ள வந்தேன்" என்றது பூனை.

"ஓடு! ஓடு! இங்கு நிற்காதே! இல்லையேல், உன் உயிருக்கே ஆபத்து நேரும்" என்று பயமுறுத்தியது கழுகு.

"என்ன! எடுத்த எடுப்பிலேயே இப்படிச் சொல்கிறீர்களே! என்னைப் பற்றி தெரிந்து கொண்டு பேசுங்கள். ஒருவனை பார்த்த மாத்திரத்திலேயே தீர்மானித்துவிடக் கூடாது. அவைகள் நடத்தையைப் பார்த்தே தீர்மானிக்க வேண்டும்" என்றது பூனை.

"நீ ஏன் இங்கு வந்தாய்... நட்புக்கொள்ள வந்தாயா? உண்மையைச் சொல்?" என்று சற்று அதட்டலாகவே கேட்டது கழுகு.

"நான், கங்கா நதியில் நாள்தோறும் குளித்து முழுகி விரதம் இருந்து வருகிறேன். நீர் மிகுந்த தர்மவான் என்று மற்ற பறவைகள் பேசிக் கொண்டது என் காதில் விழுந்தது. வயது முதிர்ந்த சான்றோரிடமே தருமம் கேட்க வேண்டும் என்று சாஸ்திரம் சொல்கிறது. அதனால் தான், இப்போது உம்மைத் தேடி வந்தேன்" என்றது அந்த ருத்திராட்ச பூனை.

"அப்படியா!" என்று கழுகு யோசித்துக் கொண்டிருந்த வேளையில், விரிவாகப் பேசத் தொடங்கியது.

"என்ன இப்படி யோசிக்கிறீர்கள்? சத்துருவும் தன் வீட்டுக்கு வந்தால், சாதுக்கள் அவனுக்கு சன்மானம் அளிப்பர். தன்னை வெட்டுகிறவனுக்கே, மரம் நிழல் தரவில்லையா?

"சாதுக்கள், தம் வீட்டுக்கு யார் வந்தாலும் பூஜிக்கின்றனர்! இது மாதிரி அவமானப்படுத்துவதில்லை. அதிதி யார் வீட்டுக்கு வந்து மனம் வாடி திரும்புகிறானோ, அவன் தன் பாவத்தை அவ்வீட்டு எஜமானனுக்குக் கொடுத்துவிட்டு, அவனுடைய புண்ணியத்தைக் கைக்கொண்டு போகிறார் தெரியுமா!

"ஆகையால்தான் மழை பொழிகிறது. சூரியன் எரிகிறது! சண்டாளன் வீட்டில் சூரியன் பிரகாசிப்பதில்லையா?" என்று சமத்தாரமாய்ப் பேசியது பூனை.

"அதுசரி! நீ மாமிசப் பிரியனாயிற்றே! அதிலும், கொன்று தின்ன அஞ்சமாட்டாயே!" என்றது கழுகு.

அது கேட்ட பூனை, "சிவ சிவா!" என்று தன் காதுகளைப் பொத்திக் கொண்டது.

நான் தரும சாஸ்திரங்கள் படித்தவன். அதனால் நான் வைராக்கியம் கொண்டவன். அதுமாதிரியான பொல்லாத கருமங்களையெல்லாம் நான் அடியோடு விட்டுவிட்டேன்.

எவன் மற்றொருவனைக் கொன்று தனக்குச் சுகத்தைத் தேடிக் கொள்கிறானோ, அவன் நரகத்தை அடைகிறான். அதனால், கொலை செய்வதுபோல் வேறொரு பாதகம் இல்லை என்கிறது தரும சாஸ்திரம்.

"அதனால், கொலை செய்யாமல் இருப்பதுபோல் வேறொரு தருமம் இல்லை என்று தீர்மானித்து, காட்டிலுள்ள காய், கனி, கிழங்குகளையே சாப்பிட்டு வருகிறேன் நான்!" என்றெல்லாம் பேசி கழுகின் மனதைக் கவர்ந்தது பூனை.

உடனே, கழுகுக்கு அப்பூனையின் மேல் பூரண நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

"சரி, அப்படியென்றால் நீ இங்கு தங்கிக் கொள்ளலாம்" என்று அனுமதி கொடுத்து விட்டது கழுகு.

அதன்பிறகு கேட்க வேண்டுமா? பூனை தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிட்டது. அதன் உள்நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டது. நாளடைவில் அப்பூனை அங்கிருந்த பறவைக் குஞ்சுகளைச் சந்தடி செய்யாது கொன்று தின்னத் தொடங்கியது.

"என்ன இது! நாள்தோறும் நம் குஞ்சுகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறதே நம்முடைய கூட்டில்!" என அந்தந்த பறவைகளும் ஆழ்ந்து யோசிக்கத் தொடங்கின.

இதையறிந்த பூனை, சில நாட்களில் அங்கிருந்த கழுகினிடத்தில்கூட சொல்லிக் கொள்ளாமல் ஓடிப்போய்விட்டது.

அதுகண்ட பறவைகள், அப்பூனை தங்கியிருந்த கழுகின் மரப்பொந்தை வந்து பார்த்தன. என்ன கொடுமை! அங்கு தம் குஞ்சுகளின் எலும்புகளும் சிறகுகளும் இருப்பதைக் கண்டன கடுங்கோபம் கொண்டன.

"துரோகி! இந்தக் கழுகே அபகரித்து குஞ்சுகளையெல்லாம் தின்றிருக்கிறதே!" என்று பேரிரைச்சல் போட்டு அப்பறவைகள் அனைத்தும் அக்கழுகின் மேல் பாய்ந்து கொத்திக் கொன்றன.

ஆகையால் ஒருவனுடைய குணத்தைப்பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ளாமல், அவனுக்கு இடம் கொடுக்கக்கூடாது

செல்லூஸ்.

## சரித்திரம் மிக்க சுதந்திரதேவி சிலை

அமெரிக்காவின் அடையாளமாக உள்ள சுதந்திரதேவி சிலை 305 அடி உயரத்துடன் (93 மீற்றர்) கம்பீரமாக வானை நோக்கி உயர்ந்து நிற்கிறது.

அமெரிக்காவின் அடையாளங்களுள் ஒன்றாக 125 வருடங்களுக்கும் மேலாக காட்சி தரும் சுதந்திரதேவி சிலையைப் பார்த்திருப்பீர்களே? ஒரு கையில் விளக்கைத் தூக்கிப் பிடித்தபடி இன்னொரு கையில் புத்தகம் ஏந்தியபடி தலையில் கிரீடத்துடன் நிற்கும் அந்த பிரம்மாண்டமான உருவத்தைப் பார்த்தாலே மகிழ்ச்சி வரும் அல்லவா? உலகுக்கு வெளிச்சமூட்டும் விடுதலை என்றும் சுதந்திரதேவி சிலை என்றும் அழைக்கப்படும் இச்சிலை ஒரு நட்புறவின் அடையாளம் என்பது தெரியுமா உங்களுக்கு? ஆம் பிரான்ஸ் அமெரிக்காவுக்கு வழங்கிய பரிசு தான் சுதந்திர தேவி சிலை.

பண்டைய ரோமின் அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கும் லிப்ர்டாஸ் என்ற கடவுளச்சியின் வடிவம் போல விடுதலையை முன்னெடுத்துச் சென்று விளக்கொளி பரப்பும் தேவதை என்ற சிந்தனையில் சுதந்திரதேவி சிலை வடிவமைக்கப்பட்டது. அதன் தலையில் உள்ள கிரீடத்தில் இருக்கும் 7 நீட்சிகள் - 7 கடல்களையும் 7 கண்டங்களையும் குறிக்கும். கையிலிருக்கும் புத்தகம் அறிவையும்அதிலிருக்கும் திகதி ஜூலை 4, 1887 என்று அமெரிக்கா உருவான நாளையும் குறிக்கும்.

151 அடி உயரமுடைய இச்சிலை 65 அடி உயரமுடைய அடித்தளம் மற்றும் 89 அடி உயரமுடைய பீடத்தின் மேல் பிரம்மாண்டமாக நிறுத்தப்பட்டது. இச்சிலையை 90.7 தொன் செம்பும் 113.4 தொன் இரும்பும் பயன் படுத்தப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் 1886 ஒக்டோபர் 28 அன்று சிலையை க்ரோவர் திறந்து வைத்தார்.


1902 ஆம் ஆண்டு வரை இச்சிலை கலங்கரை விளக்காகவும் பயன்பட்டது.

இச்சிலையின் உட்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒற்றை வளைவு படிக்கட்டுகள் மூலம் (354 படிக்கட்டுகள்) சுதந்திர தேவி சிலையின் கிரீடத்தை அடைய முடியும்.

ஏறி நின்று இரசிப்பது எத்தனை அற்புதமான விடயம்.

ஒரே நேரத்தில் அங்கிருக்கும் 25 ஜன்னல்கள் வழியாக 30 பேர் நியூயோர்க் நகரைப் பார்வையிடலாம். பிரமாண்டமான இச்சிலையை அருகிலிருந்து பார்ப்பதே அலாதி சுகம் என்றால் அதன் உச்சியில் சிலையின் பீடத்தில் புதிய கொலாசஸ் என்ற எம்மா லாஸரஸின் கவிதை செதுக்கி வைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் அடையாளங்களுள் ஒன்றாக இச்சிலையை வழங்கிய பிரான்சில் இதன் மாதிரி உருவம் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 1886 ஆம் ஆண்டு



சுதந்திரதேவி சிலையை அமெரிக்காவிற்கு பிரான்ஸ் அர்ப்பணித்தது. இந்த புகழ் மிக்க சிலையை ஆண்டு தோறும் 35 இலட்சம் மக்கள் பார்த்து செல்கின்றனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு அல்கொய்தா தாக்குதலுக்கு பின்னர் இந்த சிலையின் உள் பகுதியில் ஏற பார்வையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு கிறது. 19 ஆம் நூற்றாண்டை சேர்ந்த இந்த சரித்திரம் மிக்க சிலை 21 ஆம் நூற்றாண்டை நோக்கிப்பயணிக்கிறது.

> நீதியே ஆட்சியின் உயிர்.
> நடுநிலைமையே நீதியின் உயிர்.
> – ஜஸ்டினியன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் ஆளுநர் முன் பாரிய பொறுப்பு

வடக்கு மாகாணத்தின் ஆளுநராக கலாநிதி சுரேன் ராகவன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த காலத்திலும் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட நிலையிலும் தமிழர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்படவில்லை.

ஆனால் இம்முறை வடக்கு மாகாணத்தின் ஆளுநராக தமிழர் ஒருவரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

இந்நியமனம் ஜனாதிபதி மைத்திரிக்கு சர்வதேசத்தின் பார்வையில் நன்மதிப்பைக் கொடுக்கக்கூடியதாகும்.

அதேநேரம் ஆளுநர் தொடர்பில், தமிழர்களின் எதிர்பார்ப்பை ஜனாதிபதி நிறைவேற்றியுள்ளார் என்ற கருத்து நிலையும் ஏற்படவே செய்யும்.

இவை ஒருபுறமிருக்க, வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி சுரேன் ராகவனின் முன் பாரிய பொறுப்புக்களும் சவால்களும் உள்ளன என்பதை எவரும் மறுதலிக்க முடியாது.

அதாவது சிங்களவர் ஒருவர் வடக்கின் ஆளுநராக இருக்கின்றபோது அவர் அரசிடம் முன்வைக்கின்ற கோரிக்கைகளை அரசாங்கம் பார்க்கின்ற பார்வைக்கும்,

தமிழர் ஒருவர் ஆளுநராக இருந்து கொண்டு அவர் முன்வைக்கின்ற கோரிக்கைகளை அர்சாங்கம் பார்க்கின்ற பார்வைக்குமிடையில் நிறையவே வித்தியாசம் இருக்கும்.

அதேநேரம் தமிழர் ஒருவர் ஆளுநராக வரவேண்டும் என்று தமிழ்த் தரப்புகள் ஒரு சம்பிரதாயத்துக்குக் கேட்க; அது நிஜமாகிப் போன நிலையில்,

புதிய ஆளுநர் ஜனாதிபதியின் பக்கமா? அல்லது குறித்த தமிழ் அரசியல் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுகிறாரா? என்ற கோணங்களில் தமிழ் அரசியல் தரப்புகளின் விழிகள் படம் பிடிக்கவே செய்யும்.

இதற்கு மேலாக, வடக்கின் ஆளுநராகத் தமிழர் ஒருவர் பதவியேற்றிருக்கும் இவ்வேளையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண அரசின் ஆட்சிக்காலமும் முடிவுற்ற நிலையில் உள்ளது.

எனவே வடக்கு மாகாணத்தின் அத்தனை செயற்பாடுகளிலும் இயங்கு நிலைகளிலும் புதிய ஆஞ்நர் நேரடிப் பொறுப்பை உடையவராக இருப்பார்.

இஃது ஆளுநரின் சுமுகமான பணி நிலைக்குப் பாரிய சுமையாக இருக்கும் என்பதையும் இங்கு சுஹறித்தானாக வேண்டும்.

தவிர, வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராகப் பதவியை பொறுப்பேற்றுள்ள கலாநிதி சுரேன் ராகவன்; வடபுலத்து மக்களின் கஷ்ரங்களை நேரில் சென்று அறிந்து அந்த மக்களின் விமோசனத்துக்கு தன்னால் முடிந்தளவு உதவியும் ஒத்தாசையும் நல்க வேண்டும்.

அதேநேரம் ஆளுநராக வந்திருப்பவர் ஒரு தமிழர் என்பதால்; விழுந்த பாட்டில் குறி சுடலாம் என்று நினையாமல், அனைத்துத் தரப்பினரும் அவருக்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழுங்கி, வடக்கின் ஆளுநர் ஒரு தமிழராக இருப்பதுதான் பொருத்தம் என்பதை தென் பகுதிக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இந்தத் தார்மீகப் பொறுப்பை அனைத்துத் தமிழ் அரசியல் தரப்புகளும் நிர்வாகக் கட்டமைப்புகளும் செய்தாக வேண்டும்.

மாணவர் மத்தியில் போதை கலாசாரம்

# பாடசாலை மட்டத்தில் நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி மைத்திரி கல்வி அமைச்சுக்கு பணிப்பு

(கொழும்பு)

நாட்டில் பாடசாலை மாணவர் மத்தியில் போதைப் பொருள் பாவனைக் கலாசாரம் துளிர்விட்டதனை அவதானித்த ஜனாதிபதி உடனடியாக பாடசாலை மட்டத்தில் அதற்கான தீவிர நடவடிக்கை எடுக்க கல்வி அமைச்சை பணித்துள்ளார்.

அத்துடன் ஜனவரி 21 ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரையிலான காலப் பகுதியை பாடசாலைபோதைய பொருள் தடுப்புவாரம் என பிரகடனம் செய்துள்ளார்.

போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக பிள்ளைகளிடமிருந்து கற்றுக்கொள்வோம் என்ற மகுடத்தின் கீழ் இவ் வாரம் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

ஜனாதிபதி செயலகம் கல்வியமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் இணைந்து இந்த விசேட வேலைத்திட்டத்தை பாடசாலையிலும் பாடசாலை சமூகத்திலும் நடைமுறைப் படுத்த திட்டமிட்டுள்ளது.

இதற்கென கல்வியமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமந்த சுற்றுநிரூபமொன்றையும் சகல மாகாண மற்றும் வலயக்கல்வி பணிப்பாளரகளுக்கும் அதிபர் களுககும் அனுப்பிவைத்துள்ளார.

21ஆம் திகதி முதல்நாள் மாணவர்களை விழிப் புணர்வூட்டும் செயற்றிட்டம் இடம்பெறும். 22ஆம் திகதி இரண்டாம்நாள் பெற்றோர்களை விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளும் மூன்றாம் நாள் 23ஆம் திகதி போதைபொருள் தொடர்பில் சட்டரீதியான விடயங்கள் தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டம் நான்காம்நாள் 24ஆம் திகதி அரசியல்வாதிகளுடனான போதைப் பொருள் தொடர்பிலான சந்திப்பு ஐந்தாம்நாள் 25ஆம் திகதி போதைப்பொருள் தொடர்பாக ஊடகவியலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் என்பன நடைபெற ஏறபாடுசெய்யப்பட்டுள்ளது.

இச்செயற்பாடுகளை வலயக்கல்வி பணிப்பாளர்களும் மாகாண கல்வி பணிப்பாளரகளும் கண்காணித்து அறிக்கையிடல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-3)

# காணாமல்போனவரின் உறவினர்களின் உரிமையைப் பெற்றுக் கொடுக்க செயலாற்றுவோம்

சாலிய பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு சமூகம் என்ற அடிப்படையில் காணாமல் போனோரின் உறவினர்களின் துன்பம் குறித்து பாரா முகமாய் இருக்காமல், நம்முடைய சக்திக்குட்பட்ட வகையில் இக்குடும்பத்தினர் உண்மையை அறியும் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு செயலாற்ற வேண்டும் என காணாமல் போனோர் அலுவலகத்தின் தவிசாளர் ஜனாதிபதிசட்டத்தரணிசாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் காணாமல் போனோர் அலுவலகத்தின் தவிசாளர் சாலிய பீரிஸ் குறிப்பிட்டுள்ளதாவது, "காணாமல்போனோர் விடயம் தொடர்பில் அரச அதிகாரிகளிடத்திலும், பொதுமக்களிடத்திலும் குறைந்தளவான புரிதலே உள்ளது.

காணாமல் போனோரின் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் போதிய விழிப்புணர்வு இல்லை. நாங்கள் பொதுமக்கள் மத்தியில் புரிதல், ஒற்றுமை மற்றும் ஆதரவு ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும்." என கூறினார். (ம-3)

# அதிபர் வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்.வலயத்திற்குட்பட்ட யாழ். பூம்புகார் அ.த.க. பாடசாலையில் ஏற்பட்டுள்ள அதிபர் வெற்றிடத்திற்கு யாழ்.வலயத்தில் கடமையாற்றும் அதிபர்.சேவையைச் சேர்ந்தவர்களிடமிருநது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வேறு வலயங்களைச் சேர்ந்த அதிபர்களும் விண்ணப்பிக்கலாம்.

### நிபந்தனைகள்

மேற்படி வகை II பாடசாலைக்கு வகுப்பு 2 ஐச் சேர்ந்த அதிபர்களும் வகுப்பு 2 அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் வகுப்பு 3 ஐச் சேர்ந்த அதிபர்களும் அத்துடன் தற்போது அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நியமனத்தை ஏற்றுக் கொண்ட அதிபர் வகுப்பு 3 இனைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

இவ் விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சைக்குழு ஒன்றின் மூலம் பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பப் படிவங்களை யாழ்.கல்வி வலயத்தில் பொது நிர்வாகக் கிளையில் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 23.01.2019ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## நல்லூரில் சிலப்பதிகார முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் தமிழ்நாடு திருவையாறு தமிழ்ஐயா கல்விக் கழகமும் தமிழ் ஆடற்கலை மன்றமும் இணைந்து முன்னெடுக்கவுள்ள சிலப்பதிகார முத்தமிழ் விழா எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 19 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய இரண்டு நாட்கள் காலை மாலை அமர்வுகளாக நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்நாட்டின் பிரபல பேச்சாளர் முத்தமிழரசி சரஸ்வதி இராமநாதன் உள்ளிட்ட மூதறிஞர்கள் 25 பேர் மற்றும் நம்மண்ணின் வடக்கு-கிழக்கு பிரதேச உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த அறிஞர்கள் இணைந்து சிலப்பதிகாரம் சார்ந்த இயல் இசை நடன நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். (இ-7)

## சந்தேகங்களை விலக்க...

- எதிர்மறையான சிந்தனைகளை எப்போதுமே நினைக்காதீர்கள்.
- தவறான கருத்துக்களை மனதில் சுமந்து திரியாதீர்கள்.
- சந்தேகத்திற்கு மூலகாரணம் தேவையற்ற வாக்கு வாதம் என்கதை உணர்ந்திடுங்கள்
- உங்கள் சந்தேகத்தை கற்பனை கலந்து வதந்தியாய் பரப்பாதீர்கள். நல்ல ஆலோசகரிடம் கேட்டு நிவர்த்தி செய்து கொண்டு சந்தேகங்களை தீர்க்க முயலுங்கள்
- தெளிவான மனதில் தான் சந்தேகங்கள் தோன்றாது என்பதை உணருங்கள்.
- சந்தேகம் என்பது தன்னை மட்டுமல்ல தன்னை சார்ந்தவர்கனையும் அழிக்கும். கொடிய மிருகம் என்பதை அறிந்து வாழுங்கள்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில லக்ஸபானா வீதி, தோணிக்கல், ஆண்டிய புளியங்குளம், புதுக்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில முருங்கன் பிட்டியிலிருந்து செம்மண் தீவு வரை, செம்மண் தீவு Ware House, டொன் பொஸ்கோ, முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக் குளம கடற்படை முகாம், முருங்கனிலிருந்து உயிலங்குளம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## ஆன்மீகச் சிந்தனைகள்

### இன்சொல் மட்டுமே பேசுங்கள்

✦ எல்லாத் தேசத்தாரும், எல்லா நாட்டாரும், எல்லா நிறத்தாரும், எல்லா சமயத்தாரும் கருத்து வேறுபாடின்றி ஒப்பமுடிந்த உண்மை வேதம் நமது திருக்குறள் ஒன்றேயாம். உலகிலுள்ள எல்லா அறங்களையும் தன்னகத்தே கொண்டு சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது திருக்குறள்.

✦ திருமால், குறள் வடிவு கொண்டு இரண்டடியால் மூவுலகையும் அளந்தவர். வள்ளுவர், தமது குறளின் இரண்டடியால் எல்லா உலகங்களையும் அளந்தவர்.

✦ திருக்குறள் ஓதுவதற்கு எளிது. மனப்பாடம் செய்வதும் சுலபம். ஒரு முறை படித்தாலே போதும். உணர்தற்கு அரிது, வேதங்களிலுள்ள விழுப்பொருள்களை எல்லாம் விளக்கமாக உரைப்பது. நினைக்கும் தோறும் நெஞ்சில் தெவிட்டாத இன்பத்தை ஊற்றெடுக்கச் செய்வது.

✦ கடல் தண்ணீர் வற்றிவிட்டாலும் சூரியன் தட்பத்தை அடைந்தாலும், சந்திரன் வெப்பத்தை அடைந்தாலும் திருக்குறள் தனது பெருமையினின்றும் குறையாது.

✦ திருக்குறளைத் தொட்டாலும் கை மணக்கும். படித்தாலும் கண் மணக்கும். கேட்டால் செவிமணக்கும். சொன்னால் வாய் மணக்கும். எண்ணினால் இதயம் மணக்கும். அத்தகைய தெய்வ மணம் வீசும் சீரும் சிறப்பும் உடையது திருக்குறள்.

✦ இன்சொல்லே பேசுகிறவர்களுக்கு உலகில் ஒரு வகையான துன்பமுமில்லை. எம வாதனையும் கிடையாது. சிவகதி திண்ணமாகக் கிடைக்கும்.

✦ கனிகள் நிறைந்துள்ள ஓர் மரத்தில் வக்கயறியா ஒருவன் சுவைமிகுந்த கனிகளை விலக்கிக் கைப்புடைய் காய்களை மென்றதை ஒக்கும் இன்னாத சொற்களைக் கூறுவோனின் இயல்பு. எனவே மனத்தூய்மையுடன் வாழ்ந்து இறைவன் திருவருளால் இன்சொல்லைக்கூறப் பயின்று நாம் அனைவரும் இம்மை இன்பத்தையும் அடைந்து நற்கதி பெறுவோமாக.

# நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவு கிரிக்கெட் சுற்றுப்போட்டி
# சென்.அன்ரனிஸ், உதயசூரியன் அணிகள் சம்பியன்






நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான 2019 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் குழு போட்டிகளின் வரிசையில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் ஆண்கள், பெண்களுக்கான துடுப்பாட்ட போட்டிகள் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் தகுதி பெற்றது. நடைபெற்ற மற்றுமோர் அரையிறுதிப் போட்டியில் சென். ஜோன்ஸ் விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டு சென். பற்றிமா விளையாட்டுக்கழகம் இறுதிப்போட்டிக்கு நுழைந்தது.

இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிமா விளையாட்டுக்கழகம் 10 பந்துப் பரிமாற்ற முடிவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றனர். அவ் அணி சார்பாக ருவைஸ் லயன் 21 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் 2 பந்துப்பரிமாற்றங்களை வீசிய கில்பேட் 2 ஓட்டங்களை வழங்கி 4 இலக்குகளை வீழ்த்தியதுடன் ரெபின், டிலக்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் அன்ரனி, பபிக்குமார் ஆகியோர் தலா 1 இலக்குகளையும் வீழ்த்தியிருந்தனர்.

பதிலுக்கு ஆடிய சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 8.5 பந்துப்பரிமாற்ற முடிவில் 5 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக டிலக்சன் தனது அதிரடி ஆட்டம் மூலம் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 18 ஓட்டங்களையும் பிரசாத் 11 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

சென்.பற்றிமா விளையாட்டுக்கழகம் சார்பாக பந்து வீசிய ரஜீன் 2 பந்துப்பரிமாற்றத்தில் 15 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளை வீழ்த்தினார்.

பெண்களுக்கான துடுப்பாட்ட போட்டியின் இறுதிப்போட்டியில் உதயசூரியன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து சென்.பற்றிமா விளையாட்டுக்கழகம் மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று உதயசூரியன் விளையாட்டு கழகம் களத்தடுப்பை தெரிவு செய்தது. ஆட்டத்தை ஆரம்பித்த சென். பற்றிமா விளையாட்டுக்கழக வீராங்கனைகள் சுதர்சினி 12 ஓட்டங்களையும் நிசா 8 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க பந்துப்பரிமாற்ற முடிவில் 3 இலக்குகளை இழந்து 29 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் ஜெனோவா 2 இலக்குகளை வீழ்த்தினார். பதிலுக்கு ஆடிய உதயசூரியன் விளையாட்டுக்கழக ஆரம்ப ஜோடிகளான அகிலா ஒரு நான்கு ஒரு ஆறு அடங்கலாக 13 ஓட்டங்களையும் நிசா 9 ஓட்டங்களையும் பெற்று இலக்கு இழப்பின்றி ஒரு பந்து பறிமாற்றம் மீதமிருக்கையில் வெற்றியை தனதாக்கிக் கொண்டனர்.(க)

# நெடுந்தீவு பிரதேச செயலர் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி
# உதயசூரியன், விங்ஸ் அணிகள் சம்பியன் பட்டத்தை வென்றன






நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுகழகங்களுக்கிடையிலான 2019 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் குழு போட்டிகளின் வரிசையில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.பற்றிமா விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் முதல் சுற்றை 25-16 என்று தன்வசப்படுத்தியது. தொடர்ந்து போராடிய சென்.பற்றிமா விளையாட்டுக் கழகம் 25-19 என தன்வசப்படுத்தி போட்டியை சமநிலைப்படுத்தியது.

வெற்றியை தீர்மானிக்கும் இறுதிச்சுற்றில் தமது முழுத்திறமையினையும் வெளிப்படுத்தி விளையாடிய உதயசூரியன் விளையாட்டுக் கழக வீராங்கனைகள் 25-19 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று 25-16, 19-25, 25-19 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியை தனதாக்கிக்கொண்டனர்.

இப்போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அகிலாபிறேமகுமார் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியின் இறுதிப்போட்டியில் விங்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் விங்ஸ் விளையாட்டுக் கழகம் முதல் சுற்றை 25-19 என்று தன்வசப்படுத்தியது. தொடர்ந்து போராடிய உதயசூரியன் விளையாட்டுக்கழகம் 25-21 என தன்வசப்படுத்தி போட்டியை சமநிலைப்படுத்தியது.

வெற்றியை தீர்மானிக்கும் இறுதிச் சுற்றில் தமது முழுத்திறமையினையும் வெளிப்படுத்தி விளையாடிய விங்ஸ் விளையாட்டுக் கழகம் 25-17 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று 25-19, 21-25, 25-17 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியை தனதாக்கிக் கொண்டனர்.

இப்போட்டியில் விங்ஸ் விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த மதன், தனுசன், கிரிசாந் ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

இக் கழகம் தொடர்ந்தும் இரண்டாது முறையாக வெற்றியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# ஏ.பி.விளையாட்டு கழகத்தின் கிரிக்கெட் போட்டி
# கிண்ணம் வென்று அசத்தியது சென்றலைட்ஸ்




சென்றலைட்ஸ் அணி தொடர்ச்சியாக 27 வெற்றிகள் என்ற சாதனையுடன், யாழ்ப்பாணம் கிரிக்கெட் லீக் வெற்றிக்கிண்ணத்தையும் தனதாக்கியது.

ஏ.பி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் யாழ்ப்பாணம் கிரிக்கெட் லீக் என்னும் இருபது - 20 துடுப்பாட்ட சுற்றுப் போட்டியொன்றை நடத்தியது.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியானது கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இறுதிப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற கொக்குவில் அணியினர் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தனர். அதற்கிணங்க களமிறங்கிய சென்றலைட்ஸ் அணிக்கு, ஆரம்பம் சரியாக அமையவில்லை. கௌதமன் ஓட்டமெதனையும் பெறாமல் வெளியேறினார். அதன் பின்னர் நிசானுடன் ஜோடி சேர்ந்த ஜெனோசன் ஆட்டத்தை கையில் எடுத்தார். ஜெனோசன் 41, நிசாந் 36 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து மத்திய வரிசையில் களமிறங்கிய நிரோஜன் மற்றும் டர்வின் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க முனைந்தனர். நிரோஜன் 47 ஓட்டங்களையும் டர்வின் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். அதன் பின்னர் களம் நுழைந்தவர்கள் அதிக நேரம் தாக்குப் பிடிக்கவில்லை.

சென்றலைட்ஸ் அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் கொக்குவில் சார்பாக பிரதீஸ் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், துஷியந்தன் 58 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் சாம்பவன் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

178 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய கே.சி.சி.சி அணியின் ஆரம்ப வீரர்களான ஜெயரூபன்-பானுஜன் ஜோடி அதிரடி காட்ட முனைந்தது. எனினும் அது நீண்ட நேரம் நிலைக்கவில்லை. ஜெயரூபன் 15 ஓட்டங்களுடன் வெளியேறினார். பானுஜன் 27 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அதன் பின்னர் களமிறங்கியவர்களில் சத்தியன் மற்றும் சாம்பவன் ஆகியோர் போராடினர். எனினும், அவர்களால் அணியை வெற்றி வரையில் அழைத்துச் செல்ல முடியவில்லை. சத்தியன் 50 ஓட்டங்களையும், சாம்பவன் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இதன் பின்னர் கே.சி.சி.சி அணி 19 ஓவர்களில் 139 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்து 38 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக தசோபன் 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் மயூரன் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், டர்வின் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக சென்றலைட்ஸ் அணியின் நிரோஜனும் தொடர் நாயகனாக ஜொனியன்ஸ் அணியின் கவேந்திராவும் தெரிவு செய்யப்பட்டனர்.(க-26)

# 'வீரசூரி' விருதுக்கான விண்ணப்பம் கோரல்

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா சங்கத்தினரால் வழங்கப்பட்டு வரும் வீரசூரி விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினரால் மூன்றாவது வருடமாக வழங்கப்படும் இவ் விருதுக்கு, யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்று உடற் கல்வி ஆசிரியராக இருத்தல், தாம் கற்பிக்கும் பாடசாலை மாணவர்களை மட்டும் தேசிய போட்டியில் வெற்றி பெற செய்திருத்தல், கல்வித் திணைக்களத்தின் பாடசாலைமட்ட போட்டிகளில் மட்டும் பெருவிளையாட்டு, தடகளப்போட்டிகளில் தேசிய வெற்றி பெற்றிருத்தல் வேண்டும், ஒருமுறை வீரசூரி விருது பெற்றவர் விண்ணப்பிக்க முடியாது என்பதுடன் 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் தேசிய ரீதியில் வெற்றி பெற்ற மாணவர்களின் உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும் எனவும் தகுதி உடையவர்கள் வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தலைவர் ப.தர்மகுமாரனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

## வடக்குக்கு தமிழர் ஆளுநராக...

வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பிலேயே மேற்படி தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முதன் முறையாக தமிழர் ஒருவர் வட மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கின்றமை வரவேற்கத்தக்க விடயம். யுத்தத்தின் பின்னர் வட மாகாணம் பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர்கொண்டிருந்தவேளை மக்கள் மனமறியாத இராணுவ அதிகாரிகளையும் தென்னிலங்கை அரசியல்வாதிகளையும் ஆளுநர்களாக நியமித்து வட மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவித்து வந்த அரசாங்கங்கள், முதல் முறையாக சிறந்த கல்விப் புலமையும் இனப்பிரச்சினை தொடர்பில் அரசியல் அறிவும் கொண்டுள்ள கலாநிதி சுரேன் ராகவனை நியமித்துள்ளமை எமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது.

இந்த நியமனத்துக்கு பின்னால் ஏதேனும் அரசியல் உள்நோக்கம் இருக்கின்றதா என்பதையும் அல்லது எந்தளவுக்கு ஜனாதிபதி கலாநிதி சுரேன் ராகவனைச் சுதந்திரமாக செயற்பட அனுமதிப்பார் என்பதையும் நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஆனால், கலாநிதி சுரேன் ராகவனின் அறிவும் புலமையும் அவரைச் சரியான முறையில் ஜனாதிபதிக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ அன்றி மக்களுக்காக சேவை செய்வதற்கு அவரை வழிநடத்தும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை, தமிழர் ஒருவரை வட மாகாணத்தின் ஆளுநராக நியமிப்பதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் அபிவிருத்தி அபிலாஷைகளை நாம் பூர்த்திசெய்ய முடியும் என்று பொருள்கொள்ளல் ஆகாது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் அரசாங்கத்துக்கு உண்மையான அக்கறை இருக்குமானால், இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வினை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

பௌத்த சமயம் பற்றி ஆராய்ச்சி செய்த கலாநிதி சுரேன் சிங்கள மொழி வழக்கிற்கு வர பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பௌத்தம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதையும் அவ்வாறு பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட போது சைவமதப் பாரம்பரியம் வடக்கு கிழக்கில் ஏற்கெனவே நிலைபெற்றிருந்தது என்பதையும் சைவத்தில் திளைத்திருந்த திராவிட மக்களே பௌத்த சமயத்திற்கு மாறினார்கள் என்பதையும் அவர்களின் பௌத்த எச்சங்களே இன்று வட கிழக்கில் காணப்படுகின்றன என்பதையும் பின்னர் சைவமத பக்திப்பிரவாகம் தென்னிந்தியாவில் கொடிகட்டிப் பறந்த போது எம் மக்கள் மீளவும் சைவமதத்தினுள் உள்ளீர்க்கப்பட்டார்கள் என்பதையும் அறிந்தே இருப்பார்.

எனவே வடக்கு கிழக்கு மக்களால் அப்போது கைவிடப்பட்ட பௌத்தம் இன்று எமது அரசியல் யாப்பின் ஊடாக மற்றைய மதங்களுக்கு மேலாக முதல் நிலையளித்து திணிக்கப்படுவது மத மாற்றம் செய்வதற்கு ஒப்பாகும் என்பதையும் அவர் அறிந்திருப்பார் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

புதிய ஆளுநரை வரவேற்கும் அதே நேரம் எமது புதிய கட்சி அவருக்கு சகல ஒத்துழைப்புக்களையும் நல்க ஆயத்தமாக இருக்கின்றது என்பதையும் நான் தெரிவித்து கலாநிதி ராகவனின் பதவிக்காலம் மக்களின் ஏகோபித்த மதிப்பையும் ஆதரவையும் பெற வேண்டும் என மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-9)

## இராணுவம் மீதான...

கூடியது. இதன்போது ஆரம்ப நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னர் வெளிவிவகார அமைச்சரால் முன்வைக்கப்பட்ட இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ் வரும் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இராஜதந்திர பதவிகளுக்கு தகுதியற்றவர்கள் நியமிக்கப்பட்டிருப்பது தொடர்பில் எங்களுக்கு பிரச்சினை இருக்கின்றது. இதனால் நாட்டின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது.

அதனால் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட, அரச சேவையில் அனுபவம் வாய்ந்த தகுதியானவர்கள் எதிர்காலத்தில் இராஜதந்திர தூதுவர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## அரசியலமைப்பு...

தெரிவிக்கப்படுகிறது.

சகல விடயங்களும் திட்டமிட்டவாறு, இடம்பெறுமானால், அன்றையதினமே நிபுணர்களின் வரைபு அறிக்கை வெளியிடப்படும் சாத்தியம் உள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

அதில் சிங்களத்தில் 'ஏக்கிய ராஜ்ஜிய' என்றும் தமிழில் 'ஒருமித்த நாடு' என்றும் இடம்பெறுமென்றும் கூறப்படுகிறது.

அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பில் கடந்த காலங்களில் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் புதிய அரசியலமைப்பை கொண்டுவர வேண்டும் என்பதில் தமிழ் தரப்புக்கள் உறுதியாக இருந்தன.

எனினும், இடையில் ஏற்பட்ட அரசியல் சர்ச்சைகளால் அப்பணி பிற்போடப்பட்டது.

எனினும், அரசியல் யாப்பு உருவாக்கத்தை எவ்வகையிலும் பிற்போடக்கூடாதென்பதில் தமிழ் தரப்புகள் உறுதியாக உள்ளன.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையும் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியல் யாப்பின் ஊடாக, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படுமென அரசாங்கமும் குறிப்பிட்டிருந்த நிலையில், அது தொடர்பான வரைபு நகல் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமென கடந்த வருட இறுதியில் பாராளுமன்றில் சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இராணுவத்தின்...

தாமதமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள இடரால் இராணுவத்தினரின் காணிவிடுவிப்பு தாமதமானதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில் இராணுவத்தினரால் விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஆயிரத்து 99 ஏக்கர் காணிகள் வரும் 19ஆம் திகதி உரிய திணைக்களங்களிடம் கையளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வடக்கின் ஆளுநர்...

கொழும்பிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று பிற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றார்.

வடக்கிற்கான ஆளுநராக நேற்று முன்தினம் நியமனக் கடிதத்தினை பெற்றுக் கொண்ட கலாநிதி சுரேன் ராக வனின் முதலாவது உத்தியோக பூர்வ சந்திப்பாக இது அமைந்திருந்தது என ஆளுநர் அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது வடக்கு மாகாணத்தில் உள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் முதற்கட்டமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கேட்டறிந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வடக்கு மாகாண ஆளுநராக நேற்று முன்தினம் திங்கட்கிழமை பதவியேற்ற கலாநிதி சுரேன் ராகவன் இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகிறார். (ம-3)

## இளைஞர் அரசியலில் ஈடுபட...

எழுப்பியது.

யாழ்ப்பாண மாநகர சபை அமர்வில் தாம் பங்கேற்க மேன்முறையீட்டு நீதிமன்றால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவுக்கு ஆட்சேபனை தெரிவித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணையின் போதே உயர் நீதிமன்ற அமர்வு இந்தக் கேள்வியை எழுப்பியது.

மேன்முறையீட்டு மனுதாரர் என்னுடன் இல்லை. அவர் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர். அதனால் தான் இந்த வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னெடுக்கின்றோம்என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உயர் நீதிமன்றுக்கு பதிலுரைத்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றில் இடம்பெறும் மேன்முறையீட்டு மனுதாரருக்கு எதிரான மனுவின் விசாரணைகளைத் துரிதப்படுத்தி இறுதிக் கட்டளையை வழங்க உத்தரவிட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் மேன்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்யாது ஒத்திவைத்தது.

யாழ்ப்பாண மாநகர சபை அமர்வில் தாம் பங்கேற்க மேன்முறையீட்டு நீதிமன்றால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவுக்கு ஆட்சேபனை தெரிவித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் பிரியந்த ஜெயவர்த்தன, எல்.டி.பி டெகிதெனிய, முர்டு பெர்னான்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்த்தனவும் பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் அமர்வில் முன்னிலையானார்கள்.

இடைக்காலக்கட்டளையை ஆட்சேபிக்கும் தங்களின் மேன்முறையீட்டு மனு மீதான விவாதம் இடம்பெற்று அதன் மீதான கட்டளையாக்குவதற்கு காலதாமதம் ஏற்படலாம். அதனால் மேன்முறையீட்டு நீதிமன்றின் விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டு காலம் வீணடிக்கப்படும்.

மேன்முறையீட்டு நீதிமன்றில் தங்களுக்கு எதிரான மனு மீதான இறுதிக் கட்டளை வழங்கப்பட்டு அது தொடர்பில் ஆட்சேபனை எழுந்தால் மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்து முன்னெடுக்க முடியாதா? என்று உயர் நீதிமன்ற அமர்வு மேன்முறையீட்டாளரிடம் கேள்வி எழுப்பியது.

மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீது வரும் 23ஆம் திகதி விவாதம் இடம்பெறுவதற்கு திகதியிடப்பட்டுள்ளது. அதனால் அதன் மீதான இறுதிக் கட்டளை வழங்கப்படும் வரை மேன்முறையீட்டு மனுவை நிறுத்திவைக்க இணக்கம் என மனுதாரர் சார்பில் மன்றுரைக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுதாரருக்கு எதிரான மனு மீது வரும்23ஆம்திகதியுடன்விவாதத்தை நிறைவு செய்து துரிதமாக இறுதிக் கட்டளையை வழங்க உத்தரவிட்ட உயர் நீதிமன்றம் மேன்முறையீட்டு மனுவை வரும் மார்ச் 5ஆம் வரை ஒத்திவைத்தது. (ம-3)

## இந்திய மீனவர்...

விசாரணைகளின் பின்னர் இவர்களை யாழ் கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர்.

பின்னர் இவர்கள் ஊர்காவற்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் 4 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## எலிக்காய்ச்...

னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது உடல் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டு உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (ம-9)

## இராணுவ கனரக...

பளையிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கர வண்டியும் கட்டைக்காடு இராணுவ முகாமிலிருந்து இயக்கச்சி 552 படைப்பிரிவு முதாமுக்கு டீசல் அடிப்பதற்காக பயணித்த இராணுவத்தின் ட்ரக் வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ் விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த மூவரும் உயிரிழந்துள்ளனர்.

இதில் பளையை சோர்ந்தவர்களான பெருமாள் ஜெயக்குமார் (வயது 36), குணரத்தினம் குகதாஸ் (வயது 31) மற்றும் யாழ்ப்பாணம் சுழிபுரத்தை சேர்ந்த சிவபாலன் ரதீஸ்வரன் (வயது 26) ஆகியோரே பலியானவர்களாவர்.

உயிரிழந்த மூவரின் சடலங்களும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இந்த விபத்துத்தொடர்பான விசாரணைகளை பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். உயிரிழந்த குகதாஸ் அண்மையில் தான் திருமணம் முடித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-60.312.315)

## மனித உரிமை...

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க் கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் அமெரிக்காவுக்கு பயந்தோ சர்வதேசத்துக்கு பயந்தோ வெளிநாட்டுக் கொள்கைகளை தயாரிக்கவில்லை. நாம் 30 வருடங்கள் யுத்தத்தினால் அவதியுற்றோம். இன்று மனித உரிமை தொடர்பில் பேசும் எந்தவொரு நாடும் அன்று எமக்கு உதவவில்லை.

உலகிலேயே பயங்கரமான அமைப்புடன் தான் நாம் போரிட்டோம். இவ்வாறான அமைப்புடன் போரிடும்போது, மனித உரிமை மீறப்படும். மனித உரிமை மீறப்படாமல், இவ்வாறான ஒரு பயங்கரவாத அமைப்புடன் எம்மால் போரிட முடியாது என்பது அனைவருக்கும் தெரியும்.

ஆனால், மனித உரிமைகள் தொடர்பில் அதிகமாகப் பேசும் அரசாங்கம், உலகிலேயே அதிகமாக மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் அமெரிக்காவுடன் தான் இணைந்து செயற்படுகிறது. என கூறினார். (ம-3)

### கொவிசெத

திகதி 2019.01.08
சீட்டிழுப்பு இலக்கம் 1998
ஆங்கில எழுத்து H
வெல்லப்பட்ட இலக்கங்கள் 30 36 58 80
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2019/01/08
சீட்டிழுப்பு இலக்கம் 3829
ஆங்கில எழுத்து S
வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 8 3 1 2 7
தேசிய லொத்தர் சபை

### நீரோகா

திகதி 2019/01/08
சீட்டிழுப்பு இலக்கம் 496
லக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 20 23 33 49 62
தேசிய லொத்தர் சபை

### செவன

திகதி 2019/01/08
சீட்டிழுப்பு இலக்கம் 151
ஆங்கில எழுத்து O
வெல்லப்பட்ட இலக்கங்கள் 08 20 46 54
தேசிய லொத்தர் சபை

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
0768226240
●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-5046)

Techno World
லெவிங்டன் சந்தி பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
A/L
தொழில்நுட்ப பிரிவு
A/L 2021
புதிய வகுப்புக்கள்
திங்கள் – வெள்ளி, சனி, ஞாயிறு
காலை : 8.00 – 11.00
077 017 5346
(C-5087)

A/L கணக்கீடு - பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் A/L 2021

| கந்தர்மடம் | கொழும்புத்துறை |
|---|---|
| Tue, Fri 5.00 - 7.00 pm | Sat, Sun 4.00 - 5.00 pm |

யாழ்.நகரின் கடந்த கால முன்னணி பெறுபேறுகள் Rank 01,06 உட்பட.
Accounting Ⓐ-30, Ⓑ- 25
Mr.BALAKAJAN (M.Com) 077 216 8884

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
A/L 2019
DAY CLASS
கணக்கீடு
S.தவா
ஆரம்பம் : 10.01.2019- வியாழன் 2 மணி

புதிய பிரிவுகள் ஆரம்பம் 2019 யூலை பரீட்சைக்கான
aat (Sri Lanka)
(AA1, AA2, AA3)
Qualification :- G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
0212223382 / 0212229149
(C-5067)

வேலைவாய்ப்பு
- அச்சக வேலை தெரிந்தவர்கள் பழக விரும்புபவர்கள் தேவை. (பெண்கள்)
- பொது இடங்களில் புத்தக வியாபாரம் செய்யக்கூடியவர்கள் தேவை (ஆண்கள்)

வேலை இடம் : நல்லூர் யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 217 4741

வடக்கு... வனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்ததை அடுத்து யாழில் உள்ள உத்தியோக பூர்வ அலுவலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

VIJAENTHIRAN MATHEMATICS CENTER
(கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி)
இணைந்த கணிதம் :- குழுவகுப்புக்கள்
ஆசிரியர்: T. விஜேந்திரன் (B.Sc. Dip in Ed)
ஆரம்பம்: 10.01.2019 வியாழன்
விசேட பிரிவு Day 2019 பிற்பகல் 2.15 - 4.00
2021 பிற்பகல் 4.15 - 5.15
தொடர்பு: 0774413087
SUBRA (சித்தன்கேணி)
ஆரம்பம்: 12.01.2019 (சனிக்கிழமை)
2021 பி.ப 4.00 - 6.00
Day 2019 பி.ப 6.15 - 8.00

A/L மாணவர்களே!
பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தியின்மையா!
City & Guilds
WORLD CLASS ENGINEERING PROGRAMME
(Leading To BEng / BSc Hons)
DIPLOMA / ADVANCED DIPLOMA IN
- Civil Engineering
- Quantity Surveying
- Electrical and Electronic Engineering
- Tele Communication System (Radio / Software Engineering)

(பயிற்சி முடிவில் வேலைவாய்ப்புடன் கூடிய Training வழங்கப்படும்)
யாழ் மாணவர்களே! உங்கள் பயிற்சிக்கட்டணம் முற்றிலும் இலவசம் (பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும்)
நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள் (தேர்வு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது)
விண்ணப்ப படிவங்களை யாழ்/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக விபரங்களுக்கு :
விண்ணப்பங்கள் முடிவுத் திகதி : 12.01.2019
Prof. K. சந்திரபோஸ்
Chairman / Managing Director
APSS Internaional
077 386 7695
அதிபர். இந்து மகா வித்தியாலயம் கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
077 352 7506

தொழினுட்பப் பிரிவு
விஸ்டம்
A/L 2021
2019 DAY
பொறியியற் தொழினுட்பவியல்: K.ரவிக்குமார், P.சண்முகதாசன், R.சிவரூபன், R.நிரூஜன், P.கிருபாகரன், P.கணேஸ்
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்: A.அரவிந்தன், P.விமலநாதன், S.மயூரதாசன், R.நிரூஜன், R.S மயூரன், T.ஆதவன்
உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்: M.விஸ்ணுதேவன், P.நிரோஜனன், P.S ஷாணஸ்
தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்: S.மயூரதாசன், T.ஆதவன்
விவசாய விஞ்ஞானம்: M.விஸ்ணுதேவன், P.S ஷாணஸ்
புவியியல்: S.ஸ்ரீகிருஸ்ணா, T.ஹென்றிறீகன்
கணிதம்: S.தஜீதரன்
ஊடகக்கல்வி: S.கோணேசலிங்கம்
சித்திரம்: S.கருணாகரன்
077 248 7774
(C-5040)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர்
## வல்லிபுரம் அழகதுரை

(ஓய்வுபெற்ற யாழ்.பல்கலைக்கழக பதவிநிலை உத்தியோகத்தர் - எழுதுவினைஞர் சேவை)

அன்பெனும் அமுதூட்டி பாசத்தால் பாதுகாத்து
பண்பினால் வழிகாட்டி எம் வாழ்க்கைப் பாதைக்கு
ஒளிவிளக்காய் திகழ்ந்த எமது அன்புத் தெய்வமே!
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டானாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டகலாது.



கடந்த 21.12.2017 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் வல்லிபுரம் அழகதுரை அவர்களின் ஓராண்டு நினைவு தினமான இன்றைய நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு 02.09.1948
உதிர்வு 21.12.2017

(6974)

கேணியடி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.
- குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.